விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

நாவாந்துறை கிளை நூலகம்

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆடி 27 சனிக்கிழமை (12.08.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 236

## புலம்பெயர் தமிழர்களால்
# எனது சுதந்திரம் பாதிப்படைகிறது

### முன்னாள் ஜனாதிபதி மகிந்த ஆதங்கம்



(கொழும்பு)

மூன்று தசாப்த காலப் போரை முடிவுக்குக் கொண்டுவந்துள்ளதன் மூலம் அனைவரும் சுதந்திரத்தை அனுபவிக்கின்றனர். ஆனால் என்னால் அதனை அனுபவிக்க முடியவில்லை என்று ஆதங்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, புலம்பெயர் தமிழர்களால் தான் பெரிதும் அசௌகரியப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## கோத்தாவுக்கு எதிரான வழக்கு மீள விசாரணைக்கு

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உட்பட 8 பேருக்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை 23☛

## சர்வதேச வர்த்தக கண்காட்சி ஆரம்பம்

(கொழும்பு)

நாட்டின்பெருந்தோட்டத்தொழிற்றுறையின் மேம்பாட்டினை நோக்காகக் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சீ.ஆர்.டீ தேயிலை, இறப்பர், தென்னை சர்வதேச வர்த்தகக் கண்காட்சி ஜனாதிபதி 23☛

## வவுனியாவில் வாளுடன் குடும்பஸ்தர் கைது!

(குருமன்காடு)

வவுனியா, தேக்கவத்தை பகுதியில் வாளுடன் காணப்பட்ட ஒருவர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும் குறித்த நபர் யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் ஆவா குழுவுடன் தொடர்பு பட்டவரா? என்ற 23☛

### காப்புறுதிப் பணம் பெறுவதற்காக
## 89 பவுண் நகைகள் திருட்டு என திட்டமிட்டு பொய் முறைப்பாடு
### பொலிஸ் இறுதி விசாரணை அறிக்கையில் தகவல்

(சாவகச்சேரி)

சுமார் 51 இலட்சம் பெறுமதியான நகைகள் யாழில் கொள்ளையிடப்பட்டதாக பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்து அதன் பிரதியை கனடா நாட்டில் ஒப்படைத்து பெருந்தொகை காப்புறுதிப் பணத்தினை பெற்றுக்கொள்ளவே 89 பவுண் நகைகள் கொள்ளையென 23☛

### துப்பாக்கிச்சூடு; வன்முறை
## கைதான 35 பேரையும் மறியலில் வைக்க உத்தரவு

(கரணவாய்)

கடற்படையினர் மீது தாக்குதல் மேற்கொண்டமை, வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டமை தொடர்பில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 35 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி திருமதி நளினி சுபாகரன் நேற்று உத்தரவிட்டார். கடந்த ஜூலை மாதம் 9ஆம் திகதி வட 23☛

### வித்தியா கொலை; இளைஞர்கள் கடத்தல்
## விசாரணை அதிகாரியை கொல்ல சதித்திட்டம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். புங்குடுதீவு பாடசாலை மாணவி சிவலோகநாதன் வித்தியா படு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டிருந்த குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணை அதிகாரி நிசாந்த சில்வாவை கொலை செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நீதிமன்றத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பு கோட்டை நீதவான் லங்கா 24☛

## 30 கிலோ கஞ்சாவுடன் மன்னாரில் மூவர் கைது

(எழுதூர்)

மன்னார் எழுதூர் சந்தியில் வைத்து 30 கிலோ கிராம் நிறையுடைய கஞ்சா போதைப்பொருளுடன் 3 சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடற்படையினருக்கு கிடைக்கப்பெற்ற புலனாய்வுத் தகவல்களுக்கமைய கடற்படையினரும் கொழும்பு விஷேட பொலிஸ் பிரிவினரும் இணைந்து நேற்று மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது மன்னார் எழுதூர் சந்தியில் வைத்து 30 கிலோ கிராம் கஞ்சாவுடன் குறித்த 3 சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட 30 கிலோ கிராம் கேரள கஞ்சாவை விற் 23☛

## சி.சி.ரிவி கமராவில் சிக்கிய திருட்டு!

(குருமன்காடு)

வவுனியா, குருமன்காடு சந்திப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பொலிஸார் ஒருவரின் மோட்டார் சைக்கிள் திருட்டுப் போயுள்ளது.

எனினும் குறித்த மோட்டார் சைக்கிளை நபரொருவர் திருடிக் கொண்டு செல்லும் காட்சி சி.சி.ரிவி கண்காணிப்புக் கமராவில் 24☛

## விபத்தில் சிக்கிய குழந்தை மரணம்

(கிளிநொச்சி)

இரு துவிச்சக்கரவண்டிகள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் காயமடைந்த 3 1/2 வயது பெண் குழந்தை யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார். 23☛


## நோர்வே தூதுவர் சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்கான நோர்வே தூதுவர் தோர்ப்ஜோன் கெஸ்ராட்செதர்க்கும் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் இடையில் நேற்று சந்திப்பு ஒன்று 23☛

## புதிதாக புத்தர் சிலை



(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை துறைமுகம் அருகாமையில் அமைந்துள்ள இந்து ஆலயத்திற்கு அருகில் புதிதாக புத்தருடைய சிலை ஒன்றை இராணுவத்தினர் 23☛

## கிணற்றில் மூழ்கி சிறுவர்கள் பலி

(திருகோணமலை)

திருகோணமலை - ஆனந்தபுரி பகுதியில், கிணற்று நீரில் மூழ்கி 15 மற்றும் 16 வயதுடைய சிறுவர்கள் இருவர், பலியாகியுள்ளதாக, உப்புவெளி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை, தீர்வை நகரைச் சேர்ந்த எம்.ஹேமநாதன் (வயது 16) மற்றும் ஆனந்த 23☛

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரவியின் பதவி மனைவிக்கு?

நிதி மோசடி மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு முகம்கொடுத்து நிதியமைச்சு பதவியை துறந்த முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் அமைச்சு பதவி அவரின் மனைவி மெலா கருணாநாயக்கவுக்கு வழங்க ஐ.தே.க தரப்பில் ஆலோசனை நடைபெற்று வருகிறது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நாடாளுமன்றத்தில் உறுப்பினராக இல்லாத மெலா கருணாநாயக்கவை தேசிய பட்டியல் மூலம் நாடாளுமன்றத்துக் கொண்டுவர தேசியபட்டியலின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தயாராகவுள்ளதாக தெரியவருகிறது.

அது மட்டுமல்லாது முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க ஐக்கிய தேசிய கட்சிக்கு பாரிய சேவை செய்துள்ளதால் அவருடைய மனைவிக்கு தேசிய பட்டியலில் இடம்கொடுக்க ஐ.தே.கவைச் சேர்ந்த மற்றொரு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினரும் தயாராகவுள்ளதாகவும் கட்சித் தகவல்கள் குறிப்பிடுகின்றன. (செ)

# பிணை முறி மோசடியில் கப்ராலுக்கும் தொடர்பு!

## முஜிபுர் ரஹ்மான் எம்.பி கருத்து

(கொழும்பு)

மத்திய வங்கியின் முறிகள் விநியோக மோசடியில், மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கும் தொடர்புள்ளதென்றும், முறிகள் விநியோகம் தொடர்பில் விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டு அவரிடம் விசாரணை நடத்த வேண்டுமென்றும் ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, பர்பச்சுவல் ட்ரஸரீஸ் நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளரான சிரோமி விக்கிரமசிங்கவிடமும் விசாரணை நடத்த வேண்டுமென முஜிபுர் ரஹ்மான் கேட்டுக் கொண்டார்.

ஐ.தே.கவின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான பத்திக பத்திரணவால், நேற்றைய தினம் நாடாளுமன்றில் கொண்டுவரப்பட்ட தனிநபர் பிரேரணை மீதான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அநாமதேய பெண் வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கவிடம் விசாரணை நடத்தப்பட்டதென இதன்போது குறிப்பிட்ட முஜிபுர் ரஹ்மான், இந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்ட ஏனையோர் மீதும் விசாரணை நடத்தப்பட்டு உண்மையான குற்றவாளிகள் கண்டறியப்பட வேண்டுமென வலியுறுத்தினார். (செ-11)

# 'நீதம்' நூல் வெளியீடு இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக சட்ட மாணவர் சங்கத்தின் வருடாந்த நீதம் நூல் வெளியீட்டு விழா இன்று காலை 10.30 மணிக்கு யாழ். கைலாசபதி அரங்கில் நடைபெறும்.

சட்ட மாணவ சங்கத் தலைவர் அ.றொமல்சன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் கலந்து கொள்ளவுள்ளார்.

இதில் சட்டத்துறை சார்ந்த சகல பேராளர்களையும் கலந்து சிறப்பிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (செ)

# மரண அறிவித்தல்கள்



## குணரத்தினம் இராசரத்தினம்

பிறப்பு: 31.03.1954 - இறப்பு: 10.08.2017

குடமியன் வரணியை பிறப்பிடமாகவும், 2-ம் கட்டை, முரசுமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் ஜெயா காட்வெயார் உரிமையாளர் குணரத்தினம் இராசரத்தினம் அவர்கள் கடந்த (10.08.2017) வியாழக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் குணரத்தினம் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், மயில்வாகனம் - யானகியம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும், வசந்தநாயகி அவர்களின் அன்புக் கணவரும், நித்தியா (லண்டன்), நிஷாந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயப்பிரகாஸ் (லண்டன்), சபேசன் (S.N.P Traders உரிமையாளர்) ஆகியோரின் மாமனாரும், பிரஸ்ணவி, சக்சவி ஆகியோரின் பாசமிகு பேரனும், நவரட்ணம், செல்வரட்ணம், அமரர் ஜெயக்குமாரி, இராசகுமாரி, அழகரத்தினம், விஜயரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் (S.N.P Traders, 2nd mile post, Paranthan) எனும் முகவரியில் நாளை (13.08.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் இறுதி ஊர்வலம் எடுத்துச் செல்லப்பட்டு கோரக்கன்கட்டு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (சி-9315)

தகவல்: குடும்பத்தினர்.

# பெண்ணுக்கு தீக்காயங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் முகப்பு பகுதியில் ஏற்பட்ட விபத்தொன்றில் பெண் ஒருவர் தீக்காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

ஆலயத்தின் முன்பாக கற்பூரம் கொளுத்தப்படும் பகுதியில் கற்பூரம் கொளுத்த முற்பட்டபோதே அவர் தீக்குள் தவறி விழுந்து காயமடைய நேரிட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று இரவு 7.30 மணியளவில் நடந்துள்ளது.

இதில் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த தயாபரன் சாந்திதேவி (வயது-51) என்ற குடும்பப் பெண்ணே தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (செ-15-30)


## பிரத்தியேக வகுப்பு

தரம் 6 - O/L வரை கணிதமும் தரம் 10,11 இற்கான வணிகக்கல்வி, கணக்கீடும் பல வருடங்கள் அனுபவம்மிக்க ஆசிரியரால் தனியாகவோ, குழுவாகவோ வீடுகளிற்கு வந்து கற்பிக்கப்படும். (சி-9306)

தொடர்பு: 0775893298


## GROUP CLASS

English தரம் 6 - O/L

3rd Term

Syllabus + Tute + Paper Classes

(110) Tutor : P.N.சுதர்சன் T.P: 0773144527

## தங்கவேல் றங்கரூபன் (பைரவன்)

யாழ். வடமராட்சி துன்னாலையைப் பிறப்பிடமாகவும், 33 Rose Bank Avenue, Sudbury hill, Harrow HAO 2TL, U.K யினை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கவேல் றங்கரூபன் (பைரவன்) அவர்கள் கடந்த (28.07.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கவேல் - தங்கநேசம் தம்பதிகளின் அன்பு மகனும், பஞ்சலட்சுமி, காலஞ்சென்ற தயானினி ஆகியோரின் அன்புக் கணவரும், துவாரகா, ரமணன், ரதீசா ஆகியோரின் அன்புத் தந்தையும், தங்கரூபி, வதனரூபன், வதனரூபி, ஞானரூபி, ஞானரூபன், காலஞ்சென்ற ராதாமோகன், மோகனரூபி ஆகியோரின் அன்புச் சகோதரனும், அபிராமி, அருள்நிலா, மோகனரூபன், அஸ்வினி, ஜெயவண்ணன், ஜெனனி, ஜெனித்தா, யாதவன், சுயந்தன், ஜஸ்வினி, சாயித்தா, சாரங்கன், ராகவன், ராகவி, கோகுலன் ஆகியோரின் அன்பு மூத்த மாமாவும், மாதுமை, உமைபாலன், வைதேகி, ராகினி, மயூரினி, தமிழினி, ரிஷிபன், யாழினி ஆகியோரின் ஆசைப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.08.2017) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கும் 4 மணிக்கும் இடையில் Hendon Cemetery Crematorium, Holders Hill Rd, London, NW7 1NB, U.K இல் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு : பஞ்சலட்சுமி (மனைவி)

இந்திரன் அம்மன் கோயிலடி, துன்னாலை கரவெட்டி. (சி-9314)

வதனரூபன்: 0212263...

ஞானரூபன்: +442089301794

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

## அமரர் தேவராசா பூமா

தோற்றம்: 31.07.1959 - மறைவு: 13.07.2017



ஓ உருண்டது உமைப்பிரிந்து
நாட்கள் முப்பத்தொன்று
வாடி வதங்குகின்றோம்
உமை எண்ணி நிதம்
நாட்களென்ன ஆயிரம்
ஆண்டுகள் சென்றாலும்
எம் நெஞ்சமதில் உங்கள்
நினைவுகள் பசுமையாய்
நிலைத்திருக்கும்!!

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அல்லையம்பதி, துன்னாலை. (சி-9312)

தகவல்: திரு.ந.சிறீஸ்குமார் குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் கலாசார பேரழிவைத் தடுக்க இளையோர் முன்வர வேண்டும்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் அழைப்பு



(கொழும்பு)

அரசினால் திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்பட்டுவரும் தமிழ் கலாசார பேரழிவைத் தடுக்க இளையோர் முன்வர வேண்டும் எனத் தெரிவித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், எமது இனத்தையும் மொழியையும் பாதுகாப்பது எம் ஒவ்வொருவருடைய கடமை எனவும் தெரிவித்துள்ளார்.

"தமிழ் எங்கள் மொழி, சைவம் எங்கள் வழி" எனும் தொனிப் பொருளில் உலக சைவ இளைஞர் மாநாடு நேற்றையதினம் யாழ். இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் ஆரம்பமானது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது மொழியையும் மதத்தையும் வளர்ப்பதற்கு இன்றைய காலகட்டத்தில் இளைஞர்களின் சர்வதேச மாநாடு தேவையாகவுள்ளது. எமது தமிழ் இனத்தை அழிப்பதற்கு பல்வேறுபட்ட யுக்திகள் கையாளப்படுகின்றன. இலங்கையைப் பொறுத்தவரையில் தமிழ் மக்களாகிய நாம் எமது உரிமைகளுக்காக தமிழ்மொழிப் பண்பாட்டை பாதுகாப்பதற்காக நாம் நீண்ட காலமாக போராட வேண்டிய துர்ப்பாக்கிய சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளோம்.

அரசு தமிழ் மக்களின் பண்பாடு, கலாசாரங்களை அழித்தொழிப்பதற்கான செயற்பாடுகளையும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. இலங்கைக்கு விஜயன் வந்த காலப்பகுதியில் 5 ஈஸ்வரங்கள் இருந்ததாக கூறப்படுகிறது. தற்போது அந்த ஈஸ்வரங்களுக்கு என்ன நடைபெறுகின்றன என்பது தெரியாது. அவை அழிவடையும் நிலை தொடர்ந்து கொண்டு இருக்கிறது.

ஒரு மதத்தை காப்பாற்றுவது என்பது வேறு, ஏனைய மதங்களை அழித்து ஒரு மதத்தை காப்பாற்றுவது என்பது வேறு. நடந்து முடிந்த யுத்தத்தில் பல நூற்றுக்கணக்கான ஆலயம் அழிக்கப்பட்டது. இன்று அந்த ஆலயங்கள் மீண்டும் புனருத்தாரணம் செய்து வரும் வேளையில் அரசு இராணுவத்தின் அதாவது முப்படையின் துணையுடன் பௌத்த மக்கள் இல்லாத இடத்தில் பௌத்த ஆலயம் அமைக்கப்படுகிறது.

அண்மையில் நாவற்குழி பகுதியில் ஒரு பௌத்த விகாரை அமைக்க இராணுவம் அடிக்கல் நாட்டியது. பௌத்த மக்கள் இல்லாத பிரதேசங்களில் பௌத்தத்தை திணிப்பது என்பது கலாசார பிரள்வுகளை ஏற்படுத்தும். அது தமிழ் மக்களின் பண்பாடு, கலாசாரம் என்பவற்றை சிதைக்கும். இவ்வாறான நடவடிக்கைகள் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல வடக்கு- கிழக்கு எங்கும் தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது. வடக்கு- கிழக்கு முழுமையான சிவ பூமியாக இருந்தாலும் கூட தமிழ்மக்கள் வாழும் பிரதேசம் என்பது எவ்வாறு திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருகிறது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

இந்த விடயங்களை பற்றி நாம் பேசும். போது நாம் இனவாதிகளாக சித்திரிக்கப்படுகிறோம். நாம் எந்த இனத்துக்கும் மதத்துக்கும் எதிரானவர்கள் இல்லை. அவரவருக்கு தமது மதம், கலாசாரத்தைப் பின்பற்றுவதற்கு உரித்துள்ளது. ஆனால் அந்த உரித்தை பெரும்பான்மை பலம் கொண்டு நசுக்கினால் அந்த மக்கள் அதை எதிர்த்து போராட பழக வேண்டியுள்ளது.

ஆகவே எமது சமயம், கலாசாரம், பண்பாட்டை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இன்றைய இளையோர் கைகளில் தான் உள்ளது.

கலாசாரம், பண்பாடு என்பது எமது மொழி, சமயம் வாழ்க்கை முறையுடன் ஒன்றிணைந்ததாக காணப்படுகிறது. இவை அழிக்கப்படுமாக இருந்தால் எமது இனம் மொழி அழிக்கப்படும். இது ஒரு கலாசார பேரழிவு ஆகும். இதை திட்டமிட்ட வகையில் அரசு செய்கிறது. இவற்றுக்கு எதிராக போராடவும் எமது கலாசாரத்தை நிலை நிறுத்தும் முழுப்பொறுப்பு இளைஞர் கைகளில் உள்ளது. அரசியல்வாதிகள் நிறைவேற்றுவார்கள் என்பதை எதிர்பார்க்காமல் எமது இனத்தையும் மொழியையும் பாதுகாக்க இளையோர் முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## பைசர் முஸ்தபாவிற்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்படும் - ஐ.தே.க



(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்கள், மாகாணசபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபாவிற்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்றப்படும் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி இதனைத் தெரிவித்துள்ளார். வாய்மொழி மூல கேள்விகளுக்கு அமைச்சர் முஸ்தபா பதிலளிக்கத் தவறியுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள் ளார்.

தொடர்ச்சியாக தமது கேள்விகளுக்கு பதிலளிக்காது புறக்கணித்து வருவதாகவும் அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு பின்வரிசை உறுப்பினர்கள் ஆதரவளிப்பார்கள் எனவும் சமிந்த விஜேசிறி தெரிவித்தார். (இ-7)

## நான் இந்த அரசாங்கத்தில் ஏமாற்றத்துடனே உள்ளேன்

### அமைச்சர் சுசில் விரக்தி

நான் இந்த அரசாங்கத்தில் ஏமாற்றத்துடன் தான் உள்ளேன், நல்லாட்சி அரசாங்கத்தில் தொடர்ந்தும் இருப்பதா? இல்லையா? என்பது குறித்து விரைவாக தீர்மானம் எடுக்கவுள்ளேன் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

தான் சொல்லும் கருத்துக்களைக் கூட ஏற்றுக் கொள்ளாத ஒரு நிலைமை கட்சிக்குள் உருவாகியுள்ளது. நல்லாட்சி அரசாங்கத்துக்குள் பல்வேறு கருத்து முரண்பாடுகள் உள்ளதாகவும் அவை முகாமை செய்யப்பட வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டிற்குள் ஜனநாயகத்தை நிலைநாட்டுவது அரசாங்கத்தின் பொறுப்பாகும். இந்த அரசாங்கம் நாட்டு மக்களின் பிரபல்யத் தன்மையையும் இழந்துள்ளது. இதனை எதிர்வரும் தேர்தலின் போது காணலாம்.

அரச சொத்துக்களை விற்பனை செய்வது என்ற கொள்கையுடன் இந்த அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. அரச நிறுவனமொன்றை இலாபம் உழைக்கச் செய்ய தேவையான அனைத்து முயற்சிகளையும் எடுத்து விட்டு இறுதித்தீர்வாக அதனை குத்தகைக்கு கொடுப்பதை தீர்மானிக்கலாம். ஆனால், இந்த அரசாங்கம் எடுத்த எடுப்பிலேயே விற்பனை செய்யவே பார்க்கின்றது.

நான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக் காரியாலயத்திற்குள் இருந்து இதனைக் கூறுகின்றேன். நாம் அரச சொத்துக்களை விற்பனை செய்தல் என்ற கொள்கைக்கு எதிரானவர்கள். இன்று கட்சியிலுள்ள சிலர் கட்சியின் கொள்கை தெரியாது செயற்பட்டு வருகின்றனர். தனக்கு இவற்றைப் பார்த்துக் கொண்டு இருக்க முடியாது எனவும், விரைவில் தீர்மானம் ஒன்றை எடுக்கவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சமுர்த்தி நிவாரணம் குறைக்கப்படாது ஜனாதிபதி மைத்திரி உறுதியளிப்பு



சமுர்த்தி நிவாரணம் குறைக்கப்படாது என, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மக்களுக்கு உறுதியளித்துள்ளார்.

எம்பிலிப்பிட்டியவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சமுர்த்தி நிவாரணம் குறைக்கப்பட்டு வருவதாகக் குற்றஞ்சாட்டி, ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் எம்.பிகள் கறுப்புப் பட்டியணிந்து பதாகைகளை ஏந்தியவாறு நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அத்துடன், எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவும் எம்.பியுமான அநுரகுமார திஸாநாயக்க, "சமுர்த்தி நிவாரணம் கழிக்கப்படமாட்டாது என்ற உறுதிமொழியை அரசாங்கம் இன்றே வழங்கவேண்டும்" என்று கேட்டிருந்தார்.

இதன்போது விரைவில் அதற்கான முடிவு அறிவிக்கப்படும் என, அமைச்சர் கயந்த கருணாதிலக பதிலளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வெட்கம் கெட்டதனமாக சம்பந்தன் பேசுகின்றார்

### தினேஸ் குணவர்த்தன கூறுகிறார்



(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் வெட்கம் கெட்ட தனமாக பேசுகின்றார் என கூட்டு எதிர்க்கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சராக இருந்த ரவி கருணாநாயக்க தொடர்பில் எதிர்க் கட்சித் தலைவர் வெளியிட்ட கருத்து வெட்கம்கெட்டதனமானது என அவர் தெரிவித்தார்.

குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும் வரையில் ரவி கருணாநாயக்கவை குற்றவாளியாக பார்க்க முடியாது என சம்பந்தன் நேற்று முன்தினம் பாராளுமன்றில் தெரிவித்திருந்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனுக்கு எதிராக தினேஸ் குணவர்த்தன வெளியிட்ட கருத்துக்கு ஆளும் கட்சியின் உறுப்பினர்கள் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்லேகலே டெஸ்ட் இன்று ஆரம்பம்

# இலங்கை எழமாட்டாயா பீனிக்ஸ் பறவையாய்?



இலங்கை - இந்தியா அணிகள் மோதும் 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி இன்று பல்லேகலேயில் தொடங்குகிறது.

இந்த டெஸ்டிலும் வென்று இந்திய அணி 'ஹட்ரிக்' வெற்றியுடன் அந்நிய மண்ணில் வைட்வோஷ் சாதனை புரியுமா? அல்லது இலங்கை ஆறுதல் வெற்றி பெறுமா? என்று ரசிகர்கள் எதிர்பார்க்கின்றனர்.

விராட் ஹோலி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது.

இரு அணிகள் இடையேயான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் காலியில் நடந்த முதல் டெஸ்டில் 304 ஓட்டங்கள் வித்தியாசத்திலும் கொழும்பில் நடந்த 2ஆவது டெஸ்டில் இன்னிங்ஸ் மற்றும் 53 ஓட்டங்கள் வித்தியாசத்திலும் இந்தியா வெற்றி பெற்று தொடரை கைப்பற்றி இருந்தது.

இந்நிலையில் இந்தியா - இலங்கை அணிகள் மோதும் 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி பலலேகலேயில் இன்று ஆரம்பமாகிறது.

இந்திய அணியைப் பொறுத்தவரை துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சில் சமபலத்துடன் திகழ்வதால் இந்த டெஸ்டிலும் வெல்ல முடியும் என்ற நம்பிக்கையில் இருக்கிறது. துடுப்பாட்டத்தில் புஜாரா மிகவும் நல்ல நிலையில் உள்ளார். அவர் இரண்டு சதங்களுடன் 301 ஓட்டங்கள் குவித்துள்ளார்.

இதுதவிர தவான் (234 ஓட்.), ரஹானே (212 ஓட.), அணித் தலைவர் விராட் ஹோலி, லோகேஷ் ராகுல் போன்றவர்களும் சிறப்பான நிலையில் உள்ளனர்.

ஒரு டெஸ்டில் ஆட தடை விதிக்கப்பட்டதன காரணமாக ஜடேஜா ஆட முடியாதது பாதிப்பே. ஏனெனில் அவர் இத் தொடரில் 13 விக்கெட்டுக்களை கைப்பற்றி உள்ளார். அவர் இடத்தில் அக்ஷர் பட்டேல் சேர்க்கப்பட்டுள்ளார். அக்ஷர் பட்டேல் முதல் முறையாக டெஸ்டில் ஆடுவாரா? அல்லது குல்தீப் யாதவுக்கு வாய்ப்பு கிடைக்குமா? என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சுழற்பந்து வீச்சில் அணியின் நம்பிக்கை நட்சத்திரமாக அஸ்வின் இருக்கிறார். அவர் 11 விக்கெட்டுக்கள் எடுத்துள்ளார். மொஹமட் ஷமி, உமேஷ் யாதவ் ஆகியோர் வேகப்பந்தில் முத்திரை பதிக்கக் கூடியவர்கள்.

இலங்கை அணி ஆறுதல் வெற்றி பெறும் ஆர்வத்துடன் இருக்கிறது. தொடரை முழுமையாக இழக்காமல் இருக்கும் வகையில் இலங்கை அணி வீரர்கள் வெற்றிக்காக கடுமையாக போராடுவார்கள்.

காயத்தால் அவதிப்பட்டு வந்த பிரதீப், ஹேரத் நீக்கப்பட்டு வேகப்பந்து வீச்சாளர்கள் காமேஜ் மற்றும் சமீரா ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இலங்கை அணியின் துடுப்பாட்டத்தில் கருணாரத்ன (265 ஓட்.), குஷல் மெண்டீஸ் (212 ஓட்.) ஆகியோரும் பந்து வீச்சில் பிரதீப்பும் நல்ல நிலையில் உள்ளனர். எனினும் பிரதீப் காயம் காரணமாக விலகியமை அணிக்கு பின்னடைவே.

இரு அணிகளும் மோதிய 40 போட்டிகளில் இந்தியா 18 டெஸ்டிலும் இலங்கை 7 டெஸ்டிலும் வெற்றி பெற்றுள்ளன. 15 டெஸ்ட் சமனிலையானது.

பல்லேகலே ஆடுகளம் வேகப்பந்து வீச்சுக்கு சாதகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏனெனில் ஆடுகளம் பச்சைபசேல் என்று புற்கள் நிறைந்து காணப்படுகிறது. இதனால் இலங்கை அணி கூடுதலாக வேகப்பந்துவீச்சாளர்களை அணியில் இணைத்துள்ளது.



இலங்கை நேரப்படி காலை 10 மணிக்கு தொடங்கும் இந்த டெஸ்ட் போட்டியை டென் தொலைக்காட்சி நேரடியாக ஒளிபரப்பு செய்கிறது. இரு அணி வீரர்கள் விபரம்:-

**இந்தியா:** விராட் ஹோலி (அணித் தலைவர்), லோகேஷ் ராகுல், தவான், புஜாரா, ரகானே, அஸ்வின், விருத்திமான் சகா, ஹர்த்திக் பாண்டியா, புவனேஷ்வர் குமார்/உமேஷ் யாதவ், குல்தீப் யாதவ், மொஹமட் ஷமி.

**இலங்கை:** சண்டிமல் (அணித் தலைவர்), உபுல் தரங்க, கருணாரத்ன, குசல் மெண்டிஸ், மத்யூஸ், டிக்வெல, தனஞ்செய டி சில்வா, டில்ருவான் பெரேரா, சமீரா/ சண்டகன், விஷ்வா பெர்னாண்டோ, லகிரு குமார.

---

## # 20 மீற்றர் # 2.91 வினாடிகள்

# தல தோனி அசத்தல்



230.5k likes 1,733 comments
NCA all test s done 20 mtr in 2.91sec. Run a 3 done in 8.90sec.time for heavy lunch

இந்திய ஒருநாள் கிரிக்கெட் அணியின் விக்கெட் காப்பாளர் தோனி பெங்களூரு தேசிய கிரிக்கெட் அக்கடமியில் 20 மீற்றர் தூரத்தை 2.91 வினாடியில் கடந்து அசத்தியுள்ளார்.

இந்திய ஒருநாள் கிரிக்கெட் அணி சம்பியன்ஸ் டிரொபி கிரிக்கெட் தொடரை முடித்துக் கொண்டு மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிராக ஐந்து போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் விளையாடியது.

அதன்பின் இந்திய டெஸ்ட் அணி தற்போது இலங்கையில் விளையாடி வருகிறது. மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் கடைசி போட்டி இன்று பல்லேகலேயில் ஆரம்பமாகிறது.

இந்த டெஸ்ட் போட்டிக்குப்பிறகு இந்தியா ஐந்து ஒருநாள் மற்றும் ஒரேயொரு ரி20 கிரிக்கெட் போட்டி கொண்ட தொடரில் இலங்கைக்கு எதிராக விளையாடுகிறது.

ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடர் வருகிற 20ஆம் திகதி தொடங்குகிறது. இந்த தொடருக்கான இந்திய அணி நாளை அறிவிக்கப்பட இருக்கிறது. ஒருநாள் கிரிக்கெட் அணியில் தோனிக்கு கட்டாயம் இடமுண்டு.

இரு தொடர்களுக்கு இடையில் நீண்ட நாட்கள் இடைவெளி ஏற்பட்டால் பெங்களூருவில் உள்ள தேசிய கிரிக்கெட் அக்கடமியில் வீரர்கள் தங்களது உடற்தகுதியை நிரூபித்து காட்ட வேண்டும்.

இதற்காக தோனி பெங்களூரு தேசிய கிரிக்கெட் அக்கடமிக்கு வந்துள்ளார். அவருடன் கேதர் ஜாதவ், சுரேஷ் ரெய்னாவும் இங்கு வந்துள்ளனர்.

'அனைத்து சோதனை நடைமுறையும் முடிந்துவிட்டது. 20 மீற்றர் ஓட்டத்தை 2.91 வினாடிகளில் கடந்தேன். மூன்று ரன்கள் ஓட வேண்டிய தூரத்தை 8.90 வினாடிகளில் கடந்தேன்' என்று இன்ஸ்டாகிராமில் பதிவு செய்துள்ள தோனி, சக வீரர்களுடன் சாப்பிடும்போது எடுத்த படத்தை வெளியிட்டு "மதிய சாப்பாட்டிற்கான நேரமிது" என்று குறிப்பிட்டுள்ளார்.

---

## மேற்கிந்திய டெஸ்ட் தொடர்

# இங்கிலாந்து அணியில் புதுமுகங்கள்

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான இங்கிலாந்து டெஸ்ட் அணியில் ஸ்டோன்மேன், கிரேன் ஆகியோர் புதுமுக வீரர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

இங்கிலாந்து அணி சமீபத்தில் தென்னாபிரிக்காவிற்கு எதிராக நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது.

இந்த தொடரை இங்கிலாந்து 3:1 என்ற கணக்கில் கைப்பற்றியது. இங்கிலாந்து அணியில் அலஸ்டைர் குக் உடன் ஜென்னிங்ஸ் தொடக்க வீரராக களம் இறங்கினார்.

ஜென்னிங்ஸ் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை. இதனால் இந்தத் தொடருக்கான இங்கிலாந்து அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.



அவருக்குப் பதிலாக ஸ்டோன்மேன் என்ற புதுமுக தொடக்க வீரர் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். அதேபோல் டாவ்சன் என்ற சுழற்பந்து வீச்சாளர் நீக்கப்பட்டு, கிரேன் என்ற புதுமுக வீரர் சேர்க்கப்பட்டுள்ளார்.

2012ஆம் அன்ரூ ஸ்ரோஸின் ஓய்வுக்கு பிறகு இங்கிலாந்து அணியின் ஆரம்ப வரிசையில் அலஸ்டைர் குக் உடன் இணைந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த நிலையான தொடக்க வீரர்கள் கிடைக்கவில்லை. ஸ்டோன்மேன் குக் உடன் இணையும் 12ஆவது வீரராவார்.



ஆஷஸ் தொடருக்கு முன் சிறந்த தொடக்க வீரரை அடையாளம் காண இங்கிலாந்து முயற்சித்து வருகிறது. ஆனால் அதற்கு பலன் கிடைக்கவில்லை.

இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் எதிர்வரும் 17ஆம் திகதி பேர்மிங்காமில் உள்ள எட்ஜ்பஸ்டன் மைதானத்தில் பகல் - இரவு போட்டியாக நடக்க இருக்கிறது.

இந்தத் தொடருக்கான இங்கிலாந்து அணியில் இடம்பிடித்துள்ள வீரர்கள் விபரம் வருமாறு.

ஜோ ரூட் (அணித் தலைவர்), மொயீன் அலி, ஜேம்ஸ் அண்டர்சன், ஜோனி பேர்ஸ்டோவ் (விக்கெட் காப்பாளர்), பிரோட், அலஸ்டைர் குக், மாசன் கிரேன், டேவிட் மாலன், ரோலணட்-ஜோன்ஸ், பென் ஸ்ரோக்ஸ், மார்க் ஸ்டோன்மேன், டொம் வெஸ்லே, கிறிஸ் வோக்ஸ்.

---

## கடமை நிறைவேற்று அதிபர்களுக்கு

# சேவைக்காலத்தை கணிப்பிட்டு நிரந்தர நியமனம் வழங்குங்கள்

### நாடாளுமன்றில் சிறீதரன் எம்.பி வலியுறுத்து

(கொழும்பு)

அதிபர் இல்லாத பாடசாலைகளில் அதிபர்களின் கடமையை நிறைவேற்றும் அதிபர்களுக்கு மிகை நிரப்பு அதிபர்கள் என பெயரிட்டு அவர்களுக்கு எவ்வித சம்பள உயர்வோ பதவி உயர்வோ வழங்கப்படாமையானது அவர்களை உளரீதியாக பாதிப்படைய வைத்துள்ளதோடு அவ்வாறே ஓய்வுபெறும் நிலைக்கும் தள்ளப்படுகின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை நாடாளுமன்ற அமர்வில் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையொன்றை முன்வைத்து உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு பூராகவும் 2 ஆயிரத்து 400க்கு மேற்பட்ட கடமை நிறைவேற்று அதிபர்கள் பணி புரிகின்றனர். இவர்கள் 10 ஆண்டுகளுக்கு மேலாக கடமையாற்றி வருகின்றனர்.

அவர்களது சேவைக்காலத்தை கணிப்பிட்டு அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என சுட்டிக் காட்டினார்.

மேலும் வடக்கில் மாத்திரம் 241 பேர் கடமை நிறைவேற்று அதிபர்கள் உள்ளனர். யுத்த காலத்தில் மின்சாரம் இன்றி தீவகம் மற்றும் துணுக்காய், மடு, முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற பகுதிகளில் இந்த ஆசிரியர்கள் மிகுந்த அர்ப்பணிப்புடன் பணியாற்றினார்கள் என சுட்டிக்காட்டிய சிறீதரன்,

சேவைக்காலம் மற்றும் தேவைகளைக் கருத்திற்கொண்டு இவர்களை நிரந்தர அதிபர்களாக நியமிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார். (செ-11)

---

# நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தமிழ் மொழி கற்பிப்பு திட்டம்

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தமிழ் மொழியை கற்பிக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தேசிய சகவாழ்வு, உரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு மேற்கொண்டுள்ள இந்த வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நேற்று நடைபெற்றது.

அமைச்சர் மனோ கணேசன், குழுக்களின் பிரதித் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், பேராசிரியர் ஜே.பி.திஸாநாயக்க ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (செ-11)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரமான உள்ளூர் உற்பத்திகளை வெளிநாடுகளுக்கும் அனுப்பலாம்

## யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் தரமானதாக இருந்தால் வெளிநாடுகளுக்கும் அந்தப் பொருட்களை அனுப்பி வைப்பதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகம் தெரிவித்துள்ளார்.

யாழ்.முயற்சியாளர் - 2017 வர்த்தக கண்காட்சி நேற்றைய தினம் நல்லூர் கிட்டுப்பூங்காவில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுயதொழிலில் மக்களை ஈடுபடுத்தல் இன்று எமது மாவட்டத்தில் முக்கியமான பிரச்சினையாக உள்ளது. சுயதொழில் ஊக்கம் என்பது எமது மக்களிடையே குறைவாகவே உள்ளது. எனினும் சுயதொழிலை ஊக்குவிக்கும் வகையில் அரசால் உதவிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது நாட்டின் ஏனைய பாகங்களிலும் இவ்வாறான உற்பத்திப் பொருட்கள் விற்பனைக்கு வருகின்றன. எமது பொருட்களின் தரம் நன்றாக இருந்தால் தான் மற்றைய பொருட்களுடன் போட்டி போட முடியும்.

இதற்கான பயிற்சியை வழங்குவதற்கு சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு தயாராகவுள்ளது.


எம்மவர்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் நல்ல தரத்துடன் காணப்பட்டால். வெளிநாடுகளுக்கும் சிறந்த பொருட்களை அனுப்ப முடியும். முக்கியமாக எம்மவர்களின் உற்பத்திப் பொருட்களை நாமே வாங்குவதற்கு முன்வரல் வேண்டும். இந்த துறைக்குள் கூடுதலானவர்களை உள்வாங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

SATS-TECH ENGINEERS
மாதாந்தம் வெறும் நூற்று ஐம்பது மட்டும் செலுத்தி உங்கள் அபிமான தமிழ் சானல்களை கண்டுகளிக்க முடியும்.
29 தமிழ் சானல்கள் Rs. 150/- Only
150/=
No.298, K.K.S. Road, Jaffna
(C-9276)
:021 222 8812, 071 098 6224

# மரண அறிவித்தல்

## அமரர். இரத்தினசபாபதி யோகநாதன்

(பருத்தித்துறை நகராட்சி மன்ற ஆதனவரி வசூலிப்பாளர்)



ஐயனார் கலட்டி பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் சேவில் ஒழுங்கை தும்பளை மேற்கு பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசபாபதி யோகநாதன் 08.08.2017 செவ்வாய்க்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினசபாபதி - நாகரத்தினம் தம்பதியரின் மகனும் திருநாவுக்கரசு மனோன்மணியின் மருமகனும் திருமணியின் அன்புக் கணவரும் இராகவன் (AUS), ரமணன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் தீபிகாவின் அன்பு மாமனாரும் யோகராணி, சுகிர்தராணி, திலகராணி (பபா) பரமநாதன் (செல்வம்), ரகுநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 13.08.2017 நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் ஆரம்பமாகி பூதவுடல் தகனக்கிரியைக்காக கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் , நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சேவில் ஒழுங்கை,
தும்பளை மேற்கு,
பருத்தித்துறை.

தகவல்
யோ.ரமணன் (மகன்)
077 829 7262

(சி.9299)

# 31 ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
1946 – 06 – 28

மறைவு
2017 – 07 – 13



## அமரர். திருமதி. ஈஸ்வரதேவி சிவசுப்பிரமணியம்

13.07.2017 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி அமரர் ஈஸ்வரதேவி சிவசுப்பிரமணியம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் 12.08.2017 இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் கோவிலடி, புத்தூர். (103) குடும்பத்தினர்.

# இராசி பலன்

12.08.2017

(ஆடி 27, சனிக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
பஞ்சமி முன்னிரவு 10.08 மணிவரை
உத்திரட்டாதி காலை 6.27 மணிவரை
ரேவதி பின்னிரவு 5.44 மணிவரை
சுபநேரம் 3.04 - 4.34 மணிவரை
இராகுகாலம் 9.04 - 10.34 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சந் | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>உத்தரம்<br>அதிகாலை 3.37 இற்கு<br>மேட-சந் | | சூரி,ராகு<br>செவ்,<br>புத,சுக் |
| கேது | | | |
| | சனி | | குரு |

**மீனம்:** நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு, ரோக பயமுண்டு, வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகும் வாய்ப்புண்டு.

**மேடம்:** எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், சயன சுகக் குறைவான நாள், சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள்.

**இடபம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், முயற்சிகளில் முன்னேற்றம் பெறுவீர்கள்.

**மிதுனம்:** பிறர் உதவியுண்டு, எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், தன்னம்பிக்கை மேலோங்கும் நாள், தூர தேசச் செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்:** வார்த்தைகளால் பிறரைக் கவர்வீர்கள், வீட்டுப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**கடகம்:** ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**மகரம்:** தொழிலில் சிறப்படையும் நாள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**சிம்மம்:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், உறவினர்கள் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

**தனுசு:** மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், நண்பர்களின் சந்திப்புண்டு, அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது,

**விருச்சிகம்:** தேவையற்ற சந்தேகங்களைக் குறைத்துக் கொள்வது நல்லது, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்,

**துலாம்:** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், மனதில் புதிய கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**கன்னி:** நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், செய்தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு நாட்டு மக்களிடையே மிகுந்த வரவேற்பு

## சிறுதொழில் அபிவிருத்திப் பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு நாட்டு மக்கள் அனைவரும் மிகுந்த வரவேற்பு வழங்குவதாக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பணிப்பாளர் சுஜீர ஜெயரத்ன தெரிவித்துள்ளார். யாழ்.முயற்சியாளர் -2017 வர்த்தக கண்காட்சி நேற்றைய தினம் நல்லூர் கிட்டுப்பூங்காவில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் நல்ல உற்பத்தியாளர்களை முன்னுக்கு கொண்டு வந்து அவர்களது உற்பத்திகளை ஊக்குவிப்பது தான் எமது நோக்கம். இதற்காக எல்லா அரச நிறுவனங்களையும் ஒன்றிணைத்து உதவிகள் செய்ய வேண்டிய தேவை இருந்தது. அதற்கான அனுமதியை வடக்கு மாகாண முதலமைச்சர் வழங்கியிருக்கிறார்.

இந்த சிறுதொழில்கள் முயற்சியாளர்களின் வியாபாரத்தில் பல்வேறு சிக்கல்கள் உள்ளன. அதனை நிவர்த்தி செய்து இதற்கு நல்லதொரு சூழலை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும் என்பதே எமது நோக்கமாகும். மேலும் இந்த முயற்சி உற்பத்தியில் துரிதப்படுத்த சிறந்த தொழில்நுட்பம் தேவைப்படும். அதனையும் இலவசமாக வழங்க தயாராகவுள்ளோம்.

உள்ளூர் உற்பத்தி முயற்சியாளர்களுக்கு குறைந்த வட்டியும் வழங்க தயாராகவுள்ளோம். அதன் மூலம் தமது உற்பத்தியை மேம்படுத்தி தம்முடைய இலக்குகளை இலகுவாக அடைந்து கொள்ள முடியும்.

நாங்கள் 25 ஆயிரம் ரூபா கடனொன்றை சிறு தொழில்கள் முயற்சியாளருக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கின்றோம். அதே போன்று பல்வேறுபட்ட நிகழ்வுகளையும் நாடு முழுவதும் ஏற்பாடு செய்யவுள்ளோம்.

இங்கே பெருமளவான அழகு நிலையங்கள் உள்ளதனை காண்கின்றோம். இந்த அழகு நிலையங்களுக்குத் தேவையான உதவிகளையும் பயிற்சிகளையும் வழங்க தயாராக உள்ளோம்.

யாழ்ப்பாண உற்பத்திப் பொருட்களுக்கு எமது நாட்டு மக்கள் அனைவரிடையேயும் மிகுந்த வரவேற்பு உள்ளது. ஆகவே நாட்டில் சிறந்த பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து நீண்ட பயணம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# 'கார்த்திகைக்குமரா போற்றி' இறுவெட்டு வெளியீட்டு நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

ஈழத்துக்கவிஞர் சி.றஜீத்தின் தயாரிப்பில் உருவான நல்லூர் கார்த்திகைக்குமரா போற்றி எனும் பக்தி இறுவெட்டு வெளியீட்டு விழா நேற்று முன்தினம் வியாழக்கிழமை நல்லூரில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் மாலை 4 மணியளவில் றஜீத் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு இறுவெட்டினை வெளியிட்டு வைத்தார்.


இந்நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினருடன், தயரிப்பாளர் சி.றஜீத், கிருபா லேணர்ஸ் உரிமையாளர் கிருபாகரன், இளவாலை மெய்கண்டான் பாடசாலை அதிபர் மற்றும் கலைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ-3)




யாழ்.முயற்சியாளர் -2017 வர்த்தகக் கண்காட்சி நேற்றைய தினம் நல்லூர் கிட்டுப்பூங்காவில் நடைபெற்றது. 'இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொண்டதோடு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகம், சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பணிப்பாளர் சுஜீர ஜெயரத்ன ஆகியோர் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். இந்தக் கண்காட்சி நல்லூர் திருவிழா முடியும் வரை நடைபெறுமென ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (படங்கள்:- உ.சாளின்)

# துன்னாலையில் 2இடங்களில் அதிகாலை வேளை திருட்டு!

## மயானத்திலிருந்து மடிக்கணனி மீட்பு



(கரணவாய்)

துன்னாலைப் பகுதியில் இருவேறு இடங்களில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை கைது செய்த நெல்லியடிப் பொலிஸார் 12 மணித்தியாலங்களிற்குள் திருடப்பட்ட பொருட்களையும் மீட்டனர்.

நேற்று முன்தினம் அதிகாலை நெல்லியடிப் பொலிஸார் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது துன்னாலைப் பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய இளைஞர் ஒருவரை கைது செய்து சோதனையிடப்பட்ட போது அவரிடம் ஒரு தொகைப்பணமும் ஒரு பென்ரைவ்வும் காணப்பட்டன.

அதிகாலை வேளையில் இளைஞர் ஒருவர் பணத்துடன் வந்ததில் சந்தேகம் கொண்ட நெல்லியடிப் பொலிஸார் அவரிடம் தீவிர விசாரணை மேற்கொண்டனர்.

அப்போது துன்னாலை இந்திரம்மன் கோவிலடிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் மோட்டார் சைக்கிள் திருடியதாகவும் துன்னாலை வடக்கு வல்லியானந்த பிள்ளையார் கோவிலடியில் உள்ள வீடு ஒன்றிலும் திருட்டில் ஈடுபட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் திருட்டு இடம்பெற்ற வீட்டார் இருவரும் தமது பகுதிகளான பருத்தித்துறை, நெல்லியடி பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளைப் பதிவு செய்தனர்.

இத்திருட்டு நேற்று முன்தினம் அதிகாலை ஒரு மணிக்கும் 1.30 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் இடம்பெற்றுள்ளது. இரண்டு வீடுகளும் ஒன்றரை கிலோமீற்றர் தூரத்தில் இருப்பதாக பொலிஸார் கூறினர்.

தீவிர விசாரணையின் பின் இரண்டாவது நபர் தொடர்பான தகவலும் பெறப்பட்டு அவர் கைது செய்யப்பட்டார். இதில் இந்திரம்மன் கோவிலடியில் உள்ள வீட்டில் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் தில்லையம்பலப்பிள்ளையார் கோவிலடி காட்டில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டது.

வல்லியானந்தப் பிள்ளையார் கோவிலடியில் உள்ள வீட்டில் மடிக்கணனி, இரண்டு தொலைபேசி, பென்ரைவ், 25 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்ட நிலையில் 15,000 ரூபா பணமும் பென்ரைவும் குறித்த நபரின் உடைமையில் இருந்து [illegible] இருந்தும் மீட்கப்பட்டன. (இ-60)

## மக்கள் பங்கேற்பு அபிவிருத்தி திட்டம்

உள்ளூராட்சி மன்றங்களால் நான்காண்டுக்கொரு முறை தயாரிக்கப்படுகின்ற மக்களால் மக்களுக்கான அபிவிருத்தி திட்டங்களை வாக்களிப்புமுறை மூலம் இனங்காணும் மக்கள் பங்கேற்பு அபிவிருத்தி திட்டம் (2018 - 2021) ஆண்டுக்கான ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் தனது ஆளுகைக்குட்பட்ட ஊர்காவற்றுறை, நாரந்தனை, அனலைதீவு, எழுவைதீவு பிரதேசங்களில் மக்கள் பங்கேற்பு கூட்டங்கள் நடத்தப்பட்டு தயாரிக்கப்படுகின்றது.

அதன் தொடர்ச்சியாக இன்று சனிக்கிழமை ஜே/57 (நாரந்தனை) கிராம சேவையாளர் பிரிவைச்சேர்ந்த பொதுமக்களுக்கு பிற்பகல் 3.00 மணிக்கு நாரந்தனை சென்.பீற்றர் தேவாலயத்திலும் நாளை ஞாயிற்றுக்கிழமை ஜே/39 (எழுவைதீவு) கிராம சேவையாளர் பிரிவைச்சேர்ந்த பொதுமக்களுக்கு முற்பகல் 10 மணிக்கு எழுவைதீவு பொதுமண்டபத்திலும் நாளை மறுதினம் திங்கட்கிழமை ஜே/60 (புளியங்கூடல்) கிராமசேவையாளர் பிரிவைச்சேர்ந்த பொதுமக்களுக்கு பிற்பகல் 3.00 மணிக்கு புளியங்கூடல் மகாமாரி சனசமூக நிலையத்திலும் 2017.08.15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஜே/51 (கரம்பொன்) கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த பொதுமக்களுக்கு பிற்பகல் 2 மணிக்கு கிராம அலுவலர் பணிமனையிலும் மக்கள் பங்கேற்புத்திட்டம் தயாரிப்பதற்கான கலந்துரையாடல் கூட்டங்கள்நடைபெறவுள்ளன.

எனவே குறித்த கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட மக்கள் அதிகளவில் பங்குபற்றி தமது அபிவிருத்தி தேவைகளுக்கு அதிகளவான வாக்குகளை செலுத்தி தமது தேவைகள் முன்னுரிமைப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் திட்டத்தை சிறப்புற நிறைவேற்ற பூரண ஒத்துழைப்பை வழங்குமாறும் பிரதேச சபை சமூகம் கேட்டுக் கொண்டுள்ளது. (இ-3)

யாழ்.செய்திகள்






சாலைப்பூக்கள் திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா கடந்த 9ஆம் திகதி புதன்கிழமை யாழ்.செல்வா திரையரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தென்னிந்திய திரைப்பட பிரபலங்கள், ஈழத்து கலைஞர்கள், தமிழ்பெண் விமானி அர்ச்சனா உட்பட பலர் கலந்து சிறப்பித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மாவட்ட செயலகம், மந்திரிகள் செயலகம் என்று பார்ப்பதில்லை

# எம் மக்களின் வருங்காலமே எம் எல்லோருக்கும் முக்கியம்



## முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகளில் மத்தி, மாகாணம் என்றோ மாவட்டச் செயலகம், மந்திரிகள் செயலகம் என்றோ நாங்கள் இனம்பிரித்துப் பார்ப்பதில்லை. எம் மக்களின் வருங்காலமே எம் எல்லோருக்கும் முக்கியம் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். யாழ். முயற்சியாளர் -2017 வர்த்தக கண்காட்சி நேற்றைய தினம் நல்லூர் கீட்டுப்பூங்காவில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வளமான அபிவிருத்திக்கான முயற்சியாண்மை மற்றும் சிறு வியாபார அபிவிருத்தி என்ற இலக்கின் கீழ் தொழிலற்ற இளைஞர் பிரிவினரின் தொழில் முயற்சியாண்மையை விருத்தி செய்தல், உயர் கல்வியைத் தொடர முடியாத இளைஞர் யுவதிகளை வியாபாரத் துறையில் ஈடுபடச் செய்தல், வியாபாரங்களின் பலன்தரு தன்மையினை அதிகரிக்கச் செய்தல், வியாபாரத்துடனான் துணைச் சேவைகளை வழங்குதல் ஆகிய விடயங்களில் கூடிய கவனம் செலுத்தி உற்பத்தி மற்றும் வியாபார நடவடிக்கைகளில் வருமானத்தை அதிகரிக்கச் செய்வதுடன் நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கும் உறுதுணையாக இப் பிரிவு விளங்குகின்றது. இவ்வாறான பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகளில் மத்தி, மாகாணம் என்றோ மாவட்ட செயலகம், மந்திரிகள் செயலகம் என்றோ நாங்கள் இனம்பிரித்துப் பார்ப்பதில்லை. எம் மக்களின் வருங்காலமே எம் எல்லோருக்கும் முக்கியம். அதை நாடியே மாவட்டச் செயலக நடவடிக்கைகளும் எமது மந்திரிமார்களின் செயற்பாடுகளும் முன்னேறிச்செல்கின்றன. அந்தவிதத்தில் யாழ் .மாவட்டச் செயலாளரை நாம் பாராட்ட வேண்டும். மாகாண நிர்வாகத்துடன் சேர்ந்து முன்னேறுவதில் அவர் கண்ணும் கருத்துமாக இருக்கின்றார். அவருக்கு எனது பாராட்டுக்கள் உரித்தாகுக!

வருடாவருடம் இவ்வாறான கண்காட்சிகளை ஒழுங்கு செய்வதால் மறைந்துள்ள முயற்சியாளர்களை அடையாளங் காணக்கூடியதாக இருக்கின்றது. தரமான உற்பத்திகளை பயன்பெறுநர்களுக்கு அறிமுகம் செய்யக்கூடியதாக இருக்கின்றது. வியாபார ஆலோசனைகள் மற்றும் துணைச் சேவைகளை வழங்குவதன் மூலம் புதிய தொழில் முயற்சியாளர்கள் தமது உற்பத்திக்கான சந்தை வாய்ப்புக்களை வளப்படுத்திக் கொள்வதற்கும் வாடிக்கையாளர்களின் தேவைகள் மற்றும் விருப்புக்களை அறிந்து கொள்வதற்கும் அவை உறுதுணையாக இருந்து வருகின்றன.

வர்த்தகம் என்பது வெறுமனே கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் கிடைக்கப் பெறுகின்ற பொருட்களை கொள்வனவு செய்து அதனை வாடிக்கையாளர்களுக்கு இங்குகொண்டு வந்து விற்பனை செய்வது மட்டுமல்ல, மாறாக எமது பகுதிகளில் காணப்படுகின்ற மூலப்பொருட்களைப் பயன்படுத்தி பொருட்களை உற்பத்தி செய்வதும் அவற்றைச் சந்தைப்படுத்துவதும் வர்த்தகத் துறையின் மிக முக்கியமான நடவடிக்கைகள் ஆவன.

நாம் மேற்கொள்ள இருக்கின்ற தொழில் முயற்சிக்கு போதிய சந்தை வாய்ப்புக்கள் இருக்கின்றனவா, தொழில் முயற்சிக்கான மூலப்பொருட்களை தடையின்றி தொடர்சியாக பெற்றுக் கொள்ள முடியுமா, உற்பத்திச் செலவீனம் எமது கட்டுப்பாட்டுக்குள் இருக்குமா, அவ்வாறு உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்கள் கூடுதல் சந்தை வாய்ப்பை பெறக்கூடிய வகையில் தரமானதாக இருப்பனவா போன்ற பல விடயங்களை தொழில் முயற்சியை ஆரம்பிப்பதற்கு முன்னரே எம்மால் மதிப்பீடு செய்து கொள்ளப்பட வேண்டும். அதுமட்டுமல்லாது எமது உற்பத்திகள் வாடிக்கையாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய அளவிற்கு அமையுமா என்பது பற்றியும் நாம் அறிந்திருத்தல் அவசியம்.

இவையனைத்திற்கும்மேலாக வாடிக்கையாளர்களை திருப்திப்படுத்துகின்ற நிகழ்வு மற்றைய எல்லா நடவடிக்கைகளையும் விட முக்கியத்துவம் பெறுகின்றது. ஒரு உற்பத்திப் பொருளை அல்லது உபகரணம் ஒன்றை கொள்வனவு செய்ய வருகின்ற வாடிக்கையாளர் அது பற்றிய பல மேலதிக தரவுகளை அறிந்து கொள்ள விரும்புவர். அவ்வாறான சந்தர்ப்பங்களில் வாடிக்கையாளரை திருப்தியடையச் செய்யும் வகையில் நீங்கள் வழங்குகின்ற தகவல்கள் உங்கள் விற்பனை நிலையத்தின்பால் வாடிக்கையாளர்களுக்கு ஒரு நல்ல நம்பிக்கையை ஏற்படுத்தும். மாறாக உங்களுடைய பொருட்கள் எவ்வளவு தரம் மிக்கதாக இருந்தபோதும் நீங்கள் வாடிக்கையாளரை திருப்திப் படுத்தாதுவிடின் உங்கள் வர்த்தக நடவடிக்கைகள் பாதிக்கப்படுவன.

மிகவும் வளர்ச்சி அடைந்த முன்னணி வகிக்கின்ற வர்த்தக நிறுவனங்களின் தொழில் முயற்சியில் வாடிக்கையாளரை திருப்திப்படுத்துதல் என்ற விடயம் மிகக் கவனமாக ஆராயப்பட்டிருக்கும். இவ்வாறான நிறுவனங்களில் கடமை புரிபவர்கள் வேறு எந்தத் தவறுகளுக்கும் மன்னிக்கப்படுவார்கள். ஆனால் வாடிக்கையாளர்களை திருப்திப்படுத்தத் தவறின் அவரின் சேவைகள் எதுவித விளக்கமுமின்றி நிறைவுறுத்தப்படும்.

எனவே அன்பான வர்த்தகப் பெரும்க்களே! தொழில் முயற்சியாளர்களே! வடபகுதியில் வர்த்தக நடவடிக்கைகளின் தரத்தை தேசிய மற்றும் சர்வதேச தரத்திற்கு ஒப்பானதாக தரமுயர்த்த நீங்கள் அனைவரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

பொதுவாகவே ஒரு கருத்து மேலோங்கி இருக்கின்றது. அதாவது வடபகுதி இளைஞர், யுவதிகள் அரச சேவைகள் தவிர்ந்த வேறு எந்த வேலைகளிலும் ஈடுபடமாட்டார்கள் அல்லது வேறு தொழில்கள் தெரியாது என்று கூடக் கூறப்படுகின்றது. இந்நிலை மாற்றப்பட வேண்டும். வளர்ச்சியென்பது ஓர் இரவில்ஏற்படுவதல்ல. என்ன தொழிலாக இருந்தாலும் உறுதியானதும் படிப்படியானதுமான வளர்ச்சியே நிரந்தரமானது.

வடபகுதி மக்கள் எந்தவொரு காரியத்தில் இறங்குகின்ற போதும் அல்லது எந்தவொரு பொருளை கொள்வனவு செய்கின்ற போதும் அதனைக் கவனமாக ஆராய்ந்து திருப்தி ஏற்படும் பட்சத்திலேயே அதனைச் செய்வார்கள் அல்லது கொள்வனவு செய்வார்கள். அவ்வாறாக ஒரு பொருளின் தரம் தீர்மானிக்கப்பட்டு விட்டால் அதன் பின்னர் அதன் விற்பனைக்கு உற்பத்தியாளர்கள் எதுவிதமான விளம்பரங்களும் மேற்கொள்ளத் தேவையில்லை. வாடிக்கையாளர்களே உங்களுக்காக விளம்பரங்களை மேற்கொள்வார்கள்.

இற்றைக்கு சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னர் இங்கிலாந்தின் தயாரிப்புக்களே முதன்மையானவை, ஏனைய நாடுகளின் தயாரிப்புக்கள், தரம் குறைந்தவை என்ற கருத்து இருந்து வந்தது. பின்னர் உற்பத்திச் செலவீனம் அதிகரிக்க ஜப்பான் நாட்டுத் தயாரிப்புக்கள் முதலிடம் பெற்றன. இன்னும் சில காலம் செல்ல தற்போது காணப்படுவது போன்று சீன உற்பத்திகள் மேலோங்கி இருக்கின்றன. வருங்காலத்தில் இந்தியாவின் தயாரிப்புக்கள் முதலிடத்தைப் பெற்றாலும் அதிசயப்படுவதற்கு ஒன்றுமில்லை.

இதுபோன்றே எமது உற்பத்திகளும் இன்றைய சந்தை நிலவரங்களுக்கு ஏற்புடையதாக அதிக தேவையுடையதாகவும் கட்டுப்படியானதாகவும் அமைகின்றபோது வர்த்தகம் மேலோங்கும். உதாரணமாக பொலித்தீன் பாவனைக்கு தடைவிதிக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கு மாற்றீடாக பயன்படுத்தக்கூடிய உற்பத்திகளில் ஈடுபடுவதன் மூலம் விற்பனைகளைப் பெருக்கமுடியும்.

வர்த்தகத்தில் ஈடுபடுபவர்கள் கவனத்தில் எடுக்க வேண்டிய சில விடயங்கள் உண்டு. முதலாவதாக உங்கள் முயற்சியில் முழுமனதாக நீங்கள் ஈடுபடப்பழகிக்கொள்ள வேண்டும். அடுத்து நீங்கள் உங்கள் சிந்தனைகளையும் குறிக்கோள்களையும் முன்னிலைப்படுத்தி அவை நிச்சயம் நடந்தேற அல்லும் பகலும் உழைக்க வேண்டும். சிந்தனைகள் நடைமுறைப்படுத்தப்பட்டால் தான் வர்த்தகம் வளரும். வெறும் சிந்தனைகளாக மட்டும் அவை இருந்தால் அவை ஏட்டுச்சுரக்காய்களாய் ஆகிவிடுவன. யாருக்கு எந்தப் பொருளை வழங்க வேண்டும் அல்லது வழங்கலாம் என்று முதலில் தீர்மானித்து, நீங்கள் எதைச்செய்தால் அவர்கள் உங்கள்பொருட்களைமனமுவந்து வாங்குவார்கள் என்று கணிப்பதே வர்த்தகர்களின் திறனாகவிருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)





## மயானங்களை அகற்றக்கோரி மக்கள் போராட்டம்

மக்கள் குடியிருப்புகளுக்கு மத்தியில் இருக்கும் மயானங்களை அகற்றக்கோரி வலி. கிழக்கு பிரதேச சபை தலைமைப் பணிமனை முன்றலில் நேற்று வெள்ளிக்கிழமை கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.மக்கள் குடியிருப்புகளுக்கு மத்தியில் உள்ள மயானங்களை அகற்றி மக்களின் வாழ்விடச் சூழலைப் பாதுகாக்கக்கோரிதொடர் கவனயீர்ப்பு சத்தியாக்கிரகப் போராட்டம் புத்தூர் மேற்கு கலைமதி கிராமமக்கள் மன்ற முன்றலில் கடந்த ஒரு மாத காலமாக முன்னெடுக் கப்பட்டு வருகின்றது. மேற்குறித்த போராட்டத்தில் பல அரசியல் கட்சி தலைவர்களிடம் பல முறை மகஜர்கள்கையளிக்கப் பட்டபோதிலும் இதுவரை இது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்காததைக் கண்டித்து நேற்று போராட்டம் நடைபெற்றதாகவும் தமக்கான ஒரு உரிய தீர்வு கிடைக்கும் வரை போராட்டம்தொடரும்எனபோராட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் தெரிவித்தனர். (இ-9-10-78)

## ஆசிரிய மாணவர்கள் பதியலாம்

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் ஈராண்டுபயிற்சியை மேற்கொள்வதற்காக 2017/ 2018 கல்வியாண்டிற்கான ஆசிரிய மாணவர்களின்பெயர்விபரங்கள் கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு கிடைக்கப்பட்டுள்ளன. இவர்களுக்கான பதிவுகள் 2017. 09.06 ஆம் திகதி ஆரம்ப மாக இருப்பதனால் சகலரும் அன்றைய தினம் தங்கள் பதிவு களை மேற்கொண்டு தொடர் ந்து பயிற்சியில் ஈடுபட அனு மதிக்கப்படுகின்றனர்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு தெரிவு செய்யப் பட்ட மாணவருக்கான அனுமதிக் கடிதம் தபாலிடப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்டவர்கள் பாடசாலை விடுகை அனுமதியோடு கலாசாலைக்கு வருகை தருமாறு கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம் அறிவித்துள்ளார்பின்வரும் பாடநெறிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ள ஆசிரிய மாணவர்களே அனுமதிக்கப்பட்டுள்ளனர். பாடங்கள்:- ஆரம்பக் கல்வி, சங்கீதம், இந்து சமயம், கணிதம், விவசாயம், வர்த்தகம், விசேட கல்வி, மனைப் பொருளியல் என அறிவிக்கப் பட்டுள்ளது. (இ)

## கருணாநாயக்க குற்றவாளியல்ல

### —பிரதியமைச்சர் ஹர்ஷ—

(கொழும்பு)

முன்னாள் வெளிவிவகார அமைச்சர ரவி கருணாநாயக்க சட்டத்தின் முன் குற்றவாளி அல்ல என்று தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் பிரதியமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ரவி கருணாநாயக்கவின் இராஜினாமா புதிய சம்பிரதாயத்திற்கான முதற்படி என்றும் அது அடுத்தகட்ட விசாரணைகளுக்கு சிறந்த தீர்வு என்றும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலின் காலத்திலும் இதுபோன்ற பிரச்சினைகள் இருந்ததுடன், சேமலாப நிதியம் தொடர்பிலும் பாரிய பிரச்சினைகள் இருந்தன.

இவை தொடர்பில் வாசுதேவ நாணயக்காரவினால் முறைப்பாடு செய்யப்பட்டு ஒப்புவிக்கப்பட்ட போதிலும் இவற்றுக்கு எதிராக அப்போதைய ஆட்சிக்காலத்தில் சரியான தீர்வு வழங்கப்படவில்லை என்று ஹர்ஷ டி சில்வா கூறியுள்ளார்.

அது மாத்திரமன்றி தாஜுடீனின் உயிரிழப்பு கொலை என்று உறுதியாகிய போதிலும், அதனை விபத்தினால் நிகழ்ந்த மரணமாக ஒப்புவிக்க கடந்த அரசாங்கம் முயற்சித்ததாகவும், பிரதேச சபை தலைவர் ஒருவர் 100 பெண்களை துஷ்பிரயோகம் செய்து குற்றவாளியாகிய போதும், அதுபோன்றவர்கள் இராஜினாமா செய்வதையோ குற்றத்தை ஒப்புக் கொள்வதையோ காண முடியவில்லை என்றும் பிரதியமைச்சர் ஹர்ஷ டி சில்வா மேலும் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் புலிகளின் காலத்தில் காடுகள் அழிக்கப்படவில்லை

## வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரன் தெரிவிப்பு



(மன்னார்)

விடுதலைப் புலிகளின் காலத்தில் காடுகள் அழிக்கப்படவில்லை. மாறாக வளர்க்கப்பட்டது, மலைகள் உடைக்கப்படவில்லை மாறாக மலைகள் உள்ளிட்ட கனிய வளங்கள் காப்பாற்றப்பட்டன.ஆனால் இப்போது காடழிப்பு மட்டுமல்லாது கனிய வளங்களும் சூறையாடப்படுகின்றன என வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் நடைபெற்ற வடக்கு மாகாண சபையின் அமர்வில் மேற்படி பிரேரணையை முன் மொழிந்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். மேலும் முல்லைத்தீவு மாவட்டத்தின் கனிய வளங் கள் உரிய அளவுப் பிரமாணங்களையும் மீறி அகழப்படுவதும் அகழப்படும் இடங்கள் மீள் நிரப்பப்படாமல் விடப்படுவதும் நடைபெறுகின்றன. இவற்றுக்கு அனுமதிகள் வழங்கும் துறைசார் பிரிவினர்கள் அனுமதிகள் வழங்கும் போது காட்டும் அக்கறைகளை பிழையான வகையில் நடைபெறும் அகழ்வின் போதும் சரி அகழ்வுகளின் பின் செய்ய வேண்டிய நடைமுறைகளை பின்பற்றாமைகளின் போதும் சரி அதனைப்பற்றி அக்கறை காட்டுவதில்லை அல்லது உரிய நடவடிக்கைகளை எடுப்பதில்லை. இதனால் நீண்ட நெடுங்காலங்களாக பாதுகாக்கப்பட்ட இக் கனிய வளங்கள் சட்டவிரோதிகளின் கைகளுக்கு மாறி விட்டதோ? என எண்ணத் தோன்றுகின்றது. இதனைக் காப்பாற்றாவிட்டால் இயற்கைச் சமநிலையில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டு மோசமான அழிவுகளை நோக்கி எமது மாவட்டம் தள்ளப்படலாம் என கருதுகின்றேன்.

அரசின் சுற்றுச்சூழல் கொள்கைகளுக்கு மாறாக மிகப் பெரிய அழிவுப் பாதைகளுக்கு இட்டுச் செல்லக்கூடிய வகையான இச் செயல்களைச் செய்பவர்களையும் செய்பவர்களுக்கு துணை போகின்றவர்களையும் இனங்காண வேண்டும். அவர்களுக்கு எதிராக தக்க நடவடிக்கைகளை எடுக்கவும் அழிவுகளிலிருந்து முல்லை மண்ணை காப்பாற்றவும் சுற்றுச்சூழ்ல் அமைச்சின் பொறுப்பை சுமந்து கொண்டிருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை இச் சபை கோருகின்றது.

கனியவளங்கள் தொடர்பில் கருங்கல்அகழ்வு பற்றிவட மாகாணசபையின் 9ஆவது அமர்வில் 2014.05.22 ஆம் திகதி என்னால் ஒரு பிரேரணை கொண்டு வரப்பட்டது. அதன் பொருட்டு பல அதிகாரிகள் வந்து பார்வையிட்டனர். இது விடயம் இன்று வரை சீராகவில்லை. வளங்கள் பலதும் சட்டத்திற்கு முரணான வகையில் அள்ளப்பட்டு மாவட்டம் அழிக்கப்படுகின்றது. அனுமதிகள் வழங்கும்போது அதிகாரிகள் காட்டும் அக்கறை அகழ்வுகளின் பின் செய்யப்பட வேண்டிய சீராக்கலில் ஏன்? காட்டுவதில்லை. இதனோடு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் புவிச்சரிதவியல் அளவை சுராங்கங்கள் பணியகம் மற்றும் வன இலாகாவின் பொறுப்பிலுள்ள இடம் என்றால் அவர்கள் இப்படி இதற்குரிய பொறுப்பிலுள்ளவர்கள் ஏராளம். ஆனால் எதுவித கண்காணிப்புக்களும் இல்லை. கருங்கல் அகழ்வைப் பொறுத்தமட்டில் 6மீற்றர் ஆழம் அனுமதிக்கப்படுகின்றது. பின்பு அதனை மூட வேண்டும். அதில் மரங்கள் நாட்ட வேண்டும் இப்படி பல முறைகள் உண்டு. இவை யாவும் மீறப்படுகின்றன.

விதிக்கப்பட்ட ஆழத்தை மீறியதான அகழ்வு, விதிக்கப்பட்ட அகலத்தை மீறியதான அகழ்வு இந்த மலைகளை உடைப்பதில் சுற்றுப்புறச்சூழலகளில் பாதிப்பு பாரிய சத்தத்துடனான வெடிச்சத்தம், குடியிருப்புக்களில் மக்கள் திகைப்பு, நிலம் நடுங்குதல், இரண்டு கிலோ மீற்றர் தூரத்திலுள்ள வீடுகள், கட்டடங்களில் வெடிப்புக்கள் போன்றவற்றை உரியவர்கள் அழைத்துச் சென்று காட்டினார்கள். ஒரு சில அரசியல்வாதிகள் ஒரு சில அதிகாரிகளின் ஒத்துழைப்புக்களுடன் இக்கனிய வள அகழ்வு சட்டத்திற்கு முரணாக இயற்கை ஒழுங்கமைப்பைச் சிதைக்கவல்ல இந்த முறையற்ற அகழ்வுகள் தொடர்பில கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்வது இச் சபையின் கடமையாகின்றது. அவசிய மாகின்றது. முறைகேடான அகழ்வுகள். முறைகேடான அனுமதிகள் கண்காணிக்கப்படுகின்றதா? ஆறு மீற்றர் ஆழம் தான் கருங்கல் அகழ முடியும். ஒட்டுசுட்டானில் 80 மீற்றர் ஆழத்துக்கு மேல் அகழ்ந்து விட்டார்கள். ஆழம் மட்டுமல்ல அகலமும் பாரியளவில் உள்ளது. என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள் என சம்பந்தப்பட்டவர்களை கேட் கின்றேன்.

கிரவல் மணல் என முரணான வகையில் அகழப்பட்டுள்ளதையே நான் சுட்டிக்காட்டுகின்றேன். சரியான அளவீடுகளில் அகழ்வதையும் அகழ்வின் பின் உரிய வகையில் சீராக்கல் நடப்பதையும் வரவேற்கின்றேன். பிழையானவற்றையும் அதற்குத் துணை போகின்றவர்களின் செயல்களையுமே எதிர்க்கின்றேன். மக்கள் முறையிடுகின்றார்கள். கடந்த வாரம் புலிமச்சிநாத குளம் சென்றேன். கிராம மக்கள் திரண்டு வந்து விட்டார்கள். தங்களின் கிராமத்தைக் காப்பாற்றுங்கள் என்றார்கள். என்னிடம் அதிகாரம் இருந்தும் உடனடியாக மேற்கொண்ட நடவடிக்கைகளின் பலன் முறைகேடான மணல் அகழ்வு நிறுத்தப்பட்டு விட்டது.

அப்போது அங்கு வந்த வன இலாகா பிரிவினர் துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான் ஆகிய மூன்று பிரதேசங்களுக்கும் தாம் எட்டுப்பேர் மட்டும் வனப் பாதுகாப்பு கடமையிலிருப்பதால் முழுவதையும் கண்காணிப்பதில் சிரமங்கள் ஏற்படுவதாக தெரிவித்தனர்.

ஒருவிடயம் சொல்கின்றேன். சரியானதைச் சொல்வதில் தப்பில்லை என எண்ணுகின்றேன். விடுதலைப் புலிகளின் காலத்தில் காடுகள் அழிக்கப்படவில்லை, காடுகள் வளர்க்கப்பட்டது. மலைகள் உடைக்கப்படவில்லை மலைகள் உள்ளிட்ட கனிய வளங்கள் காப்பாற்றப்பட்டது.

இப்போது காடழிப்புக்கள் மட்டுமல்ல காடுகள் எரிக்கப்படுவதும் நடக்கின்றது. கேட்பதற்கு யாருமில்லை. வாருங்கள் கனியவள அகழ்வுகளால் வீழ்த்தப்பட்டிருக்கும் மரங்களைக் காட்டுகின்றேன்.

அதல பாதாளத்துக்கு செல்லும் கருங்கல் அகழவைக்காட்டுகின்றேன். பல ஏக்கர் கணக்கில் கிரவல் தோண்டப்பட்டு நீரில்லாத குளங்களைப்போல் நீரில்லாத ஆறுகளைப் போல் உள்ள ஆழமான நிலப் பரப்பைக் காட்டுகின்றேன். பெரும்பாலான அனுமதிகள் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்படுகின்றது. மாவட்டத்தின் வளங்களில் 80 வீதமானவற்றை அழித்து விட்டார்கள். மீதியையாவது காப்பாற்றுங்கள் என்று தான் கத்துகின்றேன்.

இந்த விடயம் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட வேண்டும். அவர் சுமந்து கொண்டிருக்கும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு அமைச்சின் பலவீனமே இவைகள் நடைபெறுவதற்கு காரணம். சட்டத்துக்கு முரணாக நடைபெறும் இவைகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். முறைகேடாக நடந்து கொண்டவர்கள் இதற்கு துணை நிற்பவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன் என தெரிவித்தார். (4-8)




# கல்வி தொடர்பான கருத்துக்கள்,பிரச்சினைகளை வலயவாரிய அலுவலகத்திற்கு தெரியப்படுத்தலாம்

## துணுக்காய் வலயவாரியத் தலைவர் அறிவிப்பு

துணுக்காய் கல்வி வலயத்தின் தீர்மானம் மேற்கொள்ளும் புதிய அமைப்பாக துணுக்காய் வலயக் கல்வி வாரியம் 10.12.2016 முதல் இயங்கி வருகிறது.

இது வடமாகாண அமைச்சர்கள் வாரியத்தினாலும் ஆளுநராலும் அங்கீகரிக்கப்பட்ட இரண்டு வருட முன்னோடிச் செயற்றிட்டமாகும்.

இவ்வாரியம் கலைத் திட்டம், தேர்வுகள், ஓய்வூதியம் தவிர்ந்த ஏனைய தீர்மானங்கள் மேற்கொள்ளலை வட மாகாணக் கல்வி அமைச்சிலிருந்து பொறுப்பேற்றுள் துணுக்காய் கல்வி வல தில் அதிபர்கள் மற்றும் ரியர்களுக்கான சகல புதிய ஆட்சேர்ப்புக்களையும் பணி நிறைவுறுத்தல்களையும் வலயப் பணிப்பாளருடன் இணைந்து இவ்வமைப்பு மேற்கொண்டு வருகிறது.

வலயவாரியம் 27 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. இதில் பாடசாலை மாணவர் அமைப்புக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 6 மாணவ உறுப்பினர்களும் சமூகத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 உறுப்பினர்களும் மற்றும் வடமாகாணக் கல்வி அமைச்சர், செயலாளர்,மாகாணக் கல்விப்பணிப்பாளர் ஆகியோரால் நியமிக்கப்பட்ட வலயக்கல்விப் பணிப்பாளர் உட்பட 11 உறுப்பினர்களும் உள்ளடங்குகின்றனர்.

பொதுமக்கள் துணுக்காய் வலயத்தின் கல்வி தொடர்பான தங்களது கருத்துக்கள், பிரச்சினைகள் மற்றும் முறைப்பாடுகளை வலய வாரியம், வலயக்கல்வி அலுவலகம்,துணுக்காய் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்என வலயவாரியத்தலைவர் அறிவித்துள்ளார்.புதிய வலய நிர்வாகத்தை அமுலாக்கும் இலங்கையின் ஒரே கல்வி வலயம் துணுக்காய் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## விளக்கமறியல் நீடிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - முரசுமோட்டை பகுதியில் சிறுமி ஒருவரை துஷ்பிரயோகம் செய்ததாக கூறப்படும் சந்தேக நபர்களை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக கடந்த மாதம் சந்தேக நபர்கள் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்திய போதே இந்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. (8-312)

## நூறாவது நாளை எட்டியுள்ள சுகாதாரத் தொண்டர்களின் போராட்டம்




வட மாகாண சுகாதாரத் தொண்டர்கள் நிரந்தர நியமனம் வழங்கக்கோரி, வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு முன்பாக மேற்கொண்டு வந்த போராட்டம் நேற்று 100 ஆவது நாளைக் கடந்தும் தொடர்கிறது.

இதனை முன்னிட்டு அடையாள உண்ணாவிரதம் ஒன்றினை நேற்றுக் காலை 8 மணிமுதல் மாலை 5 மணி வரை தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த சுகாதாரத் தொண்டர்கள் மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது நிரந்தர நியமனம்தொடர்பான கோரிக்கை அடங்கிய மகஜரொன்று வவுனியா மாவட்ட பிரதம கணக்காளர் அ.பாலகுமாரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து மன்னார் வீதியினூடாக பேரணியாகச் சென்ற அவர்கள். கோரிக்கை மகஜரினை வவுனியா பிராந்திய சுகாதாரப் பணிமனை பிரதி பணிப்பாளர் மகேந்திரனிடமும் கையளித்துள்ளனர்.

தொடர்ந்து, அவர்கள் பேரணியாக தமது போராட்ட களத்திற்குச் சென்று அடையாள உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தினை மேற்கொண்டு வருகின்றனர். (8-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் விபத்து
## ஒருவர் காயம்

வவுனியா, குருமன்காடு சந்தியில் நேற்று இரவு இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குருமன்காடு சந்தியிலிருந்து மன்னார் வீதியூடாக பயணித்த துவிச்சக்கர வண்டியின் மீது அதே வழியில் பயணித்த் மோட்டார் சைக்கிள் பின்பகுதியில் மோதியதாலேயே குறித்த விபத்து சம்பவித்துள்ளது.

இந்நிலையில், துவிச்சக்கர வண்டியை செலுத்திய நபர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு விரைந்த போக்குவரத்து பொலிஸார் காயமடைந்த நபரை வைத்தியசாலையில் அனுமதிக்காது அவரது வீட்டிற்கு அழைத்துச் சென்று சேர்த் துள்ளதாக அருகிலிருந்த வர்கள் விசனம் வெளியிட்டு ள்ளனர்.

பின்னர் விபத்துக்குள்ளான நபரின் வீட்டு உறவினர்கள் அவரை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (3-8)

# விளக்கமறியல் நீடிப்பு

கிளிநொச்சியில் விபத்துக்குள்ளான சொகுசு பேருந்து சாரதியை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் பதில் நீதவான் எஸ். சிவபால சுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது நேற்று முன்தினம் குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது.

ஏ-9 வீதியில், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த சொகுசு பேருந்து ஒன்று கடந்த 4 ஆம் திகதி அதிகாலை 2.30 மணியளவில வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த சம்பத்தின் போது மின்கம்பங்கள், தொலைத் தொடர்பு கம்பங்கள், கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகம் என பன சேதமாக்கப்பட்டதுடன், பேருந்தில் பயணித்த நான்கு பேர் காயமடைந்திருந்தனர்.

இந்த விபத்து தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் கிளிநொச்சிப் பொலிஸார் இதன் சாரதியை கைது செய்து வழக்குப்பதிவு செய்து அந்த சாரதியை கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியுள்ளனர்.

இந்த நிலையில், விளக்கமறியலில் உள்ள சாரதியை நேற்று முன்தினம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியதை தொடர்ந்து நாளை மறுதினம் 14ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)

# மாட்டு வண்டில் சவாரிப் போட்டி

கிளிநொச்சி மாவட்ட மாட்டு வண்டில் சவாரிச் சங்கத்தின் அனுசரணையுடன் பூநகரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கமும் பூநகரி விவசாய பெருங்குடி மக்களும் இணைந்து நடத்துகின்ற மாபெரும் மாட்டு வண்டில் சவாரிப் போட்டி நாளை 13 ஆம் திகதி அன்று பூநகரி நல்லூர் சாமிப்புலம் மடத்துப்பிட்டி சவாரித்திடலில் பி.ப 01.00 மணிக்கு நடைபெறும் இப் போட்டியில் போட்டியாளர்களையும் பார்வையாளர்களை யும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றனர் பூநகரி பிரதேச கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினரும் பூநகரி பிரதேச விவசாய பெருங்குடி மக்களும். (8-23)





முழங்காவில் மகா வித்தியாலயம், முக்கொம்பன் மகா வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளைச் சேர்ந்த 85 மாணவர்களுக்கு நேற்றுக் காலை தேசிய ஒருமைப் பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அமைச்சின் செயற்றிட்டத்தின் கீழ் 85 துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

# முதியோர் பாடகர் தெரிவுப் போட்டி

வட மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தினால் சிறந்த முதியோர் பாடகர்களைத் தெரிவு செய்யும் போட்டிகள் நேற்று வெள்ளிக்கிழமை காலை அலுவலக மண்டபத்தில் நடத்தப்பட்டது.

மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் தலைமையில் நடத்தப்பட்ட இந்நிகழ்வில் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் மாவட்ட மட்டப் போட்டிகளில் கலந்து கொண்டனர்.

முதலாமிடத்தை கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவில் வைத்தியசாலை வீதி, கண்டாவளை எனும் முகவரியைச் சேர்ந்த சின்னத்தம்பி கனகராசா பெற்றுக் கொண்டார்.

இரண்டாமிடத்தை கரைச்சி பிரதேச செயலகப் பிரிவில் இல.101, புதுமுறிப்பு எனும் முகவரியைச் சேர்ந்த செல்லையா ரட்ணகுமார் பெற்றுக் கொண்டார்.

மூன்றாமிடத்தை பச்சிலைப் பள்ளி பிரதேச செயலகப் பிரிவில் தம்பகாமத்தைச் சேர்ந்த கந்தையா ஆறுமுகம் ,பூநகரி பிரதேச செயலகப் பிரிவில் கிருஸ்ணாநகர், முழங்காவில் எனும் முகவரியைச் சேர்ந்த திருமதி.பத்திநாதர் பிலோமினா ஆகிய இருவர் பெற்றுக் கொண் டுள்ளனர்.

வட மாகாணத்தின் ஏனைய 4 மாவட்டங்களிலும் இப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. (3-8)




# வயோதிபரின் சடலம் மீட்பு

(வவுனியா)

வவுனியா, தேக்கவத்தைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் வவுனியா பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

வவுனியா, தேக்கவத்தைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் தனிமையில் வயது முதிர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் வசித்து வந்த நிலையில் நேற்றுக் காலை குறித்த வீடு மதியம் வரை திறக்கப்படாமையால் அருகில் வசிப்பவர்கள் சந்தேகம் அடைந்து வீட்டில் வசித்தவரின் பெயரைக் கூறி அழைத்துள்ளனர். ஆனால் வீடு நீண்ட நேரமாகவும் திறக்கப்படாமையால் வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் வீட்டை திறந்து பார்த்த போது குறித்த குடும்பஸ்தர் சடலமாக காணப்பட்டுள்ளார். இதனையடுத்து பொலிஸார் தற்போது தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன் மரணத்திற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

எஸ். கணேசலிங்கம் (வயது-70) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். (8-250)

# உள்ளூராட்சி மன்ற தேர்தல் விண்ணப்பம் கோரல்

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி சார்பில் மன்னார் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு ஆர்வமுள்ளவர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆர்வமுள்ளவர்கள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 7 ஆம் திகதிக்கு முன்னதாக மன்னார் மாவட்ட ஐக்கிய தேசிய கட்சி அலுவலகத்திற்கு தமது விண்ணப்பப் படிவங்களை அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் நகர சபை, மன்னார் பிரதேச சபை, முசலி பிரதேச சபை, நானாட்டான் பிரதேச சபை, மாந்தை மேற்கு பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான விண்ணப்பப் படிவங்களே இவ்வாறு கோரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(7-8)

# வடமாகாண ஆணழகனாக கிளிநொச்சி மைந்தன் தெரிவு

(கிளிநொச்சி)

கிளி/ பொது அமைப்புக்களின் அனுசரணையுடன் மக்கள் குரல் மணிக்குரல் விளம்பர சேவையினரின் ஏற்பாட்டில் வடமாகாண ஆணழகனான தெரிவு செய்யப்பட்ட செ.சுகபிரியலின் பாராட்டு விழா கடந்த 2 ஆம் திகதி பவர் ஒப் ஜேசு உடல் உள வலுவூட்டல் வளாகத்தில் நடைபெற்றுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட மைந்தனும் கிளி.பவர்ஒப்ஜேசு உடல் உள வலுவூட்டல் பயிற்சி நிலையத்தின் இயக் குநரும் பயிற்சி ஆசிரியருமான செ.ஜேசுகபிரியல் கடந்த 10.06.2017 அன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற 2017 ஆம் ஆண்டின் வடமாகாண ஆணழகன் போட்டியில் மேற்பிரிவில் (50 வயதிற்கு மேல்) வடமா காண ஆணழகனாக தெரிவு செய்யப்பட்டதுடன் ஓகஸ்ட் மாதம் கொழும் பில் நடைபெறவுள்ள தேசிய மட்டப் போட்டியில் பங்கு பெற தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (8)

# கிளிநொச்சியில் கடற்படையின் சீமெந்து தொழிற்சாலை?

கிளிநொச்சி- பொன்னார் வெளி கிராமத்தில் கடற்படையின் ஒத்துழைப்புடன் சீமெந்து தொழிற்சாலை அமைக்கப்படுவதாக மாகாண மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் முன்வைத்த குற்றச்சாட்டை எதிர்க்கட்சி உறுப்பினர் வி.தவநாதன் மறுத்துள்ளதுடன், கடந்த ஆட்சியில் எதிர்த்தவர்கள் இந்த ஆட்சியில் ஆதரிப்பதாகவும் தெரிவித்திருக்கின்றார்.

வடமாகாண சபையின் 101 வது அமர்வு நேற்றைய தினம் நடைபெற்றிருந்தது.

இதன்போது முல்லைத் தீவு மாவட்டத்தில் வளங்கள் சூறையாடப்படுவது தொடர்பான பிரேரணை ஒன்றை மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் சபைக்கு முன்மொழிந்திருந்தார்.

குறித்த பிரேரணை தொடர்பாக உரையாற்றும் போது அமைச்சர் அனந்தி சசிதரன் இவ்வாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பொன்னார் வெளி கிராமத்தில் கடற்படையின் ஒத்துழைப்புடன் சீமெந்து தொழிற்சாலை ஒன்றை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது தொடர்பாக பொன்னார்வெளி கிராம மக்கள் தமக்கு முறைப்பாடு கொடுத்துள்ளதாக சுட்டிக்காட்டினார். இதனை மறுத்த எதிர்க்கட்சி உறுப்பினர் வி.தவநாதன்,

கடந்த ஆட்சியில் மேற்படி சீமெந்து தொழிற்சாலையை எதிர்த்தவர்கள் இந்த ஆட்சியில் அதனை ஆதரிக்கிறார்கள் எனவும் கடற்படைக்கும் அதற்கும் தொடர்பில்லை எனவும் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவே அதற்கு ஒப்புதல் வழங்கியிருப்பதாகவும் தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய மாகாண சபை உறுப்பினர் ப.அரியரட்ணம், மேற்படி சீமெந்து தொழிற்சாலைக்கு மாவட்ட ஒருங்கிணைப்பு குழு ஒப்புதல் வழங்கவில்லை என தெரிவித்ததுடன், மேற்படி பொன்னார்வெளி கிராமத்தில் டோக்கியோ சீமெந்து நிறுவனம் சீமெந்து தயாரிப்பதற்கு அங்குள்ள கற்கள் பயன்படுமா? என ஆராய்ச்சி நடத்தியதாகவும் அந்த ஆராய்ச்சி முடிவுகள் அடுத்த ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னரே [illegible] தெரிவிக்கின்றார். (3-8)

# குடியிருப்புக்களுக்கு அருகில் குண்டுகள் செயலிழக்க வைப்பு
## மக்கள் விசனம்



கிளிநொச்சியில் மக்கள் செறிந்து வாழும் குடியிருப்புக்களிற்கருகில் குண்டுகளைச் செயலிழக்க வைக்கும் இராணுவத்தினரின் செயற்பாடுகள் தொடர்பில் மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

கிளிநொச்சி, உமையாள்புரம் மற்றும் தட்டுவன்கொட்டி, ஆனையிறவு பகுதிகளில் உள்ள மக்கள் குடியிருப்புகளுக்கு அருகிலேயே குறித்த செயற்பாடுகளை இராணுவத்தினர் முன்னெடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2 மாதங்களாக குறித்த பகுதியில் இவ்வாறு குண்டுகள் செயலிழக்க செய்யும் நடவடிக்கைகள் முன் னெடுக்கப்படுவதாகவும், இதனால் தாம் அச்சத்துடன் வாழ்ந்து வருவதாக அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

மக்கள் குடியிருப்புக்கள் அமைந்துள்ள பகுதியிலிருந்து சுமார் 250 மீற்றர் தொலைவில் இவ்வாறான செயற்பாடுகள் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வெடிபொருட்களின் சிதைவுகள் குடியிருப்புக்களை அண்மித்த பகுதிகளில் வந்து வீழ்வதாகவும், அதனால் தமக்கு ஆபத்துக்கள் ஏற்படலாம் எனவும் மக்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

எனவே இவ்வாறு செயலிழக்க செய்யும் வெடி பொருட்களை மக்கள் குடியிருப்புக்களுக்கு அருகில் மேற்கொள்ளாது, பொருத்தமான பகுதிகளுக்கு மாற்ற வேண்டும் என மக்கள் தெரிவிக்கின்றனர். (3-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'தமிழ் எங்கள் மொழி சைவம் எங்கள் வழி' உலக சைவ இளைஞர் மாநாடு யாழில் ஆரம்பம்











(படங்கள்: - பொ.சோபிகா)





(யாழ்ப்பாணம்)

"தமிழ் எங்கள் மொழி சைவம் எங்கள் வழி" எனும் தொனிப்பொருளில் உலக சைவ இளைஞர் மாநாடு நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் பேரெழுச்சியுடன் ஆரம்பமானது.

அகில இலங்கை சைவ மகாசபையின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த மாநாட்டின் ஆரம்ப நாளான நேற்றைய தினம்மாபெரும்பேரணி நல்லை ஆதீன முன்றலில் இருந்து ஆரம்பமாகியது. இப்பேரணி கோவில் வீதி, நாவலர் வீதி, பலாலி வீதி ஊடாக வைத்தியசாலை வீதியைச் சென்றடைந்து, சத்திரச் சந்தி, கே.கே.எஸ் வீதி, யாழ் இந்துக்கல்லூரி வீதி வழியாக வந்து நீராவியடி இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியை அடைந்தது.

இதில் பறை, தப்பு, உடுக்கை, சங்குடன் பழந் தமிழர் வாத்தியமான பேரிகை போன்ற இசைக்கருவிகளை நூற்றுக்கணக்கான இளையவர்கள் இசைத்தவண்ணம் பேரணியாக யாழ்.நகரை வலம் வந்தனர்.

சைவத்தமிழ் மறுமலர்ச்சியில் இளைஞரின் பங்கும் பணியும் என்ற தலைப்பில் ஆரம்பமாகிய முதல் அமர்வில் பல்வேறு கலை நிகழ்வுகள், ஆய்வரங்குகள், சிறப்புரைகள் இடம்பெற்றன. நேற்றைய தினம் ஆரம்பமாகிய மாநாடு இன்றும் நாளையும் பல்வேறு அமர்வுகளாக நடைபெறவுள்ளன.

நேற்றுக் காலை நல்லை ஆதீன முன்றலில் ஆரம்பமாகிய பேரணியை வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் ஆரம்பித்து வைத்தார். இப் பேரணியில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், தென்கயிலை ஆதீன குரு குருமகா சந்நிதானம் தவத்திரு அகத்தியர் அடிகளார், தமிழக பேருராதீன இளைய பட்டம் தவத்திரு மருத்தாச்சலம் அடிகளார், கலாநிதி ஆறு. திருமுருகன், உட்பட பலர் கலந்து கொண்டு ஆசி வழங்கியிருந்தனர். இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் ஆரம்பமாகிய இந்த மாநாட்டில் மக்கள் பிரதிநிதிகள், வடக்கு-கிழக்கு, மலையகத்தை சேர்ந்த இளைஞர் பிரதிநிதிகள், தமிழக, புலம்பெயர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், சமூக தலைவர்கள் , மாணவர்கள், சிவத்தொண்டர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-9)

# ஒல்கோட் மாவத்தையின் ஒருவழிப் பாதைக்கு பூட்டு



கொழும்பு புறக்கோட்டை ஒல்கோட் மாவத்தையின் ஒருவழிப் பாதை நேற்று பல மணி நேரம் மூடப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். கோட்டை ரயில்நிலையத்திற்கு முன்பாக முன்னாள் படை வீரர்கள் மேற்கொண்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை அடுத்தே வீதி மூடப்பட்டது.(இ-7)

# மத்திய வங்கி முறி மோசடியில் மூளையாக செயற்பட்ட பிரதமர் பதவி விலக வேண்டும்

## நாமல் ராஜபக்ஷ வலியுறுத்து



ரவியை இராஜினாமா செய்வித்து இவ்வாட்சியிலுள்ள மகா திருடர்கள் தப்பித்துக்கொள்ளப் போகிறார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தற்போது மத்திய வங்கியில் இடம்பெற்ற இந்த மிகப் பெரும் ஊழல் மோசடிகளின் பின்னணியில் ரவி கருணாநாயக்க மாத்திரமில்லை. இன்னும் பலர் ஒளிந்துள்ளனர். 2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற மத்திய வங்கியின் முறிகளை ஏலம் விடும் கலந்துரையாடலில் பிரதமரின் நெருங்கிய நண்பரான மலிக் சமரவிக்கிரம மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் கபீர் ஹாசிம் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

இவர்கள் நாட்டின் நிதி தொடர்பான கலந்துரையாடலில் கலந்து கொண்டுள்ளனர். இந்த விடயமே இதன் பின்னால் மிக முக்கியமான நெருங்கிய புள்ளிகள் மறைந்திருப்பதை அறிந்துகொள்ளச் செய்கிறது.

இன்னும் வெளிப்படையாக சொல்லுவதானால் இதன் பின்னால் இலங்கை நாட்டின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இருக்க வேண்டும்.இந்த விடயம் மிகவும் நீதியான முறையில் கையாளப்பட வேண்டுமாக இருந்தால் ரவி கருணாநாயக்கவுடன் சேர்த்து பிரதமரும் தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த முறி மோசடியில் ஒரு இலட்சம் கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் கூறியுள்ளார். எனவே.ரவி கருணாநாயக்கவின் குறித்த அமைச்சு இராஜினாமா என்பது மகா திருடர்கள் தப்பிக்க அனைவரையும் திசை திருப்ப மேற்கொள்ளப்பட்ட ஒன்றாகும்.

எனவே இவர் தொடர்பான விசாரணைகள் நீதியாக மேற்கொள்ளப்படுவதோடு குறித்த ஊழல் சொத்துக்கள் அரசுடைமையாக்கப்பட வேண்டும் எனவும் நாமல் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)


31 ஆம் நாள் நினைவு

அமரர். திருமதி.

இராஜகுலசிங்கம் சந்திரமலர்

பிறப்பு 1953 - 08 - 12

இறப்பு 2017 - 07 - 13



எம் வாழ்வு சிறக்க உம் வாழ்வை
உரமாக்கிய செம்மல் நீ
எம் உலகம் நீ என்பதறியாது
எமைவிட்டு பிரிந்ததேனோ!
மற்றொரு பிறப்பு உண்டென்பது
உண்மையெனில் வந்திடுவீர் எம்மிடமே!

இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்

இல.18, சிவநகர், உருத்திரபுரம்.

(சி/9309)

நீங்கா நினைவுகளுடன் குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இலங்கையின் எதிர்காலத்தை மாற்றும் குப்பைகள் மூலமான வேலைத் திட்டம்

குப்பைகளின் மூலமாக மின்சாரத்தை பெறும் முதலாவது வேலைத்திட்டம் இலங்கையின் எதிர்காலத்தை மாற்றும் நகர்வாக அமையும். 10 ஆண்டுகளுக்கு முன்னர் முன்னெடுக்க வேண்டிய ஒரு நடவடிக்கை இன்று முன்னெடுக்கப்படுகின்றது என அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

மேல்மாகாணத்தில் குப்பைகளின் மூலமாக மின்சாரத்தை பெற்றுக்கொள்ளும் வேலைத் திட்டம் நேற்று முன்தினம் கரதியான பிரதேசத்தில் ஆரம்பித்து வைக்கப் பட்டது.

பாரிய அபிவிருத்தி மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் குப்பைகளின் மூலமாக மின்சாரத்தைப் பெறும் வேலைத் திட்டம் மிகப் பெரிய வெற்றியல்ல. ஆனாலும் குப்பை பிரச்சினைக்கு தீர்வு காண இது மிகச்சிறந்த வேலைத் திட்டமாக கருதப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பிதழும் நன்றி நவிலலும்



தோற்றம்
1932.06.09

இறப்பு
2017.07.15

அமரர்.திருமதி. **மகேஸ்வரி நாகப்பர்** (ஓய்வுபெற்ற ஆசிரியை)

கடந்த 15.07.2017 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவிக்கு நேரடியாக அஞ்சலி செய்தோர், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோர், மலர் வளையம், பனர் மூலம் அஞ்சலி செலுத்தியோர் மற்றும் துண்டுப் பிரசுரம் விநியோகித்தோர் ஆகாரம், பானம் வழங்கியோர் அனைவருக்கும் எமது நன்றியை தெரிவிப்பதுடன் அன்னாரின் அந்தியேட்டி கிரியைகள் நாளை 13.08.2017 ஞாயிற்றுக் கிழமை காலை 4.00 மணிக்கு தெனியம்மன் அந்தியேட்டி மடத்திலும் சபிண்டீகரணக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 11.00 மணிக்கும் இடம்பெறும். இவ்விரு நிகழ்வுகளிலும் கலந்து கொள்வதுடன் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அனைவருக்கும் தனிப்பட்ட அழைப்புகள் வழங்க முடியாதிருப்பதனாலும் இதைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

சி-9308

ஓடை அல்வாய் தெற்கு, அல்வாய்.

☎ : 021 226 4671

இங்ஙனம், குடும்பத்தினர்.


யாழ். மண்ணில் முதன் முறையாக சினிமா பாடல்களுடன்

பிரபல தென்னிந்திய பாடகர் கலைமாமணி
**உன்னிகிருஷ்ணன்**
**உத்ரா உன்னிகிருஷ்ணன்**
இணைந்து வழங்கும்
**இன்னிசை பாடிவரும்...**
மாபெரும்
திரை இசை நிகழ்ச்சி

இன்று
மாலை 6.00
மணிக்கு



நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு: K.T.பிரசாத்

டிக்கெட் கிடைக்குமிடங்கள்:
- பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். 021 222 6693
- த போன் சொப், நெல்லியடி.077 285 0285
- நிகழ்வு இடம்பெறும் இடத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ். ஸ்ரான்லி வீதி லிங்கம் கூல்பார் முன்பாக உள்ள மைதானம் (வெலிங்டன் தியேட்டர்)

Event Management C.A.C
Tel: 077 550 4910

டிக்கெட்டுக்கள்: 300/= 500/= 1000/=



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1160

Search for people, places and things | Nagendram | Home

### சிநேகன்




### திவ்யா




### வான்மதி




### யதுர்ஷனா




### கவி




### நிருஜா

மீனாக பிறந்து சாவது என்று முடிவெடுத்துவிட்டால்.

பொழுதுபோக்கிற்கு மீன் பிடிப்பவனின் தூண்டிலில் சிக்காதே.

பிழைப்பிற்காக மீன் பிடிப்பவனின் வலையில் சிக்கிடு.



உன் மரணமும் ஒருவனை வாழ வைக்கட்டும்...!!!

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் ஃபேஸ்புக்கில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றைக் கலாசாரத்தை திணித்தால் இந்தியா வெடித்துச் சிதறும்

## சீதாராம் யெச்சூரி எச்சரிக்கை

இந்தியாவில் பன்முகத் தன்மையை பாதுகாக்க வேண்டிய தேவையுள்ளது. மதம், மொழி பெயரில் ஒற்றைக் கலாசாரத்தை திணித்தால் நாடு வெடித்துச் சிதறி விடும் என்று மாநிலங்களவையில் பேசிய சீதாராம் யெச்சூரி எச்சரிக்கை விடுத்தார்.



மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளரான சீதாராம் யெச்சூரி கடந்த 12 ஆண்டுகளாக மாநிலங்களவை உறுப்பினராக செயற்பட்டு வருகிறார். மக்கள் நலனை, தேச நலனை பாதுகாப்பதில் அவரது பங்கு தனித்துவமானது, சிறப்பானது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கையின் வழி நின்று, ஒட்டு மொத்த நாட்டின் நலனுக்காக, மதச்சார்பின்மைக்காக அவர் ஆற்றிய உரைகள் நாடாளுமன்ற வரலாற்றில் சிறப்பிடம் பெறுபவை.

நாடு முழுவதும் வயல்களில், தொழிற்சாலைகளில், கிராமங்களில், நகரங்களில், கல்விச் சாலைகளில் நடைபெறும் போராட்டங்களின் குரலை, நாடாளுமன்றத்திற்குள் எதிரொலித்த அவருடைய கர்ஜனை முக்கியத்துவம் வாய்ந்தது. சிறப்பான நாடாளுமன்ற பங்களிப்பிற்காக விருதினை சீதாராம் யெச்சூரி பெற்றுள்ளார்.

இந்நிலையில், தொடர்ந்து இரண்டாவது முறை மாநிலங்களவை எம்.பி. யாக தேர்வு செய்யப்பட்ட யெச்சூரியின் பதவிக்காலம் நேற்றுடன் நிறைவு பெற்றது.

மேற்குவங்காளத்தைச் சேர்ந்த சீதாராம்யெச்சூரி உடன் அம்மாநிலத்தை திரிணாமூல் காங்கிரஸ் எம்.பி. க்கள் இருவரும் இன்றுடன் பதவியை நிறைவு செய் கிறார்கள்."

பதவி நிறைவடையவுள்ள நிலையில் நேற்று முன்தினம் மாநிலங்களவையில் பேசிய யெச்சூரி, "இந்தியாவில் பன்முகத் தன்மையை பாதுகாக்க வேண்டிய தேவை உள்ளது. மதம், மொழி, கலாசாரம் என்ற பெயரில் ஒற்றைக் கலாசாரத்தை திணித்தால் இனியும் பன்முகத் தன்மை நிலைத் திருக்காது. இந்தியா சுக்கு சுக்காக வெடித்து சிதறும்.

நான் தெலுங்கு பேசும் பிராமண குடும்பத்தில் சென்னையில் பிறந்தேன். என்னுடைய பள்ளி படிப்பு ஐதராபாத்தில் உள்ள இஸ்லாமிய கலாசாரமையத்தில்பயின்றேன். இஸ்லாமிய மதத்தின் சூபி பிரிவைச் சேர்ந்த பெண்ணை நான் திருமணம் செய்து கொண்டேன். என் மனைவியின் தாய் ராஜ் புட் சமுதாயத்தை சேர்ந்தவர்.

இப்படி இருக்கையில் என்னுடைய மகன் எப்படி அறியப்படுவார்? அவன் யார்? பிராமணனா? இந்துவா? முஸ்லிமா?. இந்தியன் என்பதை தவிர அவனை எப்படி கூற முடியும்" என்றார். (3-8)

# பாகிஸ்தான் பிரதமருக்கு இந்திய பிரதமர் வாழ்த்து

(டில்லி)

பாகிஸ்தான் நாட்டின் புதிய பிரதமராக பொறுப்பேற்றுள்ள ஷாகித் ககான் அப்பாஸிக்கு பிரதமர் நரேந்திர மோடி, சுஷ்மா சுவராஜ் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.





பனாமா பேபபரஸ் ஊழல் விவகாரத்தில் அந்நாட்டு நீதிமன்ற உத்தரவை அடுத்து பாகிஸ்தான் பிரதமர் பதவியை நவாஸ் ஷெரீஃப் இழந்தார்.

பிரதமர் பதவியிலிருந்து நவாஸ் ஷெரீஃப் பதவி விலகிய நிலையில், புதிய பிரதமராக ஷாகித் கான் அப்பாஸி கடந்த வாரம் தேர்வு செய்யப்பட்டார்.

பாகிஸ்தான் நாட்டின் புதிய பிரதமராக பொறுப்பேற்றுள்ள ஷாகித் ககான் அப்பாஸிக்கு பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்துக்களை தெரிவித்தார்.

அதேபோல், பாகிஸ்தான் நாட்டின் புதிய வெளியுறவுத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள காவஜா ஆசிப்புக்கு இந்திய வெளி யுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் கடிதம் மூலம் வாழ்த்துக்களை தெரிவித்தார்.

இந்தியாவுடனான பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண தயாராக இருப்பதாக புதிய பிரதமர் அப்பாஸி தெரிவித்து இருந்தமை குறிப்பிடத்தக்கது. (3-8)

# சீன நிலநடுக்க பாதிப்புக்கு பிரதமர் மோடி இரங்கல்

எல்லைப் பகுதியில் பதற்றமான சூழல் நிலவி வரும் நிலையில், சீன நிலநடுக்க பாதிப்புக்கு பிரதமர் நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்தார்.

சீனாவின் சிச்சுவான் மாகாணத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது, ரிக்டர் அளவில் 6.5 ஆக பதிவானது. இந்த நிலநடுக்கத்தால், அங்கு பலத்த சேதம் ஏற்பட்டது.

நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்பில் பலர் உயிரிழந்துள்ளனர். நூற்றுக்கணக்கானோர் காயம் அடைந்தனர். மீட்புப் பணிகள் தீவிரவாக நடைபெற்று வருகிறது. ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்து இடம் பெயர்ந்துள்ளனர்.

இந்நிலையில், சீன நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்புக்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

எல்லைப் பகுதியில் பதற்றமான சூழல் நிலவி வரும் நிலையில் பிரதமர் மோடி சீன நிலநடுக்கத்துக்கு இரங்கல் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-8)

பாரதச் செய்தி

# தீயில் கருகி இடிந்தது ஐந்து மாடிக் கட்டடம்

சித்தூர் புடைவைக் கடையில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் 5 மாடி கட்டடம் இடிந்து விழுந்தது. இச்சம்பவம் குறித்து, சித்தூர் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள்.

ஆந்திர மாநிலம் சித்தூர் தேவாலய வீதியில் 5 மாடி கட்டடத்தில் 'அபூர்வா' என்ற மிகப்பெரிய புடைவைக் கடை உள்ளது. இந்த கட்டடம் சுமார் 40 ஆண்டுகள் வரை பழைமையானது. கீழ் தளம் முதல் மேல் தளம் வரை ஆடைகள் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தன.

இதில் ஏராளமான தொழிலாளர்கள் வேலை செய்து வந்தனர். நேற்றிரவு 10 மணியளவில்பணி முடிந்து வேலையாட்கள் புறப்பட்டு சென்ற பிறகு, புடைவைக் கடை பூட்டப்பட்டது.

இந்நிலையில், நேற்று அதிகாலை நேரத்தில் மின்கசிவு காரணமாக திடீரென தீ விபத்து ஏற்பட்டது. தீ வேகமாக கடை முழுவதும் பரவி பயங்கரமாக எரிந்தது. இதனால் அப்பகுதியில் புகை மூட்டம் சூழ்ந்தது.

காவலாளிகள், உடனடியாக தீயணைப்பு துறையினருக்கு தகவல் கொடுத்தனர். 2 தீயணைப்பு வாகனங்களில் ஏராளமான வீரர்கள் விரைந்து வந்தனர்.

புடைவைக் கடைக்குள் தண்ணீரை பாய்ச்சியடித்து தீயை அணைக்க போராடினர். தீ விபத்தால் கட்டடம் தளர்ந்தது. தீயணைப்பு துறை வீரர்கள் வெளியில் இருந்தே தீயை அணைக்க முயற்சித்தனர்.

அப்போது, 5 மாடி கட்டடமும் திடீரென இடிந்து விழுந்து தரைமட்டமானது. தீயணைப்பு துறையினர், முன்னெச்சரிக்கையாக விபத்து பகுதியை சுற்றிலும் பொது மக்கள் யாரையும் உள்ளே அனுமதிக்காததால், பெரும் அசாம்பாவிதம் தவிர்க்கப்பட்டது.


இதனால் கட்டடம் இடிந்து விழுந்ததில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. 'ஆனாலும், புடைவைக்கடை முழுவதும் நாசமானதால், ரூ.5 கோடி மதிப்பு துணிகள் எரிந்து நாசமாகின.

இந்த மதிப்பு முதற்கட்டமாக தெரிவிக்கப்பட்டு உள்ளது. மொத்த இழப்பு குறித்து கணக்கெடுக்கப்பட்டு வருகிறது. மேலும், கட்டடம் தரைமட்டமானதால், மாசு படர்ந்துள்ளது.

தரைமட்டமான கட்டடத்தின் பொருட்களை அப்புறப்படுத்தும் நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இச்சம்பவம் குறித்து, சித்தூர் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள். (8)

# விடைபெற்றார் ஹமீத் அன்சாரி வாழ்த்து தெரிவித்தார் மோடி

இந்தியாவின் துணை ஜனாதிபதியாக பதவி வகித்த ஹமீத் அன்சாரி நேற்று முன்தினத்துடன் தனது பதவியில் இருந்து ஓய்வு பெற்றுக் கொண்டார்.



இதன் காரணமாக நேற்று முன்தினம் மாநிலங்களவையில் பிரிவு உபசார விழா நடைபெற்றது. குறித்த நிகழ்வில் பாரதப் பிரதமர் மோடி உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டு ஹமீத் அன்சாரிக்கு பாராட்டு தெரிவித்துள்ளனர்.

இதன்போது, "ஹமீத் அன்சாரியின் குடும்பம் 100 வருடங்களுக்கும் மேலாக பொதுச் சேவையில் ஈடுபட்டு வருகின்றது. அன்சாரி நீண்ட காலம் வாழ வேண்டும்" என பிரதமர் வாழ்த்து தெரிவித்ததோடு நினைவுப் பரிசு ஒன்றினையும் வழங்கி வைத்துள்ளார்.

மேலும் நிகழ்வின் போது, காங்கிரஸ், பா.ஜ.க உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டு ஹமீது அன்சாரியின் சேவைகளை நினைவு கூர்ந்ததோடு வாழ்த்துக்களையும் தெரிவித்திருந்தனர். (3-8)

# ராஜீவ் கொலை குற்றவாளிகள் விடுதலை குறித்த தமிழக அரசின் உத்தரவு செல்லுமா?

## உச்ச நீதிமன்றில் விசாரணை

(சென்னை)

ராஜீவ்காந்தி கொலை குற்றவாளிகள் விடுதலை குறித்து தமிழக அரசு வெளியிட்ட உத்தரவு செல்லுமா? என்ற மனுவின் மீது 14ஆம் திகதி உச்சநீதிமன்றில் விசாரணை நடைபெறுகிறது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய 3 பேருக் கும் விதிக்கப்பட்ட தூக்கு தண்டனையை 2014ஆம் ஆண்டு உச்சநீதிமன்றில் ஆயுள் தண்டனையாக குறைத்ததுடன், 3 பேரையும்விடுதலை செய்வது குறித்து உரிய அரசு முடிவு எடுக்கலாம் என்றும் தெரிவித்தது.

இதைத் தொடர்ந்து, 3 [illegible] ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் நளினி, ராபர்ட் பயாஸ், ரவிச்சந்திரன், ஜெயக்குமார் ஆகிய 7 பேரையும் விடுதலை செய்யப்போவதாக தமிழக அரசு அறிவித்தது. இதனை எதிர்த்து அப்போதைய மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசு உச்சநீதிமன்றில் ரிட் மனு தாக்கல் செய்தது. இதில் உச்ச நீதிமன்றம் 7 பேரையும் விடுதலை செய்வதற்கு இடைக்கால தடைவிதித்தது.

இந்தவழக்கில் ராஜீவ் காந்தி கொலை வழக்கு கைதிகளை விடுவிப்பது குறித்து தமிழக அரசு வெளியிட்ட உத்தரவு செல்லுமா? என்பது குறித்த கேள்வியை விசாரிக்க நீதிபதிகள் ரஞ்ஜன் கோகாய், பிரபுல்ல சி.பந்த், ஏ.எம்.கன்வில்கர் ஆகியோர் அடங்கிய அமர்வு அமைக்கப்பட்டது. இந்த வழக்கு நீண்ட நாட்களாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

இந்நிலையில் நேற்று முன்தினம் ராஜீவ் காந்தி கொலை குற்றவாளிகளில் ஒருவரான பேரறிவாளன் சார்பில் சட்டத்தரணி ராமசுப்பிர மணியன் உச்சநீதிமன்றில் நீதிபதி ரஞ்ஜன் கோகாய் தலைமையிலான அமர்வு முன்பு ஆஜராகி, பேரறிவாளன் உள்ளிட்ட ராஜீவ் கொலை குற்றவாளிகள் கடந்த 26 ஆண்டுகளுக்கும் மேலாக சிறைத் தண்டனை அனுபவித்து விட்டனர். அவர்கள் தொடர்பான இந்த வழக்கு நீண்ட நாட்களாக நிலுவையில் இருப்பதால் அதனை அவசர வழக்காக விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.



இதனை ஏற்றுக்கொண்ட நீதிபதி ரஞ்ஜன் கோகாய் இந்த வழக்கு வருகிற 14ஆம் திகதிக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று உத்தரவிட்டார். (3-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சீனாவில் கோர விபத்து

## 36 பேர் பலி; 13 பேர் படுகாயம்



சீனாவின் சான்சி மாகாணத்தில் பேருந்து சுரங்கப் பாதை சுவரில் மோதி பயங்கரமான விபத்துக்குள்ளானதில் 36 பேர் பரிதாபமாக பலியாகினர். மேலும் 13 பேர் படுகாயமடைந்தனர்.

சீனாவின் சான்சி மாகாணத்தில் தொலைதூர பேருந்து சுரங்கப் பாதை சுவரின்மீது மோதி பயங்கர விபத்துக்குள்ளான சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

சுமார் 50 பேர்வரை பயணிக்கும் அந்த தொலைதூர பேருந்து சிச்சுவான் மாகாணத்தில் உள்ள செங்க்டு நகரில் இருந்து மத்திய சீனாவில் உள்ள லுயாங் நகரை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

சான்சி மாகாணத்தின் தலைநகரான சியான் - கன்சாங் நான்குவழிச் சாலையில் உள்ள குயின்லிங் சுரங்கப்பாதை வழியாக சென்ற போது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து சுரங்கப்பாதையில் பக்க வாட்டு சுவரின் மீது பயங்கரமாக மோதி விபத்துக்குள்ளானது.

இக்கோர விபத்தில் இரண்டு குழந்தைகள் உட்பட 36 பேர் பரிதாபமாக பலியாகினர். படுகாயமடைந்த 13 பேர் அருகாமையில் உள்ள வைத்தியசாலை களில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சீனாவில் நெடுஞ்சாலைகளில் அதிக வேகம் காரணமாக இதுபோன்ற விபத்துகள் ஏற்படுவது பெருகி வருகிறது. சீனாவில் ஆண்டு தோறும் சுமார் 2.6 இலட்சம் பேர் வீதி விபத்துகளில் உயிரிழப்பதாக உலக சுகாதார அமைப்பு கவலை தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (3-8)




## விபத்துக்குள்ளான இரட்டை அடுக்கு பேருந்து; பலர் காயம்



தெற்கு லண்டனில் இரட்டை அடுக்கு பேருந்து ஒன்று கட்டடம் ஒன்றில் மோதுண்டு விபத்துக்குள்ளனதில் பலர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விபத்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை லவன்டர் ஹில் பகுதியில் ஏற்பட்டுள்ளது. இந்தச் சம்ப வம் தொடர்பில் கேள்வியுற்ற பொலிஸார் குறித்த பகுதிக்கு விரைந்து சென்றதாகவும் காயமுற்றோரை வைத்திய சாலையில் அனுமதித்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விபத்து தொடர்பில் கருத்து தெரிவித்த பொலிஸார், "இந்த விபத்தைத் தொடர்ந்து பாதைகள் மூடப்பட்டன. பேருந்தை செலுத்திய சாரதி உட்பட பயணிகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்" என தெரிவித்தார்.

குறித்த விபத்து தொடர்பில் வெளியாகிய காணொலிகள் மற்றும் ஒளிப்படங்களில் விபத்துக்குள்ளான கட்டடத்திற்கு பாரிய சேதம் ஏற்பட்டுள்ளமை தெளிவாக அவதானிக்கக் கூடியதாக உள்ளது. (3-8)



அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பை திறமை இல்லாதவர் என சித்தரிக்கும் வகையில் வெள்ளை மாளிகை முன்பு காற்றடைத்த கோழி பொம்மை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

## வடகொரியாவின் மிரட்டலை கையாள அமெரிக்காவிடம் திட்டம் உள்ளது

### ட்ரம்ப் திட்டவட்டம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் குயாம் தீவு மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்துவோம் என வடகொரியா எச்சரிக்கை விடுத்துள்ள நிலையில் வடகொரியாவின் இந்த மிரட்டலை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து அமெரிக்கா திட்டமிட்டுள்ளது என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.


அமெரிக்காவின் குயாம் தீவு மீது ஏவுகணை தாக்குதல் நடத்துவோம் என வடகொரியா எச்சரிக்கை விடுத்துள்ளது. இது அமெரிக்காவுக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தற்போது நியுஜெர்சியில் உள்ள பெட்மினிஸ்டர் என்ற இடத்தில் தனது விடுமுறையை குடும்பத்துடன் கழித்து வரு கிறார். இந்த நிலையில் வடகொரியா மிரட்டல் குறித்து அவர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் தெரிவித்ததாவது, வடகொரியாவின் மிரட் டலை எப்படி கையாள்வது என்பது குறித்து அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. அதைப்பற்றி பேச வேண்டியதில்லை. நான் மற்ற ஜனாதிபதிகளை போன்று இல்லை. ஈராக்கின் மொசூலில் 4 மாதங்களாக அமெரிக்க இராணுவம் முகாமிட்டுள்ளது. இது குறித்து நான் எதுவும் பேசவில்லை. ஆனால் அங்கு நடக்கப்போவது என்ன என்பதை பார்ப்போம்.

வடகொரியாவை பொறுத்தவரை அதன் நடவடிக்கைகள் கடும் கோபத்தை அதிகரிக்கும் என்பதை என்னால் உறுதியாக கூறமுடியும் அமெரிக்காவையோ அல்லது அதன் நட்பு நாடுகளையோ வடகொரியா தாக்க நினைத்தால், நினைத்து பார்க்க முடியாதபடி இழப்புகளை அந்நாடு சந்திக்கும் என்றார்.

ட்ரம்பின் இத்தகைய கடும் எச்சரிக்கையால் அமெரிக்கா-வடகொரியா இடையே போர் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ளது. (3-8)

## வடகொரியாவின் ஏவுகணையை இடைமறிக்க முடியும்-ஜப்பான்



(டோக்கியோ)

அமெரிக்க தீவை நோக்கி செலுத்தும் வடகொரியாவின் ஏவுகணைகளை சட்டப்படி இடைமறிக்க முடியும் என்று ஜப்பான் நாட்டின் இராணுவ அமைச்சர் ஒனோடெரா தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுக்கு சொந்தமான குவாம் தீவின் மீது 4 ஏவுகணைகளை ஏவி தாக்குதல் நடத்தப்போவதாக வடகொரியா விடுத்துள்ள மிரட்டல், உலக அரங்கை அதிர வைத்துள்ளது.

அடுத்த சில தினங்களில் இதற்கான திட்டத்தை வடகொரியா இறுதி செய்யப்போவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடகொரியாவின் 'ஹசோங்-12' ஏவுகணைகள், ஜப்பா னின் மீது பறந்து சென்று குவாம் தீவுக்கு அருகே 30 கி.மீ. தொலைவில் கடலில் விழும் என தெரிகிறது.

குறிப்பாக ஜப்பானின் ஷிமானே, ஹிரோஷிமா, கொய்ச்சி மாகாணங்களின் மீது அந்த ஏவுகணைகள் பறந்து செல்லும்.


குவாமை குறி வைத்து வடகொரியா ஏவுகணைகளை ஏவினால், அந்த ஏவுகணைகளை சட்டப்படி இடைமறிக்க முடியும் என்று ஜப்பான் நாட்டின் இராணுவ அமைச்சர் ஒனோடெரா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் ஜப்பான் பாராளுமன்றத்தின் கீழ்சபை குழுவில் பேசும் போது, "அமெரிக்காவின் பசுபிக் பகுதி நோக்கி ஏவுகணை செலுத்தினால், அதைத் தாக்குவதற்கு ஜப்பான் அனு மதிக்கப்பட வேண்டும். இது தான் ஜப்பான் அரசின் நிலைப்பாடு" என்று குறிப்பிட்டார்.

ஆனால் குவாம் தீவு மீது செலுத்தப்படுகிற ஏவுகணையை சுட்டுத்தள்ளும் திறன், ஜப்பானிடம் தற்போது இல்லை என்று வல்லுநர்கள் கூறுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (3-8)

## சூரியனை விட பெரிதான இரு கோள்கள்

### மனிதர்கள் வாழ முடியும்




சூரியனை சுற்றி இரண்டு பெரிய கோள்கள் இருப்பதாகவும் 12 ஆண்டுகளின்பின்னர் மனிதர்கள் அங்கு வாழ முடியும் என்றும் கண்டறிந்துள்ளனர்.

இதனை இங்கிலாந்தின் ஹெர்ட்ஃபோர்ட்ஷையர் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் மற்றும் கலிபோர்னியா சாண்டா குரூஸ் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் அடங்கிய வானியல் குழுவினர் மொத்தம் நான்கு புவி-அளவிலான கிரகங்கள் சூரியன் போன்ற நட்சத்திரத்தை சுற்றிக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துள்ளனர். அவை பூமியைவிடப் பெரியதாக இருந்தாலும், மிக அருகில் உள்ள சூரியனைப் போன்ற விண்மீன்களைக் கண்டறிந்த மிகச் சிறிய கிரகங்களுள் 1.7 பூமியின் மொத்த பரப்பளவைக் கொண்டவை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் வளிமண்டலம் மிகவும் சூடாகவோ அல்லது மிகவும் குளிராகவோ இல்லை, அதன் மேற்பரப்பில் திரவ நீரைத் தக்கவைக்கக்கூடிய ஒரு நட்சத்திரத்தைச் சுற்றி "கோல்டிலைக்ஸ்" மண்டலம் எனப் படும் மண்டலம் உள்ளது என முன்னணி ஆய்வாளரான டாக்டர் ஃபேபோ ஃபெங் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று குறித்த கிரகங்கள் பற்றி ஆய்வாளர் பெங் தெரிவிக்கையில்,

இக் கிரகங்கள் 'உயிர்காப்பாற்றுவதற்கு பதிலாக பாறைகளால் தயாரிக்கப்படுகிறது' என்றும், அவை வாழ்க்கைக்கு உதவுவதற்கான வாய்ப்புகளை அதிகரிக்கும் என்றும் தெரிவித்தார்.

மேலும், 2013 ஆம் ஆண்டில் குறித்த ஆய்வாளர்களினால் வெளியிடப்பட்ட ஒரு ஆய்வானது அதே குழுவினரால் ஆராய்ச்சி செய்யப்பட்டு, முன்னேற்றத்திற்கான அடிப்படையை அமைத்துள்ளது. அத்துடன் விண்வெளியின் செயற்பாடு பல்வேறு அலை நீளங்களில் எவ்வாறு மாறுபட்டுள்ளது என்பதைக் காண முடிந்தது. கிரகங்களின் சமிக்ஞையிலிருந்து இந்த செயற்பாட்டை பிரிக்க அந்த தகவலைப் பயன்படுத்தியது என்பதை நாங்கள் உணர்ந்தோம்' என்று ஒரு அறிக்கையில் முன்னைய அறிக்கையை மீட்கும் பொழுது மைக் டுமோ கூறினார். இந்நிலையில் எமது ஆய்வுகள் தொடரும் எனவும் பூமியை வெறுக்கும் மனிதர்கள் குறித்த கோள்களில் வாழக்கூடிய வாய்ப்புக்கள் கிடைக்கப் பெறும் எனவும் குறித்த விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (3-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திருடர்களைப் பிடிக்க விசேட நீதிமன்றம்

## அமைச்சர் மனோ அறிவிப்பு

(கொழும்பு)

நாம் இப்போது செயற்பாட்டில் இறங்குவோம். விசேட நீதிமன்றமொன்றை பெயரிடுவோம். பழைய திருடர்கள் அனைவரையும் பிடிக்க ஆரம்பிப்போம் என தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் இராஜினாமா அறிவிப்பு இடம்பெற்றதன் பின்னர் பாராளுமன்றத்தில் வைத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.


ரவி கருணாநாயக்கவுக்கு எதிராகப் பேசியவர்கள் அனைவரும் மிகப் பெரும் திருடர்கள். அவர்களுக்கு தேவையாக இருந்தது ரவி கருணாநாயக்கவை விலக்குவது அல்ல. அரசாங்கத்தைக் கவிழ்ப்பது.

ரவி கருணா நாயக்கவுக்கு எதிராக பேசுவதற்கு எவருக்கும் தார்மீக உரிமை கிடையாது. சரியாயின் அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு முன்னர் கூட்டு எதிர்க் கட்சியிலுள்ள அனைவரும் இராஜினாமா செய்திருக்க வேண்டும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)



# அமெரிக்க-இலங்கை உறவுகளை உச்சத்துக்கு கொண்டு செல்வேன்

## பிரசாத் காரியவசம் நம்பிக்கை



இலங்கையின் வெளிவிவகாரச் செயலர் பதவியின் மூலம் தாம் அமெரிக்கா-இலங்கை இடையிலான உறவுகளை மேலும் பலப்படுத்தவுள்ளதாக, அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் பதவியில் இருந்து விலகும் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுக்கான தூதுவராக பணியாற்றிய பிரசாத் காரியவசம், வெளிவிவகார அமைச்சின் செயலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், வோஷிங்டனில் உள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் அவருக்கு நேற்று முன்தினம் பிரியா விடை அளிக்கும் நிகழ்வு இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய பிரசாத் காரியவசம், “இலங்கை வெளிவிவகார செயலராக பதவியேற்பது மகிழ்ச்சி தருகிறது.

இலங்கை- அமெரிக்கா ஒத்துழைப்பை மிகச் சிறந்த புதிய உச்சத்துக்கு கொண்டு செல்வதற்கு, தொடர்ந்தும் பங்களிப்புச் செய்வதற்கு இந்த வாய்ப்பைப் பயன் படுத்திக் கொள்வேன்.

அமெரிக்காவுக்கான தூதுவர் பதவியை விட்டுச் சென்றாலும், அமெரிக்க-இலங்கை உறவுகளுக்கான தூதுவராக தொடர்ந்து இருக்க விரும்புகிறேன்" என்று தெரிவித்தார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த பிரியாவிடை நிகழ்வில், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான இணைச் செயலர் தோமஸ் சானொன் மற்றும் இலங்கையின் நலன் விரும்பிகள், அமெரிக்க அரச பிரதிநிதிகள், வோஷிங்டனில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகள், வர்த்தக பிரமுகர்கள், சிவில் சமூக மற்றும் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ-7)

# வைத்தியர்கள் நாட்டைவிட்டு செல்லும் நிலை

வைத்தியர்கள் மற்றும் விசேட வைத்திய நிபுணர்களுக்கு நாட்டின் சுகாதார துறைக்குள் நிலைத்திருக்க முடியாத நிலை காணப்படுவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக சில வைத்தியர்கள் தமது ஆரம்ப நியமனங்களைக் கூட பெற்றுக் கொள்வதில்லை என்று அந்தச் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் நவீன் டி சொய்சா தெரிவித்தார்.

அதேபோன்று வைத்தியர்கள் நாட்டை விட்டுச் செல்லும் நிலைமையும் ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

# ராஜபக்ஷ ஆதரவாளர்களே இன்னும் அரச பொறுப்புக்களில் உள்ளனர்

## அமைச்சர் ராஜித விசனம்



அரசாங்கம் மாறியுள்ள போதிலும் அரச பொறுப்புக்கள் மாறாதுள்ளதனாலேயே மகிந்த ராஜபக்ஷ கால திருடர்கள் தப்பித்து வருவதாக சுகாதார அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

அமைச்சர் ரவி கருணாநாயக்க தொடர்பான விசாரணைகள் மிக விரைவாகவும் துரிதமாகவும் முன்னெடுக்கப்பட்டன. அதன் விளைவே அவர் குற்றவாளியல்லாத நிலையிலும் இராஜினாமா செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நல்லாட்சி அரசாங்கத்திலுள்ள ஒரு அமைச்சருக்கு எதிராக இவ்வாறு விசாரணை நடைபெறுகின்றது.

இருப்பினும், கடந்த அரசாங்கத்திலுள்ளவர்களின் குற்றச்சாட்டுக்கள் அடங்கிய ஆவணங்கள் மீது மந்தகதியி லேயே விசாரணை இடம் பெற்று வருகின்றது. இதற்குப் பிரதான காரணம் அரசாங்கம் புதிதாக மாறியிருந்தாலும், அரச பொறுப்புக்களி லுள்ளவர்கள் கடந்த அர சாங்க ஆதரவாளர்களாகவே இருக்கின்றனர்என்பதாகும் எனவும் அமைச்சர்மேலும் சுட்டிக்காட்டினார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

# ஆபத்தில் சில ரகங்கள்

தாமாக வருபவை பாதி, நாமாக இழுத்துக் கொள்பவை மீதி என்கிற ரீதியில்தான் நாம் துன்பங்களையும் ஆபத்தான விடயங்களையும் வாழ்க்கையில் எதிர் கொள்ள வேண்டியிருக்கிறது. மேசை யின் முனையில் கண்ணாடி டம்ளரை வைக்கிறோம். அது விழாது என்று நினைக்கிறோம். ஆனால் அது மிகவும் முனையில் வைக்கப்பட்டிருப்பதால் அதன் அடுத்த இலக்கு தரைதான். நாம் மேசை யில் வேறு ஒன்றை எடுக்கும்போது நம்மையும் அறியாமல் முழங்கைபட்டு பளர் ஆகிறது. அதுவே மேசையின் மைய த்தில் வைக்கப்பட்டிருந்தால் அது உடைபடும் வாய்ப்பு குறைவு.

ரயிலில் அமர்ந்து பயணம் செய்வதற்கும் கதவருகே நின்று எட்டிப் பார்த்தபடி பயணம் செய்வதற்கும் இடையே நிறைய வேறுபாடு இருக்கிறது. பின்னால் உள்ள கதவே நிற்கிற ஆளை ஒரு தட்டுத்தட்டி எமனாக மாறி விடலாம். அதாவது, கதவருகே நின்று பயணம் செய்யும் போது சுமார் 25 சதவிகித ஆபத்து எப்போதும் இருக்கிறது.

அமர்ந்து பயணம் செய்யும்போது இருக்கக் கூடிய மனநிலை இப்படிப்பட்ட தருணத்தில் இருக்கக்கூடாது. மாறாக, நாம் சிறு ஆபத்தான நிலையில் இருக்கி றோம். எனவே நாம் கொஞ்சம் கவனமாக இருக்க வேண்டும். கம்பியை இறுகப் பிடித்துக் கொள்ள வேண்டும். தட்டிக் கீழே தள்ளிவிடக் கூடிய கதவைக் காலால் தடுத்துக் கொள்ள வேண்டும் என்றெல் லாம் மனத்தை ஒரு கணம் உசுப்பிவிட வேண்டுமே தவிர பிக்னிக் மூடில் இருந் துவிடக் கூடாது.

கையில் பத்து ரூபாயுடன் போகும் போதும் பத்தாயிரம் ரூபாயை வங்கியில் கட்டப் போகும் போதும் ஒரே மனநிலை இருக்கக் கூடாது. இந்தப் பத்தாயிரம் ரூபாய் என்பது நம்முடைய இத்தனை மாத உழைப்பு. இதைத் தவற விட்டால் நம் பெயர் கெட்டுவிடும் என்பதோடு நம்மைப் பின்னோக்கி வேறு தள்ளி விடும் என்கிற நினைப்பை டியூப்பில் காற்று ஏற்றுவதைப் போல் மெல்ல ஏற்றிக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், பறிகொடுத்து விட்டும் தொலைத்துவிட்டும் நிற்க வேண்டி விடும்.

பழகும் நண்பர்கள், உறவினர்களிடம், யார் எப்படிப்பட்டவர்கள் என்பதை எடை போட்டுப் பழக வேண்டும். பலபேர் நம்மை ஏகப்பட்ட ஆபத்தில் கொண்டுபோய்ச் சிக்க வைத்து விடுகிறார்கள். இது அவர்களின் சாதுரியம் அல்ல; மாறாக நம்முடைய கவனக் குறைவு.

ஒரு தொகையை முதலீடு செய்கிறோம்; சிலருக்குக் கடன் கொடுக்கிறோம். இப் படிப்பட்ட விடயத்திலும் இனிப் பாதுகாப்பு அளவுகோள்களைப் பயன்படுத்தலாம். வாழ்க்கையின் ஒவ்வொரு செயலையும் இனி கீழ்க்கண்ட பாணியில் பிரித்துப் பார்க் கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

மிகப் பாதுகாப்பானது, ஓரளவு பாதுகாப்பானது, கவனமாக இருக்க வேண்டியது, ஆபத்தானது, மிக ஆபத்தானது.

வாழ்க்கையில் ஆபத்துக்களைக் கணிப்ப தில் நாம் வல்லவராகிவிட வேண்டும். இதில் வல்லவராகிவிட்டால் நம் முன்னேற்றங்க ளில் எந்தக் குறுக்கீடும் வராது.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்கிய ரவி



(கொழும்பு)

ரவிகருணாநாயக்க நேற்று முன்தினம் தனது அமைச்சர் பதவியை இராஜினாமா செய்த பின்னர் பத்தரமுல்லை ரஜமல்வத்தை வீதியில் இருக்கும் தனது வீட்டிற்கு சென்றார்.

அப்போது அவரது ஆதரவாளர்கள் அங்கு கூடி நின்று அமைச்சர் ரவி கருணாநாயக்க பதவி விலகியமைக்கு தமது கவலைகளை வெளியிட்டனர். அதனையடுத்து அவர்கள் முன்னிலையில் அமைச்சர் உரையாற்றுகையில்,

நீங்கள் பார்க்கும் எனது வீடு புனரமைக்கப்படுகிறது. நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த காலத்தில் எனக்கு உத்தியோகபூர்வ இல்லம் வழங்கப்பட்டிருக்கவில்லை. இதன்காரணமாகவே தேவையற்ற பிரச்சினைகள் ஏற்பட்டன. நான் யார் என்பது உங்களுக்கு தெரியும். நான் புதிய அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்தினேன். நாட்டில் உள்ள திருடர்கள் அனைவரும் எங்கள் மீது திருட்டு குற்றத்தை சுமத்துகின்றனர். நாங்கள் தூய்மையானவர்கள். நாம் முன்னோக்கி செல்ல வேண்டும். நாட்டை தூய்மைப்படுத்த வேண்டும். நாம் அனைவரும் இணைந்து நாட்டை உருவாக்குவோம். நான் பெருமையுடன் இந்த முடிவை எடுத்தேன். என்னால் முடிந்தது என்றால் ஏன் மற்றவர்களுக்கு முடியாது. நாங்கள் அரசாங்கத்தில் இருந்தாலும் எதிர்க்கட்சியில் இருப்பது போல் உள்ளது. நாம் அனைவரும் இணைந்து உண்மையான அரசாங்கத்தை அமைத்து ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் ஐக்கிய தேசியக் கட்சி முன்னோக்கி செல்ல வேண்டும் என மேலும் தெரிவித்தார். (இ-7)




# பின்வரிசையில் அமர்ந்த ரவியுடன் அமைச்சர்கள், எம்.பிக்கள் செல்பி

அமைச்சுப் பதவியை இராஜினாமாச் செய்துகொண்ட ரவி கருணாநாயக்க ஆளும் தரப்பு பக்கத்தின் பின்வரிசையில் புத்திக எம்.பியின் ஆசனத்தில் சிறிது நேரம் அமர்ந்திருந்தார்.

அவருக்கு அருகில் சென்ற அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள்மற்றும்ஆளும்கட்சிஎம்பிக்கள் சிலர் அவருடன் செல்பி எடுத்துக் கொண்டனர்.

மத்திய வங்கியின் 2016 ஆம் ஆண்டுக்கான அறிக்கை தொடர்பான விவாதம், நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றுக் கொண்டிருந்தது.

இதன்போது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன், அமைச்சர் ரவி கருணாநாயக்க சபைக்குள் பிரவேசித்தார். ஆளும் தரப்பு எம்.பிகளும் பின்னாலேயே வந்தனர்.

வழமையைவிடவும் சபையின் இருபக்கங்களும் நிரம்பியிருந்தன. அமைச்சர் ரவி, தன்னுடைய ஆசனத்துக்கு வந்ததும், ஆளும் தரப்பைச் சேர்ந்த சிலர் அவருக்கு அருகில் சென்று தோள்களில் தட்டிக்கொடுத்தனர். இன்னும் சிலர் கைலாகு கொடுத்தனர்.

தனதுரையை 1:33க்கு ஆரம்பித்த அமைச்சர் ரவி, 1:45க்கு உரையை நிறைவு செய்தார். அவ்வப்போது ஆளும் தரப்பினர் மேசைகளில் தட்டி வரவேற்றனர். ஒன்றிணைந்த எதிரணியைச் சேர்ந்த சிலர் வாக்கு வாதப்பட்டதுடன் கிண்டலும் செய்தனர்.

தனதுரையை அவர் நிறைவு செய்தபோது ஆளும் தரப்பைச்சேர்ந்த பலரும் எழுந்துநின்று மரியாதை செய்தனர். அதன்பின்னர், பின்வரிசைக்கு சென்ற ரவி எம்.பி, புத்திக பத்திரணவின் ஆசனத்தில் சிறிதுநேரம் அமர்ந்திருந்தார். அவரைக் குழுமிக்கொண்ட பலரும் அவருடன் செல்பி எடுத்துக் கொண்டனர்.

இந்நிலையில், பிற்பகல் 2 மணியளவில், சபையை விட்டு வெளியேறிய ரவி எம்.பி, பத்தரமுல்லையில் உள்ள தன்னுடைய வீட்டுக்கு நேரடியாகச் சென்றார். அங்கு குழுமியிருந்த ஆதரவாளர்கள் அவரை மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வரவேற்றனர். அவருடைய வீட்டுக்கு பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்பு வழங்கியிருந்தனர். (இ-7)

# இன்னும் 3 மாதங்களில் ரவிக்கு அமைச்சுப் பதவி!

இன்னும் மூன்று மாதங்களில் அமைச்சுப்பதவியை வழங்குவதாக வாக்குறுதி அளித்த பின்னரே ரவி கருணாநாயக்க தனது பதவியை இராஜினாமா செய்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் டி.வி.சானக தெரிவித்துள்ளார்.

ரவி கருணாநாயக்கவின் இராஜினாமா தொடர்பில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

முன்னதாக திலக் மாரப்பன பதவியை இராஜினாமா செய்தார். பின்னர் பின் வாசலால் வந்து அவர் மீண்டும் அமைச்சுப் பொறுப்பை ஏற்றார்.

தற்போது ரவி கருணாநாயக்க இராஜினாமா செய்துள்ளார். அடுத்து இராஜினாமா செய்யும் அமைச்சை ரவி கருணாநாயக்க பொறுப்பேற்பார். இதுவே இவர்களின் நல்லாட்சி.

எல்லாம் நாடகம் இவற்றை இனிமேலும் நம்ப மக்கள் மடையர்கள் அல்ல என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பதவி விலகுவது பிணைமுறி பிரச்சினைக்குத் தீர்வல்ல

## அநுரகுமார எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

ரவிகருணாநாயக்க அமைச்சுப் பதவியில் இருந்து விலகுவதால் மட்டும் பிணைமுறி தொடர்பான பிரச்சினைகள் தீராது என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.



கொழும்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்.

"தொடரும் பிணைமுறி பிரச்சினைகள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளும் ஆணைக்குழுவினால் அமைச்சர் ரவி கருணாநாயக்க மீதான குற்றச்சாட்டுக்கள் தகுந்த சாட்சியங்களுடன் நிரூபிக்கப்பட்டுள்ளன.

இந்த விடயத்தில் தம்மை நல்லாட்சி என அடையாளப்படுத்தி ஆட்சிசெய்யும் இந்த அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்" என அநுரகுமார திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# வரட்சியால் விவசாயிகள் அவதி



யாழ். குடாநாட்டில் தொடர்ந்து நிலவும்வரட்சியான காலநிலையால் வரணிப் பிரதேசத்தில் உள்ள பெரும்பாலான குளங்கள் நீரின்றி வற்றி வரண்டு காணப்படுகின்றன.

இப்பிரதேச மக்களின் வாழ்வாதார தொழிலாக விவசாயம் காணப்படுகின்றது.

இந்நிலையில் இப்பிரதேசத்தில் உள்ள குளங்கள் வற்றியதால் பிரதேச மக்கள் விவசாயத்திற்குத் தேவையான நீரைப் பெற்றுக்கொள்வதில் பெரும் அசௌகரியங்களுக்கு ஆளாவதாக மக்கள் கவலையுடன் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கையெடுத்து பல வருடங்களாக தூர்வாரப்படாமல் அணைக்கட்டுக்கள் சேதமடைந்திருக்கும் வரணி பிரதேச குளங்களை உரிய வகையில் தூர்வாரி புனரமைத்துத் தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10-103)





இலங்கை அரசாங்கம் வழங்கிய புலமைப்பரிசில் மூலம் யாழ். தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கடமையாற்றும் ஜெ.சத்தியேந்திரன் நவீன தொழில்நுட்ப முறைகளில் தென்னைச் செய்கை பயிற்சியினை இந்தியா கர்நாடக மாநிலத்தில் அமைந்திருக்கும் பெங்களூர் பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் மூலம் பெற்று திரும்பியுள்ளார். வடமாகாணத்திலிருந்து இவர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் பணிப்பாளர் பேராசிரியர் வி.ஜி. தனக்குமாரிடமிருந்து பயிற்சிக்கான சான்றிதழ் பெறுவதனையும் இலங்கையிலிருந்து சென்ற தென்னைப் பயிர்ச்செய்கைச்சபை உத்தியோகத்தர் குழுவினருடன் அந்த நிறுவனப் பணிப்பாளரையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திட்டமிட்ட குற்றச் செயல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க பிரத்தியேக பொலிஸ் பிரிவு

## அமைச்சர் சாகல தெரிவிப்பு

(கொழும்பு)

போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட திட்டமிட்ட குற்றச் செயல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க பிரத்தியேக பொலிஸ் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது என்று சட்டம் ஒழுங்கு மற்றும் தென் மாகாண அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.



நேற்று முன்தினம் பாராளுமன்ற அமர்வின் போதே அமைச்சர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

பாதாள கும்பலையும், போதைப்பொருள் வியாபாரத்தையும் தடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும் எனவும் குற்றச் செயல்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# நான் திருடன் அல்லன் என்பதை எத்தனை அரசியல்வாதிகளுக்கு சொல்ல முடியும்?

## அமைச்சர் மனோகணேசன் கேள்வி

நான் ஒரு திருடன் அல்லன், என இந்த நாட்டில் இருக்கும் எத்தனை அரசியல் வாதிகளுக்கு சொல்ல முடியும் என எனக்கு தெரியவில்லை. ஆனால், நான் அத்தகைய ஒரு அரசியல் கட்சி தலைவர் என்று எனக்கு சொல்ல முடியும் என நினைக்கும் போது மிகவும் பெருமையாக இருக்கிறது என தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோகணேசன் தெரிவித்தார்.

தமிழகத்தின் பிரபல தலைமைத்துவ பயிற்சியாளர் பாரி வள்ளலால் ஜனநாயக இளைஞர் இணைய அங்கத்தவர்களுக்கு பயிற்சி செயலமர்வு கொழும்பில் நேற்று முன்தினம் நடத்தப்பட்டது.

தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சு கூடத்தில் நடைபெற்ற, இந்த தலைமைத்துவ பயிற்சி பட்டறையில் விசேட விருந்தினராக கலந்துகொண்ட ஜன நாயக மக்கள் முன்னணி - தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், அமைச்சருமான மனோ கணேசன் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் முன்னணி அமைச்சர் ஒருவர், அதிலும் ஆளும் அரசாங்க கூட்டணியின் பிரதான கட்சியின் உப தலைவர் ரவி கருணாநாயக்க, அரசாங்கத்தால் அமைக்கப்பட்டுள்ள விசாரணை ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டு, விசாரிக்கப்படுகிறார். அங்கே அரசாங்கத்தின் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் அமைச்சரை துளைத்து எடுக்கிறார்கள். கடந்த காலங்களில் கற்பனை செய்து கூட பார்க்க முடியாத அளவில் காரியங்கள் நடைபெறுகின்றன. இது நல்லாட்சி அரசாங்கம் என்பது இன்று நிரூபிக்கப்பட்டு விட்டது.

உண்மையில், பொது எதிரணிக்கு தேவைப்பட்டது ரவியின் இராஜினாமா அல்ல. நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வந்து, அதற்கு ஆதரவு அளிக்கவும், எதிர்க்கவும் முடியாத நிலைமையை அரசில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி எம்.பிக்களுக்கு ஏற்படுத்தி, அரசை ஆபத்தில் போட வேண்டும் என்பதே அவர்களின் எதிர்பார்ப்பு. இன்று, இவர்களின் எதிர்பார்ப்பில் மண் விழுந்து விட்டது.

ரவி கருணாநாயக்க தன் மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணை அதிகாரிகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை நல்கி தன்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் பொய்யானவை என நிரூபிக்க வேண்டும். அதை அவர் செய்வார் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. ஏனெனில் இந்த அரசாங்கம் அமைக்கப்பட்டதன் பிரதான அடிப்படைகளில் ஒன்று, ஊழல் ஒழிப்பு என்பதாகும். இந்த அரசாங்கத்தை அமைப்பதில் எங்களுடன் பாரிய பங்களிப்பை அவர் வழங்கியிருந்தார்.

ஒருபுறம் ஊழல் மற்றும் பிழைகளை இந்நாட்டில் இருந்து முழுமையாக ஒழிக்க எம்மால் இன்னமும் முடியாமல் இருந்தாலும் கூட, இன்று நாடு முழுக்க ஊழலுக்கு எதிராக ஒரு மக்கள் எழுச்சி ஏற்பட்டுள்ளதை பார்க்கும்போது மகிழ்ச்சியாக இருக்கிறது.

இந்த நாட்டின் வரலாற்றில் ஒருபோதும் இல்லாத முறையில் ஊழலுக்கு, திருட்டுக்கு, அதிகார துஷ்பிரயோகத்துக்கு எதிரான எழுச்சியும், அது தொடர்பில் நாடு முழுக்க மகிழ்ச்சியும் ஏற்பட்டுள்ளது. நான் பிரதிநிதித்துவம் செய்யும் மக்களுக்காக, சொந்த நிதியை பயன்படுத்தி பல்லாண்டுகளாக கட்சி நடத்தி வரும் எமக்கு இது பெரும் மகிழ்ச்சியை தருகிறது.

நான் ஒரு திருடன் அல்லன், என இந்த நாட்டில் இருக்கும் எத்தனை அரசியல் வாதிகளுக்கு சொல்ல முடியும் என எனக்கு தெரியவில்லை.

இந்த நாட்டில் பேசப்படும் மூன்று மொழிகளையும் பேசி, எழுத, படிக்க தெரிந்த அரசியல்வாதி நான் என எத்தனை அரசியல்வாதிகளுக்கு சொல்ல முடியும் என எனக்கு தெரியவில்லை. ஒரு நாளில் இருபது மணித்தியாலங்கள்வரை உழைக்கும் ஒரு அரசியல்வாதி என எத்தனை அரசியல்வாதிகளுக்கு சொல்ல முடியும் என எனக்கு தெரியவில்லை. ஆனால், நான் ஒரு கட்சி தலைவர், அரசியல்வாதி என்று எனக்கு சொல்ல முடியும் என நினைக்கும் போது மிகவும் பெருமையாக இருக்கிறது.

ஆனால், தேர்தல் காலங்களில் வந்தவனுக்கும், போனவனுக்கும் வாக்குகளை அளிக்கும் எமது மக்கள், என்னைப்பற்றி, எங்கள் கட்சியை பற்றி, எந்தளவு அறிந்து வைத்துள்ளார்கள் என்பதை எண்ணிப்பார்க்கும் போது துயரமாகவும் இருக்கிறது என்பதையும் இங்கே சொல்லியாக வேண்டும்.

இனி எதிர்காலத்தில் துயரங்களை எல்லாம் மூட்டை கட்டி வைத்துவிட்டு, ஒட்டு மொத்த மகிழ்ச்சியை பெருக்கிடும் பணியை, நமது கட்சிக்குள் ஜனநாயக இளைஞர் இணையம் செய்திட வேண்டுமென விரும்புகிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மத்திய செயற்குழுக் கூட்டத்திற்கு ஐந்து பேருக்கு அழைப்பு இல்லை

## வெல்கம எம்.பி.கவலை

(கொழும்பு)



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நேற்று முன்தினம் ஏற்பாடு செய்திருந்த மத்திய செயற்குழுக் கூட்டத்துக்கு கூட்டு எதிர்க்கட்சியினுள்ள தான் உட்பட ஐந்து செயற்குழு உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லையென பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் வைத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

தான் கட்சியின் மத்திய செயற்குழுவில் உப தலைவர். பவித்ரா வன்னியாராச்சி, சீ.பீ. ரத்நாயக்க, மகிந்த யாபா அபேகுணவர்தன மற்றும் ஜனக பண்டார தென்னகோன் ஆகியவர்கள் மத்திய செயற்குழுவின் உறுப்பினர்கள் ஆவார்.

அனைத்து மத்திய செயற்குழுக் கூட்டத்துக்கும் தனக்கு அழைப்பு விடுப்பதாகவும் இருப்பினும், நேற்று முன் தினம் கூட்டத்துக்கு மாத்திரம் அழைப்பு விடுக்கவில்லையெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து அறிந்து கொள்ள கட்சிச் செயலாருக்கு அழைத்தேன். தொடர்புகொள்ள முடியவில்லை. பின்னர் குறுந்தகவல் ஒன்றை அனுப்பினேன். இதற்கும் பதில் கிடைக்கவில்லை.

மத்திய செயற்குழுவில் அனைவரும் அழைக்கப்படாமல் எடுக்கப்படும் தீர்மானங்கள் குறித்த ஏற்புடைமையில் பிரச்சினை உருவாகியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

## அபிவிருத்திக் கழக கலந்துரையாடல்

தென்மராட்சி அபிவிருத்திக் கழக கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி பொன் விழா மண்டபத்தில் பேராசிரியர் க. கந்தசாமி தலைமையில் நடைபெறும். இந் நிகழ்விற்கான அறிமுக உரையினை பேராசிரியர் க. கந்தசாமி மற்றும் வைத்திய கலாநிதி ஆ. புவிநாதன் ஆகியோர் வழங்குவர். (இ-10-102)

# 20வது திருத்தச் சட்டத்தை எதிர்க்கத் தயாராகுங்கள்

## பசீர் சேகுதாவூத் அழைப்பு

(கொழும்பு)

அரசியலமைப்பில் கொண்டுவரப்படவுள்ள இருபதாவது திருத்தச் சட்டமூலத்தை எதிர்க்கத் தயாராகுமாறு, தூய முஸ்லிம் காங்கிரசின் பிரமுகரும், முன்னாள் அமைச்சருமான பசீர் சேகுதாவூத் அழைப்பு விடுத்துள்ளார்.

20ஆவது திருத்தச் சட்ட மூலமானது, இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூலம், சிறுபான்மையினருக்குக் கிடைத்த அற்ப அதிகாரத்தையும் அபகரிக்கும் திட்டமாகும் எனத் தெரிவித்துள்ள பசீர் சேகுதாவூத் இந்த திட்டத்தை அடியோடு வேரறுக்க ஒன்றுபடுமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தல்களை ஒரே நாளில் நடத்துதல் மற்றும் மாகாண சபைகளைக் கலைக்கும் அதிகாரத்தை நாடாளுமன்றத்துக்கு வழங்குதல் போன்ற விடயங்களை அரசியலமைப்பில் ஏற்படுத்தும் பொருட்டு, 20ஆவது திருத்தச் சட்ட மூலத்தினை அரசாங்கம் கொண்டுவந்துள்ளது.

இது குறித்து கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்ட அழைப்பினை பசீர் தெரிவித்துள்ளார். (இ-7)

## பாலர் பாடசாலைகளின் கலை விழா

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் Buttefly முன்பள்ளி, பண்டத்தரிப்பு Blooming buds ஆகிய பாலர் பாடசாலைகளின் கலை விழா இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு பண்டத்தரிப்பு பிரான்பற்று அருள் முதீஸ் வரி கல்யாண மண்டபத்தில் பாடசாலை அதிபர் த.சிவகுமார் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வடமாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்கள ஆணையாளர் தி.விஸ்வரூபன், திருமதி மங்கையற்கரசி விஸ்வரூபன், சிறப்பு விருந்தினர்களாக யாழ். கல்வி வலய முன்பள்ளி உதவிப் பணிப்பாளர் கே.விமலநாதன், செலான் வங்கியின் சங்கானைக் கிளையின் வங்கியாளர் ம.சஞ்சுதன், வலி. மேற்கு பிரதேச சபையின் வரி அதிகாரி வி.நிர்மலன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக்குமரன் வெள்ளிவிழா மலர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவால் வெளியிடப்படும் நல்லைக் குமரன் வெள்ளி விழா மலர் வெளியீட்டு விழா எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் வீதியிலுள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் யாழ். மாநகர ஆணையாளரும் சைவசமயவிவகாரக்குழுவின்தலைவருமான பொ.வாகீசன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், சிறப்பு விருந்தினர்களாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன், யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் த.சத்தியமூர்த்தி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் வரவேற்புரையினை சைவசமய விவகாரக் குழுவின் செயலாளர் பு.ஆறுமுகதாசன், தலைமையுரையினை மாநகர ஆணையாளர் பொ.வாகீசன், ஆசியுரையினை நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், வீணாகான குருபீட பீடாதிபதி சிவஸ்ரீ.சபா. வாசுதேவக் குருக்கள், யாழ்.சின்மயாமிஷன் வதிவிட ஆச்சாரியார் ஜாக்ரத சைதன்ய சுவாமிகள் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

பிரதம விருந்தினர் உரையைத் தொடர்ந்து தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகனுக்கு யாழ்.விருது வழங்கலும் பொற்கிழி வழங்கலும் இடம்பெறும்.

ஏற்புரையைத் தொடர்ந்து மலர்வெளியீட்டுரையும் வெளியீடும் இடம்பெறும்.

வெளியீட்டுரையினை பதிப்பாசிரியர் ந.விஜயசுந்தரம், ஆய்வுரையினை யாழ். பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புக்கள் பீட பீடாதிபதி பேராசிரியர் கு.முகுந்தன் ஆகியோர் வழங்குவர்.(இ-3)

## தெய்வீக இசையரங்கின் 16ஆம் நாள் நிகழ்வு இன்று

இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கின் 16 ஆம் நாள் நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 6.45 மணிமுதல் இரவு 8 மணி வரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம் பெறும்.

இதில் பாட்டு–அ.அமிர்தலோஜனன், வயலின்–கா.குகபரன், மிருதங்கம்–க.கஜன், கெஞ்சிரா–நா.சிவசுந்தரசர்மா, முகர்சிங்–சி.செந்தூரன் ஆகியோர் கலந்து கொள்வர்.(இ-3)

## "நாத சொரூபம்" இசை நிகழ்வு

யாழ்.இந்தியத் துணைத் தூதரகம் இந்திய கலாசார உறவுகளுக்கான பேராயம் (ICCR) மற்றும் வடமாகாண் கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்துடன் இணைந்து வழங்கும் நாத சொரூபம் சிறப்பு வயலின் இசை நிகழ்வு எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லூர் சங்கிலியன் தோப்பில் இடம் பெறவுள்ளது. (இ-3)

## "தீவிர வேட்கை" ஆன்மீக அருளுரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு யாழ்.சின்மயாமிஷன் நடத்தும் ஆன்மீக அருளுரைகளில் (ஞான யக்ஞம்) இன்று ``தீவிர வேட்கை'' எனும் தலைப்பில் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா ஆன்மீக அருளுரை வழங்குவார்.

இரவு 7.30 மணி முதல் 8.15 மணிவரை இல.700, பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள சின்மயா மிஷனில் இந்த ஆன்மீக அருளுரை இடம்பெறும். (இ-3)

## அருள்நெறி விழாவில் இன்று

நல்லூர்கந்தசுவாமிஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் யாழ்.மாவட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் அரங்கேறும் அருள்நெறி விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிமுதல் மாலை 6 மணிவரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி குமரன் தலைமையில் இடம் பெறும்.

இந் நிகழ்வில் வேலணை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட அமுதசுரபி அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பேச்சு, நடனம், உடுவில் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட அருளானந்தப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நடனம், பரராசசேகரப் பிள்ளையார் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் பண்ணிசை, வில்லிசை, நடனம், பேச்சு, கதாப் பிரசங்கம் என்பன இடம் பெறும். (இ-3)

## "கங்கை வேடன்" கதாப்பிரசங்கம்

நல்லூர் கந்தப் பெருமானின் மஹோற்சவத்தை முன்னிட்டு சைவ மகாசபை நடத்திவரும் தெய்வீக இசைப் பேருரையில் (கதாபிரசங்கம்) இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணி முதல் இரவு 8 மணி வரை நல்லை ஆதீன குருமூர்த்தி ஆலய மண்டபத்தில் கம்பராமாயணம் பற்றிய இசைப் பேருரையில் ``கங்கை வேடன்'' எனும் தலைப்பில் நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கானகதா வாரிதி கலாபூஷணம் பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மா கதாப் பிரசங்கம் நிகழ்த்துவார்.(இ-3)

## மஹோற்சவம் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

எழுவைதீவு- முத்தன் காடு ஈழத்து திருஞ்செந்தூர் முருகமூர்த்தி ஆலய மஹோற்சவம் இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10. 45 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட் கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (இ-7)

## வருடாந்தக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

அத்தியடி சிதம்பர நடராஜ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்தக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வி.சிற்சக்திவேல் தலைமையில் இடம்பெறவுள்ளது. ஆலய பரிபாலன சபை உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## நல்லூர் நாடகத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

செயல் திறன் அரங்க இயக்கத்தின் ஐந்தாவது நல்லூர் நாடகத் திருவிழா கடந்த 9 ஆம் திகதி ஆரம்பமானது. எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை மாலை 6.45 மணிமுதல் இரவு 9.15 மணிவரை நல்லூர் குறுக்கு வீதியில் உள்ள செயல் திறன் அரங்க இயக்கத்தில் இடம்பெற்று வருகிறது.(இ-3)

## தெய்வீக சிறப்பு நிகழ்வின் 16 ஆம் நாள் இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலயமஹோற்சவகாலத்தை முன்னிட்டு உலக சைவத் திருச்சபை நடத்தும் தெய்வீகச் சிறப்பு நிகழ்வுகளின் 16 ஆம் நாள் நிகழ்வு இன்று சனிக் கிழமை மாலை 6.45 மணி முதல் இரவு 7.45 மணி வரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் சைவப்புலவர் சிவஸ்ரீ. கதிர்குமாரசுவாமி சுமுகலிங்க சிவாச் சாரியார் தலைமையில் இடம்பெறும். இதில் ``நாலாயிரம் கண்படை த்திலனே'' -எனும் தலைப்பில் சைவப் புலவர் ஏ.அனு சாந்தன் சொற்பொழிவாற்றுவார். (இ-3)

## கந்தபுராணம் பற்றிய தொடர் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நல்லைக்கந்தன் மஹோற்சவ காலங்களில் யாழ்.கதிர் கலையகத்தின் ஏற்பாட்டில் நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக அமைந்துள்ள செல்லப்பா சுவாமி நினைவாலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு ஈவினை விநாயகர் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ கெங்காதரக் குருக்கள் தலைமையில் சொற்பொழிவு நிகழ்வுகள் இடம்பெறும்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு திருவாவடுதுறை ஆதீனப் புலவருமான ஏ. அனுசாந்தனின் சிறப்புச் சொற்பொழிவும் பண்டிதர் சைவப் புலவர் பொன். சுகந்தனின் கந்தபுராணம் பற்றிய தொடர் சொற்பொழிவும் இடம்பெறும்.(இ-3)

## செல்வச்சந்நிதி ஆலய மஹோற்சவ ஏற்பாடு குறித்து கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 22.08.2017 ஆரம்பமாகவுள்ளது. 07.08.2017 இல் மஹோற்சவத்திற்கான முன்னாயத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான இரண்டாம் கட்ட கூட்டம் 14.08.2017 திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தொண்டைமானாறு தெற்கு பொதுநோக்கு மண்டபத்தில் பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## நல்லூர் கந்தனுக்கு இன்று பதினாறாம் திருவிழா



## பக்தர் குறை களையும் பாலமுருகன்

பக்தர்கள் அலை மோதிட
பால் அபிஷேகங்களில் நீராடி
பளபளக்கும் பட்டாடையணிந்து
பக்தி மணம் பெருகி வர
கானங்கள் பாடி வர
கணபதியின் அருட் சோதரன்
காட்சியாகிறான்

காவடிகள் அலை மோதிட
கற்பூரங்கள் உருகிட
கற்பூர ஒளியிலே
காமாட்சியின் மைந்தன்
காட்சியாகிறான்

பாரதிதாசன் சத்யா
அல்வாய்

## குறைகளை தீர்த்திட வா குமரா

நீல மயிலில் நிதம்விளை யாடும்
நெடுமால் மருகா நிமலா சரணம்
கோலக் குறமான் குலவும் அமலா
கூறும் அடியார் குறை தீர்த் திடவா
வேலாற் பகையை வெருட்டுந் தலைவா
வெற்றித் திருவே விளைவே சரணம்
ஆலின் இலையாம் அடியேன் இதயம்
அங்கே வருவாய் அமைதி அருள்வாய்
வாவா குமரா வளமே அருள்வாய்.

வேலணையூர் சின்னத்துரை
பஞ்சலிங்கம்

## நம்பினோரைக் காத்திட வருவாயே

அப்பா முருகா வருவாயே!
ஆனந்தத் தேனே வருவாயே!
கண்ணின் மணியே வருவாயே!
கார்த்திகேயா வருவாயே!

வள்ளி மணாளா வருவாயே!
வண்ண மயில்மேல் வருவாயே!
கந்தா முருகா வருவாயே!
கௌரி தனயா வருவாயே!

திருமதி.உ.பூமணி
வடலியூர்

## தமிழ் காக்க வா முருகா

தேவரைக் காத்திட தேவையெல்லாம் தீர்த்திட
சரவணப் பொய்கையிலே காட்சி தருபவனே
கூறிடும் வேல் கொண்டு சூரனை அழித்தவனே
சேவலும் மயிலுமாக்கி எங்களை காத்தவனே
கார்த்திகை மைந்தனாக நல்லையில் அமர்ந்தவனே
அலங்கார வடிவனாகி ஆனந்தம் தந்தவனே
தமிழருக்கு நீயாகி தமிழையே புகழாக்கிய முருகா
தமிழ் காக்க வாருமப்பா தமிழர் நிலைபாருமப்பா

கவிவித்தகர். நி.கவியழகன், தாவடியூர்.

## நல்லைக்கந்த சந்தப் "பா"

ஆறுமா முகந் தன்னை யேற்றிடில்
அஞ்சுமா மூகந் துஞ்சுமா வினி
ஆறுமா சடை கொண்ட நற்பதன்
அற்பு தந்தனி லூற்ற பொற்பதன்
மாறுமா முகன் தம்பி விற்பனன்
மாசு வற்றவன் மாயங் கற்றவன்
கூறுமா மடி யார்க்கு நற்பயன்
கூட்டுங் கொற்றவன் நல்லைக் கந்தப்பா!


கலாபூஷணம், சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தொலைக்காட்சி உலகில் மக்களை ஈர்த்த பிக்போஸ்

## ஓவியாவின் நிலை



ஓவியா பிக்போஸ் நிகழ்ச்சியில் இருந்து தற்போது வெளியேறிவிட்டார். இந்த நிகழ்ச்சியில் இருந்து இவர் வெளியேறியதற்கு அவரின் மனநிலை தான் காரணம் என்று கூறப்பட்டது.

எல்லோராலும் ஒதுக்கப்பட்ட இவர் மன அழுத்தம் ஏற்பட்டு தற்கொலை முயற்சி வரை எடுத்தார், இந் நிலையில் சமீபத்தில் ஓவியாவின் புகைப்படம் ஒன்று வெளிவந்துள்ளது.

இதில் இவரின் சிகை அலங்காரம் செம்ம மாடலாக உள்ளது. அப்படியிருக்க. ஒரு சிலர் ஓவியா மன அழுத்தத்தை குறைக்க சிகிச்சை எடுத்துள்ளதால் தான் இந்த ஹேர்கட் செய்தார் என சமூக வலைத்தளங்களில் கூறி வருகின்றனர். ஆனால், உண்மை என்ன என்று தெரியவில்லை.

## வெளியேறுகிறாரா பிந்து மாதவி



நடிகை பிந்து மாதவி பிக் பாஸ் வீட்டில் இருந்து கிளம்புகிறாரா என்ற கேள்வி எழுந்துள்ளது. காயத்ரி, ரைசா மூஞ்சிக்காக எல்லாம் பிக்போஸ் பார்க்க முடியாது என்கிறார்கள் ரசிகர்கள். இந்நிலையில் பார்வையாளர்களுக்கு புது சந்தேகம் ஏற்பட்டுள்ளது. வெளியிடப்பட்ட இரண்டு ப்ரொமோ காணொளிகளிலும் பிந்து மாதவி எதுவும் பேசவில்லை. தற்போது ஓரம்கட்டப்படும் பிந்துவும் கிளம்பி விடுவாரோபிக் பாஸ் வீட்டிற்கு வந்ததில் இருந்தே எந்த வம்புக்கும் செல்லாமல் சமத்து பிள்ளையாக இருப்பவர் பிந்து மாதவி. காயத்ரியை நீ எல்லாம் ஒரு தலைவியா என்று கேட்டு அதிர வைத்தவர். ஒரு வேலை ஓவியா போன கையோடு பிந்துவும் கிளம்பிவிடுவாரோ?ஓவியாவை திருப்பி அழைத்து வாங்க, காயத்ரி, ரைசா, சினேகனை எல்லாம் பார்க்க முடியாது என்று சமூக வலைத்தளங்களில் ரசிகர்கள் பதிவிட்டு வருகின்றார்கள்.

## வெடித்தது சண்டை



பிக்போஸில் இருந்து ஓவியா வெளியேறிய பிறகு நிகழ்ச்சியில் சுவாரஸ்யம் குறைந்துவிட்டது என ரசிகர்கள் கூறிவரும் நிலையில், தற்போது காயத்ரி மற்றும் ரைசா இடையே சண்டை வெடித்துள்ளது .

வையாபுரி அல்லது சினேகன் - யாரை காப்பாற்றலாம் என பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருந்தபோது, ரைசா சினேகனுக்கு ஆதரவாக பேசினார். சினேகன் சார் புத்திசாலி, உங்களுக்கு ஏதாவது பிரச்சினை வந்தால் அவர் உதவி தேவைப்படும்" என கூறினார்.

என் பிரச்சினைகளை நானே சரி செய்துகொள்வேன்" என காயத்ரி பதில் கூறியபோது, ரைசா சிரித்துவிட்டார். அந்த கேள்வியை ஏன் என்னை பார்த்து சொன்ன. நான் என்ன குழந்தையா. பிரச்சினையை எனக்கு சமாளிக்க தெரியும்" எனவும் காயத்ரி கேட்டார்.

இதனால் இருவர் இடையே சண்டை தொடங்கியுள்ளது. அதனால் வரும் நாட்களில் ஓவியாவை போல ரைசா வையும் ஓரம்கட்ட காயத்ரி நினைப்பார் என்பதால் நிகழ்ச்சியில் வரும் நாட்களில் சுவாரஸ்யம் கூட வாய்ப்புள்ளதாக தெரிகிறது.

## புதுவரவு



BiggBoss வீட்டில் அடுத்து சீரியலில் பிரபலமான பிரியா தான் செல்ல இருப்பதாக தகவல்கள் கூறப்படுகின்றன.

கண்டிப்பாக இவர் ஓவியா இடத்தை நிரப்புவார் என்றும் ரசிகர்கள் எதிர்பார்க்கின்றனர். ஆனால் இந்த தகவல் எத்தனைக்கு உண்மை என்பது தெரியவில்லை.

## மருமகளே மருமகளே வா!



ஓவியா அனைவரும் அறிந்த ஒரு முகம். பிக்போஸ் நிகழ்ச்சியின் மூலம் அனைவரின் மனதையும் தொட்டவர். ஒட்டுமொத்த ஆதரவுகளும் இவருக்கு வந்து விட்டது.

இவரின் இயல்பான குணமாகவே பலரும் பார்க்கிறார்கள். இதில் கலந்துகொண்ட சகபோட்டியாளரான ஆரவ் மீது ஓவியாவுக்கு காதல் மலர்ந்தது. காதலை தெரிவித்தும் ஆரவ் ஏற்றுக்கொள்ளவில்லை.

ஆனால் இருவரும் ஆரம்பத்திலிருந்தே நல்ல நண்பர்கள். பிக்போஸை விட்டு வெளியே வந்தாலும் இன்னும் ஆரவை நான் காதலிக்கிறேன் என ஓவியா கூறிவருகிறாராம்.

இவ்வளவு நடந்தும் ஆரவ்வின் பெற்றோருக்கு தெரியாமல் இருக்குமா என்ன. அவரின் அம்மா ஓவியாவின் காதலுக்கு சம்மதம் தெரிவித்துள்ளாராம். ஆரவ் சொல்லி விட்டால் போதும் ஓவியா தான் என் வீட்டு மருமகள் என கூறியுள்ளதாக சொல்லப்படுகிறது.

## வியூகம்




பிக்போஸ் நிகழ்ச்சியின் மூலம் ஓவியாவின் மார்க்கெட் வேறு லெவலுக்கு சென்றுவிட்டது. அப்படியிருக்க சில மன அழுத்தம் காரணமாக பிக்போஸ் வீட்டிலிருந்து வெளியேறினார். கமல் எவ்வளவோ சொல்லியும் ஓவியா போட்டியில் பங்கேற்க மறுத்தார், இதனால், பிக்போஸ் TRP பாதியாக குறைந்தது.

இதனால், ஓவியாவிற்கு போட்டியாக TRP ஏற்ற முன்னணி ஹீரோயின் ஒருவரிடம் பேச்சுவார்த்தை நடந்து வருகின்றதாம். அவர் ஆகஸ்ட் 15ஆம் திகதி வருவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், ஓவியாவே மீண்டும் கொண்டுவர ஒரு பக்கம் பேச்சுவார்த்தை நடந்து வருவது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—125

## பயிர்களுக்கு வரப்பிரசாதமான மைக்கோரைசா பூஞ்சணம்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

"நஞ்சற்ற தேசம்" என்பதனை மையப்புள்ளியாக வைத்தே எமது அரசாங்கத்தின் விவசாயக் கொள்கை உருவாக்கப்பட்டிருக்கின்றது. எமது நாட்டை நஞ்சற்ற பிரதேசமாக அரசாங்கத்தின் இத்தகைய கொள்கையினால் பலவிதமான நன்மைகள் மக்களுக்கு கிடைக்க வழியுண்டு. அதுவும் நஞ்சற்ற தேசம் என்னும் கருத்துக்குள் எமது தேசத்தை, சூழலை இன்னும் அத்தியா வசியப் பொருட்களான உணவு, நீர், என அனைத்தும் நஞ்சற்றதாக கிடைக்க வேண்டும் என்பது மிக முக்கியமானது. விவசாய உள்ளீடுகளில் அசேதன இரசாயனப்பொருட்களுக்கு என்று முக்கியத்துவம் கொடுத்தோமோ அன்றிலிருந்து எமது தேசம் நஞ்சினை உணவாக்க முனைந்து விட்டது எனலாம். பசுமைப் புரட்சியில்லாததனால் சேதன முறை மூலமாக செய்யப்படும் பயிர்களின் விலைகள் அதிகரிக் கப்பட வேண்டும். தவறின் சேதன முறை விவசாயத்திலிருந்து மக்கள் வெளிச்செல்ல ஆரம்பித்து விடுவர்.

நஞ்சற்ற தேசத்தினை கட்டியெ




எமது சூழலை நாம் இன்னும் அறியவில்லையென்பதற்கு இது சான்று. தெரிந்தது கொஞ்சம் அறிய வேண்டியது இன்னும் பல. நீண்ட நாட்களாகவே எமக்குள்ளேயெ முந்த வினாவுக்கு மாணவர்களின்

hiza) என அழைக்கப்படும். இவ்வாறான மைக்கோரைசாக்கள் வேருடன் இணைந்து தேவையான ஊட்டச்சத்தினை பெற்றுக்கொடுக்கும் வல்லமையுடையன. இந்த மைக்கோரைசாக்களை ஆய்வில் பிரித்தெடுத்திருக்கின்றோம் என்பது நல்ல செய்தியாகும். மைக்கோரைசா பூஞ்சணங்களை ஏனைய தாவரங்களின் வேர்த்தொகுதியில் ஒத்ததன்மையுடையதாக தொற்று ஏற்படுத்திவிட்டால் தாவரத்திற்கேற்ற ஊட்டச்சத்தினை அவை இலகுவாக ஏற்படுத்திக் கொடுத்து விடுவதோடு வேர்த்தொகுதியின் பாதுகாப்பிற்கும் அனுசரணையாக இருக்கும். மண்ணின்றி தாவரங்களை வளர்க்கும் (Soil less culture) கலையில் இன்னும் இதுபோன்ற ஆய்வினை முன்னெடுத்தால் பூக்கலையினை பனைமரசூழலில்மேலும் முன்னெடுக்க ஏதுவாயுமிருக்கும். பனைமரத்தில் ஏனைய ஓர்க்கிட்டுகள் சிறப்பாக வளர்ந்திருந்திருந்தனை காணமுடிந்தது. இந்த ஆய்வின் முடிவு பல ஆய்வுகளின் தொடக்க மாகவும் இன்னும் வரட்சியில் துவண்டிருக்கும் எமது பிரதேசத்தில் பயிர்களை

# இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 141

யின் மகத்துவங்களை மட்டுமே நாம் பேசிக்கொண்டிருந்தோமே தவிர அதனை கவனமாக பயன்படுத்தாததினால் எமது தேசத்தை மாசாக்கிய அசேதன இரசாயனங்களுக்கு நாம் அடிமையாகி விட்டோமே. பீடைநாசினி மற்றும் அசேதன பசளை இல்லையென்றால் எமக்கு விவசாயமே இல்லை என்றாகிவிட்டதுவே. அனைத்திற்கும் நாமே காரணம். எமது புத்திக்கு இவையனைத்தும் அப்போது தெரியவில்லை. காலம் போகப்போக ஒவ்வொன்றாக பிரச்சினைகள் ஆரம்பிக்கத் தொடங்கிவிட்டன. தற்போது எந்த உணவெடுத்தாலும் நஞ்சு கலந்ததாக இருப்பதாக ஒரு பிரமை. அசேதன பசளைகளை தவிர்த்தேனும் பயிர்ச்செய்கை செய்ய முனைவோர் பலரிருந்தும் சேதன முறையில் செய்யப்படும் பயிர்ச்செய்கையிலிருந்து பெறப்படும் பயிர்களின் மரக்கறிகள் மற்றும் பழங்களை பிரித்தறியும் தன்மை முப்புவதாயின் அசேதன இரசாயனப்பசளைக்கு மாற்றுவழி கண்டறியப்படல் வேண்டும். எமது நாட்டுக்கே உரித்தான மாற்று வழிகளாக அவை இருக்கவேண்டுமே தவிர எமக்கு ஒவ்வாத முறைகளை இங்கு அறிமுகப்படுத்துவது நீண்டகாலப்போக்கில் அது எதிர்பார்த்த நன்மைகளைத் தராது. மாறாக எமது இயற்கையை நாம் அவதானமாக கவனித்தால் எமக்கான விடை இங்கே கிடைக்கும். தற்போதெல்லாம் பலர் அசேதன இரசாயனங்களைப் பாவிப்பதில் கவலை கொள்வதனையும் அதற்கு மாற்று வழிகளை தேடுவதனையும் அறியமுடிகின்றது. அதற்கான பரிந்துரைகளை நாம் வழங்கத்தயாரானால் எமது மக்களிடையே ஏற்படும் இவ்வகையான மாற்றங்களுக்கு நாம் விரைந்து உதவிடமுடியும். இந்த நாட்டை நஞ்சற்ற தேசமாக மாற்றுவதற்கு இத்தேசத்திலுள்ள அனைவருக்கும் பங்குண்டு என்பதனையும் நாம் மறந்துவிடக் கூடாது.

ஆராய்ச்சி மூலம் விடை கிடைத்தது. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விவசாய உயிரியல் துறையில் இறுதியாண்டு மாணவி மேரி டெனிசியா அன்ரன் மாணிக்க ராஜா செய்த ஆய்விது. பனை மரத்தில் வன்டா எனப்படும் ஒருவகை ஓர்க்கிட் தாவரம் ஆங்காங்கே வளாந்திருப்பதை காணலாம். இந்த தாவரத்தின் வளர்ச்சியினால் பனைமரத்திற்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லை. ஒட்டி வளரும் இவ்வகைத்தாவரத்தினை நாம் பெரிதாக கண்டு கொள்ளவில்லை.

வன்டாவின் வேர்களினை உற்று நோக்கினால் அதனது வேர் ஸ்பொன்ஜ் (sponge) போல ஊதிபெருத்திருக்கும். இந்த வேர்களில் பலவகை பூஞ்சணங்கள் ஒத்தியைந்து வளருகின்றன. வளியிலுள்ள ஈரப்பதனை, ஊட்டச்சத்தை உறிஞ்சியெடுக்கும் தன்மை இந்த ஓர்க்கிட்டு - பூஞ்சண உறவுக்கிருக்கின்றது. இவ்வாறான பூஞ்சணங்களை ஒருவகை மைக்கோரைசா (*Mycorr*

ளையும் வளர்த்து அதனை ஒரு வருமானந்தரும் தொழிற்றுறையாக மேம்படுத்த முடியும்.

மாற்றுவழிகளில் முக்கிய இடமாக நாம் கவனிக்கக்கூடியது நுண்ணங்கிகளின் வினைத்திறனான பயன்பாடு தான். மைக்கோரைசா வகைப் பூஞ்சணங்கள் வழக்கமாக தாவரங்களின் வேர்களில் ஒன்றிய வாழ்வுமூலம் இணைக்கப்பட்டு தாவரத்திற்கு தேவையான ஊட்டச்சத்துக்களை மண்ணிலிருந்தும் தமது ஒன்றிய வாழ்வு மூலமும் சிறந்த வேர்த்தொகுதியினை வழங்குவதாகும். இவ்வகையில் இந்த மைக்கோரைசா பூஞ்சணம் பல்வேறு வகையான தாவரங்களில் தொற்று ஏற்படுத்திப் பார்க்கப்பட்டபோது அது மிளகாயின் வேர்களோடு சிறப்பாக ஒன்றிணைந்து காணப்பட்டதனை அவதானிக்க முடிந்தது. அது மாத்திரமல்ல இப்பூஞ்சணத்தின் ஒன்றிய வாழ்வினால் மிளகாயின் வளர்ச்சி அபரிமிதமாக இருந்ததுடன் வேர்த்தொகுதியும் வளர்ப்பதற்கு புதிய தொழில்நுட்பத்தை உள்வா ங்கவும் வழிசெய்திருக்கின்றது. ஒன்றிய வாழ்வில் இருக்கும் இவ்வகை பூஞ்சணத்தின் ஏனைய சிறப்பியல்புகளையும் கண்டறிந்து அதனை விவசாயிகள் பெறக்கூடியதாக மாற்றியமைத் தால் நிச்சயமாக நல்லதொரு எதிர்காலத்தை நோக்கி நாம் நகரமுடியும் என்னும் நம்பிக்கையும் பிறந்திருக்கின்றது.

நுண்ணங்கிகளின் உலகத்தினை நாங்கள் உள்ளார்ந்து பார்த்தால் பலவிதமாக விவசாய பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும் என்னும் நம்பிக்கையில் மேலும் இவ்வாய்வினை விரிவுபடுத்தி விவசாயிகள் பயன்படுத்தும் வகையில் இந்த மைக்கோரைசா பூஞ்சணத்தை சிறந்த பெறுமதிவாய்ந்த நுண்ணங்கி ஊக்கியாக வெளிக் கொணர முடியும். அந்த பொன்னான காலத்தை நோக்கி நாம் நகரத் தலைப்பட்டுள்ளோம்.


## மீள் கேள்வி அறிவித்தல் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
## மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை-2017

01.தவிசாளர், பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலைகளுக்காக பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

02.பெறுகையானது பொதுநிதிச்சுற்றறிக்கை 04/2016(1) இற்கமைவாக வடமாகாணத்தில் தகுதியுடைய வியாபாரம் அல்லது கம்பனிப்பதிவுகளை கொண்டுள்ளதும் அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் இக்ராட் பதிவுள்ளவராகவும், கறுப்புப்பட்டியலில்பெயரிடப்படாததுமான கேள்வியாளர்களுக்குவழங்கப்படுவதற்கு உரித்துடையதாகமட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

03.தேவையான தகைமைகள் பெறுகை ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

04.ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமையலுவலகத்தில் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் ஆங்கில மொழியில் மட்டும் உள்ள பெறுகை ஆவணங்களை கே.கே.எஸ். வீதி சுன்னாகத்தில் அமைந்துள்ள வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் 14.08.2017 தொடக்கம் 28.08.2017 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் 14.00 மணி வரையான மீளளிக்கப்படாத பணமாக ரூபா.2000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

05.பெறுகை ஆவணங்களினை இரு பிரதிகளில் தயாரித்து 28.08.2017 ஆம் திகதி 2.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், பிரதேசசபை பெறுகைக் குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந் தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் பெறுகைதாரர் அல்லது பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.

06.பெறுகை தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில் 21.08.2017 ஆம் திகதியன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும்.

07. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டியவாறு அமையும்.

| இல. | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை மில்லியனில் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை வைப்பு (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1 | சந்தை வீதி காப்பெற்றிடல் | 4.89 | 02 மாதம் | C8 or above | 48000.00 |
| 2 | வட்டுவினி வீதி காப்பெற்றிடல் | 3.25 | 02 மாதம் | C8 or above | 32000.00 |
| 3 | சிங்கத்தின் கலட்டி வீதி காப்பெற்றிடல் | 4.38 | 02 மாதம் | C8 or above | 43000.00 |
| 4 | கருணாகரப்பிள்ளையார் வீதி காப்பெற்றிடல் | 3.50 | 02 மாதம் | C8 or above | 35000.00 |
| 5 | பாடசாலை, தோம்பை வீதி காப்பெற்றிடல் | 3.63 | 02 மாதம் | C8 or above | 36000.00 |
| 6 | கதிரமலை வீதி காப்பெற்றிடல் | 3.29 | 02 மாதம் | C8 or above | 32000.00 |
| 7 | மின்சார நிலைய வீதி காப்பெற்றிடல் | 4.71 | 02 மாதம் | C8 or above | 47000.00 |
| 8 | கினாமரம்/முத்துக்கிருஸ்ணர் வீதி காப்பெற்றிடல் | 4.58 | 02 மாதம் | C8 or above | 45000.00 |

தவிசாளர், பிரதேச சபை பெறுகைக்குழு,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.

(ஸ்ரீ-9310)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## தவளை இளவரசன்

(10.08.2017 இன் தொடர்ச்சி)

இளவரசி ஒரு வினோதமான சத்தத்தைக் கேட்டாள். "தப்.. தப்.. சப்...சப்..." அந்த சத்தம் பளிங்கு கல் மாடிப்படிக்கட்டில் இருந்து வந்து சாப்பாட்டுக் கூடக் கதவு வரை வந்து நின்றுவிட்டது. மெல்லக் கதவு தட்டப்படும் சத்தம் "என் அருமை இளவரசியே, கதவைத் திறவாய், உன் அருமை தவளை இங்கே! கதவைத் திறந்து பார். உன்னை நேசிக்கும் ஓர் உயிர் உனக்காக காத்திருக்கிறது!

சொன்ன வாக்கு தவறுதல் அழகா? குளக்கரையில் நீசொன்ன வாக்கு தவறாமல் காப்பாற்ற வேண்டாமா?" - என்று இனிமையாகப் பாடியது அந்தக் குரல்.

இளவரசி வேகமாகப் போய் கதவைத் திறந்து பார்த்தாள். அங்கே தவளை காட்சியளித்தது.

தவளையை இளவரசி அங்கே எதிர்பார்க்கவில்லை.வாக்கு கொடுத்தபடி நடவாமல் ஏமாற்றிவிட்டு வந்தது சரியா? தவளை கேட்டது.

தவளைக்கு பதில் சொல்லாமல், வேகமாக கதவைச் சாத்திவிட்டு சாப்பாட்டு மேசைக்கு திரும்பினாள் இளவரசி. இளவரசியின் கலவரமான முகத்தை அரசர் கவனித்தார். எதைக் கண்டோ மகள் பயந்து வந்தது போல் இருந்தது அவருக்கு. "என்னம்மா? என்ன விடயம்? எதையோ கண்டு பயந்து விட்டாயா?" என்றார் அரசர்.

"ஒரு சொறித்தவளையப்பா அது! இன்று குளத்துக்குள் விழுந்த என் பந்தை அது எடுத்துக் கொடுத்தது.

அதற்கு ஒரு வாக்கு கொடுத்தேன். அதனால் அது இங்கே வந்து நியாயம் கேட்கிறது" என்று விபரம் சொன்னாள்.

"என்ன பெண்ணம்மா.நீ! யாருக்கும் நாம் வாக்கு கொடுத்தால் அதன்படி நடக்கவேண்டும். பிறருக்கு நாம் முன்மாதிரியாக இருக்க வேண்டும். அது தவளையாகவே இருந்தாலும் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டுமம்மா" என்று புத்திமதி சொன்னார்.

அப்போது மீண்டும் கதவைத் தட்டும் ஓசையும் தொடர்ந்து தவளை பாடும் பாட்டும் கேட்டது.

"என் அருமை இளவரசியே. கதவைத் திறவாய்,

உன் அருமை தவளை இங்கே! கதவைத் திறந்து பார். உன்னை நேசிக்கும் ஓர் உயிர் உனக்காக காத்திருக்கிறது!

சொன்ன வாக்கு தவறுதல் அழகா? குளக்கரையில் நீ

சொன்னவாக்குதவறாமல்காப்பாற்ற வேண்டாமா?"

அந்தத் தவளையைப் புலம்ப வைத்து விட்டாயே. அது சரியல்ல. அதுநீ கேட்ட உதவியைச் செய்து கொடுத்தது. அதற்கு பதிலாக தவளை கேட்டதை நீயும் ஒப்புக் கொண்டிருக்கிறாய். அதனால் வாக்கு கொடுத்தபடி கதவைத் திறந்து உள்ளே அழைத்துவா" என்று அரசர் தன் மகளுக்குச் சொன்னார்.

வேறு வழியில்லாமல் இளவரசி கதவைத் திறந்து தவளையை அழைத்து வந்தாள். இளவரசி அமர்ந்து சாப்பிடும் நாற்காலியில் தவளை தாவி ஏறியது.

"நீ சாப்பிடும் தட்டு அருகே என்னை உட்காரவை நானும் சாப்பிட வேண்டும்" என்றது தவளை. இளவரசியும் மனமின்றி தவளையை எடுத்து தான் சாப்பிடும் தங்கத்தட்டு அருகே வைத்தாள். இப்போது இளவரசி சாப்பிடும் தட்டிலேயே தவளையும் சாப்பிட ஆரம்பித்தது.

தவளை சாப்பிட்டு முடித்ததும் "நான் மிகவும் களைப்பாக இருக்கிறேன்.

என்னை எடுத்துக்கொண்டு போய் உன் படுக்கையில் படுக்க வை" என்றது.

வேறு வழி இல்லாமல் இளவரசி தவளையை எடுத்துக் கொண்டு போனாள்.

தன் படுக்கையில் படுக்க வைத்தாள். தவளையும் சுகமாக இரவு முழுக்க தூங்கியது.

காலையில் சூரிய வெளிச்சம் வந்தவுடன் தவளை விழித்துக் கொண்டது.

உடனே கட்டிலில் இருந்து கீழே குதித்தது. மாடிப்படிக்கட்டில் இறங்கி அரண்மனையை விட்டு வெளியேறியது.



தவளை போன பிறகு இளவரசி விழித்தெழுந்தாள். தவளை அருகில் இல்லையென்றதும் மிக மகிழ்ந்தாள், இளவரசி. இனி தவளை பற்றிய கவலை இல்லை என்று நினைத்ததில் வியப்பு எதுவும் இல்லைதான்.

இரவு வந்தது தவளையும் திரும்ப வந்தது. நேற்றுப் போலவே சத்தம் எழுப்பிக் கதவைத் தட்டியது தவளை அடாடா, தவளை வந்து விட்டதே என்று கவலைகொண்டாள்.இளவரசி. இளவரசி என்ன? செய்வது என்று யோசித்துக் கொணடிருந்த போது தவளை பாடத் துவங்கியது.

"என் அருமை இளவரசியே, கதவைத் திறவாய்.

உன் அருமை தவளை இங்கே! கதவைத் திறந்து பார்,

உன்னை நேசிக்கும் ஓர் உயிர் உனக்காக காத்திருக்கிறது!

சொன்ன வாக்கு தவறுதல் அழகா? குளக்கரையில் நீ

சொன்ன வாக்கு தவறாமல் காப்பாற்ற வேண்டாமா?"

தவளையின் பாடலைக் கேட்ட? அரசர்,"உன் தவளை நண்பன் வந்துவிட்டான்போய் அழைத்து வா,"என்று செல்லமாகவும் கண்டிப்போடும் சொன்னார்.

வேறு வழியி ன்றி கதவைத் திறந்து இளவரசி, தவளையை அழைத்து வந்தாள்.

முதல் நாள் போல இளவரசியின் தட்டில் சாப்பிட்டது இளவரசியின் படுக் கையில் போய் படுத்துத் தூங்கியது.

சூரிய வெளிச்சம் வந்த வுடன் கிளம்பிப் போய் விட்டது. மூன்றாவது நாளும் தவளை வந்து கதவைத் தட்டி பாட்டுப்பாடியது இளவரசியுடன் கட்டிலில் படுத்து தூங்கியது. வழக்கம் போல இளவரசியும் அருகில் படுத்து தூங்கிவிட்டாள்.

(தொடரும்)




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1981 - ஐ.பி.எம் தனி மேசைக் கணனி வெளியிடப்பட்டது.
- 1985 - ஈழத் தமிழ்ப் போராளிக் குழுக்களுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் 2ஆம் கட்ட திம்புப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாயின.
- 1990-வீரமுனைப் படுகொலைகள், 1990அம் பாறை, வீரமுனையில் நானூறுக்கும் மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 2000 - கே-141 கூர்ஸ்க் என்ற ரஷ்யக் கடற்படை நீர்மூழ்கிக் கப்பல் பயிற்சியின் போது 118 பேருடன் பாரெண்ட்ஸ் கடலில் மூழ்கியது.
- 2005 - இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லக்சுமன் கதிர்காமர் கொழும்பில் அவரது வீட்டில், நீச்சல் தடாகத்தில் நீராடும் போது சுடப்பட்டு அடுத்த நாள் இறந்தார்.
- 2005- இலங்கையின் தமிழ் வானொலி, தொலைக்காட்சி அறிவிப்பாளர் ரேலங்கி செல்வராஜா கொலை செய்யப்பட்டார்.
- 2006 - இலங்கையின் புத்திஜீவிகளில் ஒருவரான கேதீஸ் லோகநாதன் கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பிறப்புகள்

- 1892 - க. அ. நீலகண்ட சாத்திரி, இந்திய வரலாற்றாளர் (இ. 1975)
- 1897 - ஆட்டோ சுத்ரூவ, உக்ரேனிய வானியலாளர் (இ. 1963)
- 1907 - மறை. திருநாவுக்கரசு, தமிழறிஞர், இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் (இ. 1983)
- 1912 - சோ. சிவபாதசுந்தரம், வானொலி ஒலிபரப்பாளர், பிபிசி தமிழ் ஒலிபரப்புக்கு தமிழோசை எனப் பெயரிட்டவர் (இ. 2000)
- 1919 - விக்கிரம் சாராபாய், இந்திய இயற்பியலாளர் (இ. 1971)
- 1927 - ஏ. திருநாவுக்கரசு, தமிழக எழுத்தாளர்
- 1928 - தமிழண்ணல், தமிழறிஞர் (இ. 2015)
- 1940-குமார் பொன்னம்பலம், இலங்கைத் தமிழ் அரசியல்வாதி, வழக்கறிஞர் (இ. 2000)
- 1948 - சித்தராமையா, கருநாடகத்தின் 22ஆவது முதல்வர்
- 1949 - நரேந்திர சிங் நேகி, உத்தராகண்ட பாடகர்
- 1952 - சீத்தாராம் யெச்சூரி, இந்திய அரசியல்வாதி
- 1953 - டிராட்ஸ்கி மருது, தமிழக ஓவியர்
- 1956 - சிதத் வெத்தமுனி, இலங்கைத் துடுப்பாளர்

இறப்புகள்

- 1979-ஏ. வி. மெய்யப்பன், தென்னிந்தியத் திரைப்படத் தயாரிப்பாளர், இயக்குநர் (பி. 1907)
- 1996 - விக்தர் அம்பர்த்சுமியான், சியார்ச்சிய-ஆர்மீனிய வானியற்பியலாளர் (பி. 1908)
- 2005-ரேலங்கி செல்வராஜா, இலங்கை ஊடகவியலாளர், நடிகை (பி. 1960)
- 2006-கேதீஸ் லோகநாதன், இலங்கை அரசியல் செயற்பாட்டாளர், மனித உரிமை ஆர்வலர் (பி. 1952)

சிறப்பு நாள்

- அனைத்துலக இளையோர் நாள் (ஐ.நா)
- உலக யானைகள் தினம்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார் மடம் | சுன்னாகம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 70 | 100 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 100 | 120 | 100 | 110 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 300 | 320 | 300 | 400 |
| தக்காளி | 140 | 200 | 110 | 160 | 150 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 60 | 80 | 70 | 80 |
| கோவா | 120 | 160 | 70 | 80 | 120 | 120 |
| கரட் | 80 | 200 | 150 | 200 | 160 | 200 |
| பூசணி | 40 | 100 | 50 | 60 | 90 | 60 |
| புடோல் | 60 | 100 | 50 | 80 | 80 | 60 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 80 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 160 | 100 | 150 | 160 | 140 | 160 |
| பெரிய வெங்காயம் | 100 | 140 | 90 | 140 | 100 | 100 |
| பாகற்காய் | 180 | 200 | 150 | 200 | 160 | 140 |
| வெண்டிக்காய் | 40 | 100 | 70 | 80 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 50 | 160 | 140 | 120 |
| பயற்றங்காய் | 140 | 100 | 100 | 80 | 100 | 160 |
| லீக்ஸ் | 100 | 100 | 70 | 120 | 100 | 120 |
| பீற்றூட் | 50 | 100 | 40 | 60 | 120 | 50 |
| கறிமிளகாய் | 120 | 200 | 150 | 120 | 150 | 160 |
| முருங்கைக்காய் | 50 | 20 | 30 | 50 | 80 | 60 |
| போஞ்சி | 180 | 200 | 120 | 200 | 100 | 180 |
| கத்தரிதும்புள்ள | 80 | 100 | 50 | 80 | 70 | 80 |
| கீரை-1பிடி | 30 | 20 | 40 | 30 | 25 | 30 |
| தேசிக்காய் | 60 | 40 | 70 | 120 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 50 | 70 | 50-70 | 60 | 70 |
| இராசவள்ளி | 200 | 200 | — | 300 | — | 300 |
| வெங்காயப்பூ | 200 | 150 | 150 | 160 | 160- | 150 |
| முள்ளங்கி | 60 | 60 | 30 | 80 | 60 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 10 | 40 | 25 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 | 15 | 20 |
| ஈரப்பலா | 80 | 50 | — | 120 | 80 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏமாற்றாதே ஏமாற்றாதே
ஏமாறாதே ஏமாறாதே.
– தமிழ் சினிமாப் பாடல்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## எல்லாவற்றிலும் நாம் தோல்வியாகி விடுவமோ!

தமிழ் மக்கள் பேரவை ஒரு மக்கள் இயக்கமாக மலர்ந்ததன் பின்னணியில் முக்கியமான மாற்றங்கள் நடந்துள்ளன.

அதில் எழுக தமிழ் எனும் மக்கள் எழுச்சிப் பேரணி தமிழ் மக்களின் உத்வேகத்தை ஏற்படுத்தியதுடன் எங்கள் உரிமை விடயத்தில் நாங்களும் கவனமாக இருக்க வேண்டும் என்ற விழிப்பை ஏற்படுத்திற்று.

இப்போது தமிழினத்தின் விடயத்தில் மக்கள் விழிப்பாக இருக்கின்றனர்.

அரசியலமைப்புச் சீர்திருத்தம் வருகிறது என்ற நம்பிக்கையை முன்வைத்து தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலர் எல்லாவற்றையும் குழப்ப முற்பட்டனர்.

இச்சூழ்நிலையில்தான் தமிழ் மக்கள் பேரவை உருவாகியது. உண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் அவர்கள் நல்லாட்சியை நம்பினார்.

குறிப்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பர் என நம்பினார்.

அதற்குச் சான்றாக அரசியலமைப்புச் சீர்திருத்தம் அமுலுக்கு வரும் எனவும் நம்பினார்.

என்ன செய்வது வயதில் முதிர்ந்த ஒரு தமிழ்த் தலைவரை நல்லாட்சியினரும் ஏமாற்றினர் என்பதுதான் உண்மையாகப் போகிறது.

தனது காலத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட வேண்டும் என்று பெரு விருப்புக் கொண்டிருந்த இரா.சம்பந்தரின் விருப்பம் நிறைவேறாது என்பது மட்டும் உண்மை.

அரசியலமைப்புச் சீர்திருத்தம் ஒருபோதும் நடைமுறைக்கு வரவும் மாட்டாது. வரவிடவும் மாட்டார்கள்.

இதை இவ்விடத்தில் நாம் பல தடவைகள் கூறியிருந்தோம். இப்போதும் அதைத்தான் நாம் கூறமுடியும்.

உண்மையில் ஆட்சியாளர்களுடன் இணைந்து சென்று தீர்வைப் பெறலாம் என்பது கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரின் நினைப்பாக இருந்தது. இது அவரின் வெளிப்படையான முடிவு.

ஆனால் அவருடன் சேர்ந்து இருந்த சிலர் அரசாங்கத்துக்கு இசைவாக நடக்கலாயினர்.

அரசுடன் இணைந்து சென்று தமிழ் மக்களுக்குச் சாதகமாக இருந்த சர்வதேச நிலைவரத்தை பழுதாக்கி அதை செல்லுபடியற்றதாக்கினர்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாவிட்டாலும் அதைப் பற்றிப் பரவாயில்லை. தமிழ் அரசியல் தலைமையே சர்வதேச அழுத்தத்தை விரும்பாத போது சர்வதேசம் தாமாக மூக்கை நுழைக்காதல்லவா?

ஆக, சர்வதேச அழுத்தத்தை தமிழ் அரசியல் தலைமையினூடாக வெற்றிகரமாக முறியடித்த நல்லாட்சி இப்போது அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை தட்டிவிடுவதற்கு எத்தனிக்கிறது.

எனினும் அரசியலமைப்புச் சீர்திருத்தம் வெளிவரும் என்று தமிழ் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டிய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்கள் நிச்சயம் தமிழ் மக்களுக்கு பதில் கூறியே ஆக வேண்டும்.

எதுவாயினும் தீர்வுக்கான களநிலையைத் தொடர்ந்தும் தக்க வைக்க வேண்டும் என்பதில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் உறுதியாக இருக்கின்ற போதிலும் அவருக்கும் இடுக்கண் விளைவிக்க அவரோடு கூட இருக்கும் சிலர் முற்படுவதாக அறியும்போது நெஞ்சு வெடித்துவிடும் போல் உள்ளது.

# மகிந்த ஆட்சியில் சமுர்த்தி திட்டம் முறையாக கையாளப்படவில்லை

## துறைசார் அமைச்சர் எஸ்.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் சமுர்த்தித் திட்டம் முறையாக அமுல்படுத்தப்படாத காரணத்தால், வட்டி வழங்குநர்களின் தொகை அதிகரித்ததாக சமுர்த்தி விவகார அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற நிலையியல் கட்டளையின் 23/2 கீழ் நேற்று முன்தினம் ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன எழுப்பியிருந்த கேள்விக்கு. நேற்று பதிலளித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சமுர்த்திப் பயனாளிகளின் எண்ணிக்கையில் குறைப்பை ஏற்படுத்துவது தொடர்பில் வெளியாகும் தகவல்களில் எவ்வித உண்மையும் இல்லையென தெரிவித்த அமைச்சர் எஸ்.பி, தற்போது 14.025.661 பேர் சமுர்த்தியின் மூலம் பயனடைவதாகவும், இது எதிர்காலத்தில் அதிகரிக்கப்படுமே தவிர குறைக்கப்படமாட்டாதென மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த ஆட்சிக்காலத்தில் சமுர்த்தி கடன் உள்ளிட்ட கொடுப்பனவுகள் முறையாக பகிர்ந்தளிக்கப்படாத காரணத்தால், வறுமையில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தில் பாரிய பாதிப்பு ஏற்பட்டதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்நிலையில், தற்போதைய அரசாங்கமானது உடனடி கடன், வாராந்த, மாதாந்த கடன்களை வழங்குவதன் மூலம் சமுர்த்தி பயனாளிகளை ஊக்குவிக்கவுள்ளதாக அமைச்சர் எஸ்.பி. மேலும் தெரிவித்தார்.

அத்தோடு, கடந்த ஆட்சிக்காலத்தில் 12 பில்லியன் ரூபாய்களே சமுர்த்திக்கு ஒதுக்கப்பட்ட நிலையில், தற்போது 42 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

## விபத்தில் இருவர் காயம்

வீதியைக் கடந்த வயோதிபர் ஒருவரை மோட்டார் சைக்கிள் மோதியதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை யாழ். பருத்தித்துறை வீதியிலுள்ள மந்திகை சிலையடிக்கு அருகாமையில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. ஆயுள்வேத மருந்து வியாபாரி ஒருவர் பேருந்தில் இருந்து இறங்கி வீதியைக் கடக்க முற்பட்ட போது வீதியால் பயணித்த மோட்டார்சைக்கிளுடன்மோதுண்டார். இதில் படுகாயமடைந்த இருவரும் பருத்தித் துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-60)

## ஐந்து கடவுச்சீட்டுக்களுடன் வெளிநாட்டுப் பிரஜை கைது

வெளிநாட்டுக் கடவுச்சீட்டுக்களை வைத்திருந்த நபர் ஒருவரை கொள்ளுப்பிட்டி பொலிஸார் நேற்றுக்காலை கைது செய்துள்ளனர்.

இதேவேளை, கைது செய்யப்பட்ட நபரை சோதனைக்குட்படுத்திய போது அவரிட மிருந்து 70 கிராம் கஞ்சா கலந்த போதைப் பொருள், 16 சட்டவிரோத சிகரெட் பக்கெட்டுகள் மற்றும் 5 பேரின் கடவுச்சீட்டுக்கள் மீட்கப்பட்டுள்ளன. (இ-7)

## ஷிராந்தி விரைவில் கைது!

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மனைவி ஷிராந்தி ராஜபக்ஷ எதிர்வரும் நாட்களில் கைது செய்யப்படவுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அவரை கைது செய்து விளக்க மறியலில் வைக்கும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குறித்த ஊடகம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய எதிர்வரும் 15ஆம் திகதி ஷிராந்தி ராஜபக்ஷ குற்ற விசாரணை திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டுள்ளதாகவும் அங்கு அவர் கைது செய்யப்படவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

றக்பி வீரர் வசீம் தாஜுடீன் கொலை வழக்கு தொடர்பிலேயே அவர் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார். இந்த வழக்கு தொடர்பில் யோஷித ராஜபக்ஷவும் விசா ரணைக்கு அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## போக்குவரத்து சமிக்ஞை விளக்கு குறியீடு

இனிப்பூட்டிய பானங்களில் அடங்கியுள்ள சீனியின் அளவை தெரிவிப்பதற்காக சிவப்பு, மஞ்சள், பச்சை நிறக் குறியீடுகள் போத்தலின் மூடியிலோ அன்றி லேபிளிலோ பொறிக்கப்பட்டிருக்கும்.

சிவப்பு- 100 மி.லீற்றர் பானத்தில் அடங்கியுள்ள சீனியின் அளவு, 11 கிராமுக்கு அதிகம் பாவிப்பதனை தவிர்த்தல் வேண்டும்.

மஞ்சள்- 100 மி.லீற்றர் பானத்தில் அடங்கியுள்ள சீனியின் அளவு 2 கிராமுக்கும் 11 கிராமுக்கும் இடைப்பட்டிருக்கும். நீரிழிவு நோய் ஏற்படுத்தும் அபாய நிலை உண்டு.

பச்சை- 100 மி.லீற்றர் பானத்தில் அடங்கியுள்ள சீனியின் அளவு 2 கிராமுக்கு குறைவாகும். நீரிழிவு நோய் அபாய நிலை குறைவு.

மென்பானங்கள் இனிப்பூட்டிய பானங்கள் சலரோக/ நீரிழிவு நோயையும் அதிக உடல் பருமனையும் ஏற்படுத்தும் என்பதனை நினைவிற்கொள்வோம்.

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகர சபை

## வரி மறுசீரமைப்பு குறித்து மக்களைக் கூடுதலாக தெளிவூட்ட வேண்டும்

### சர்வதேச நாணய நிதியம்

வரி மறுசீரமைப்பு குறித்து மக்களை கூடுதலாக தெளிவூட்ட வேண்டுமென சர்வதேச நாணய நிதியம் கோரியுள்ளது.

இலங்கையில் வரி மறுசீரமைப்பு தொடர்பில் மக்கள் தெளிவூட்டப்படுவது போதுமானதல்ல என தெரிவித்துள்ள சர்வதேச நாணய நிதியம், வரி மூலம் எதிர்காலத்தில் கிடைக்கக் கூடிய நலன்கள் பற்றி மக் களுக்கு தெளிவுபடுத்தப்பட வேண்டியது அவசியமானது என சுட்டிக்காட்டியுள்ளது.

இயற்கை அனர்த்தங்களினால் ஏற்பட்ட பாதிப்புக்களை ஈடு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமானது என தெரிவித்துள்ளது. (இ-7)

## உள்நாட்டு இறைவரிச் சட்டத்தை அமுல்படுத்த இடமளிக்கப்படாது

### ஜே.வி.பி.கடும் எதிர்ப்பு

உள்நாட்டு இறைவரிச் சட்டத்தை அமுல்படுத்த இடமளிக்கப்படாது என ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

புதிய உள்நாட்டு இறைவரிச் சட்டத்தை எந்தவொரு வழியிலும் பாராளுமன்றில் நிறைவேற்ற இடமளிக்கப்படாது என ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தச் சட்டத்தின் ஊடாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அரசியல் மயப்படுத்தப்படும் என அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பு மகாவலி கேந்திர. நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-7)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ அங்கே காமம் போக வசதி இரண்டும் ஆண் தெய்வமாகவும் பெண் தெய்வமாகவும் அமர்ந்து அரசாளும். பணம் பூசாரியாக,வஞ்சனையும் பலாத்காரமும் போட்டியும் கிரியைகளாக மனித ஆன்மாவே பலியாக அமையும். இத்தகைய நிகழ்ச்சி என்றும் நேராது. வருந்தும் ஆற்றல் தொழில்புரியும் ஆற்றலைவிட எண்ணிறைந்த அளவு மிக்கதாகும். அன்பின் ஆற்றல் பகையின் ஆற்றலைவிட எல்லையற்ற பெரும் சக்தி வாய்ந்ததாகும்.

❖ ஒவ்வோர் ஆன்மாவும் உன் நிறைந்த தெய்வத்தன்மையுடையது. அகத்தும் புறத்தும் உள்ள இயற்கையை அடக்குவதால் உள்ளடங்கிய இத் தெய்வத்தன்மையை வெளிப்படுத்துவதே இலட்சியமாகும்.

❖ செயலினாலோ பூஜையாலோ மன அடக்கத்தாலோ தத்துவ ஞானத்தாலோ இவைகளில் ஒன்றாலோ பலவற்றாலோ எல்லாவற்றாலுமோ இதனை இயற்றி விடுதலை அடைக.

❖ [illegible] கிரியைகளோ நூல்களோ கோயில்களோ உருவங்களோ [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17 வயது பிரிவினருக்கான கிரிக்கெட் சென்ஜோன்ஸ்- யாழ். மத்திய கல்லூரி

## இன்று பலப்பரீட்சை





யாழ்.மாவட்ட பாடசாலைக்கு இடையிலான 17 வயது பிரிவிற்கிடையிலான கிரிக்கெட் போட்டியின் இறுதி போட்டி சென்.பற்றீஸில் இன்று நடைபெறவுள்ளது. இப்போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியை எதிர்த்து சென்ஜோன்ஸ் கல்லூரி மோதவுள்ளது. (கு)

# மகாலிங்கம் ஞாபகார்த்த துடுப்பாட்டம் ஸ்ரீகாமாட்சியை வென்ற ஜொலிஸ்ரார்



மகாலிங்கம் ஞாபகார்த்தமாக யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கம் நடத்தும் 20-20 முறையிலான துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் லீக் ஆட்டத்தில் கொக்குவில் ஸ்ரீ காமாட்சி அணியுடனான முதலாவது போட்டியில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் ஆனது முதலாவது போட்டியினை பெரும் வெற்றியுடன் பதிவு செய்திருக்கிறது.

அண்மையில் நாணயச் சுழற்சியின் பின்னர் முதலாவதாக துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டு கழகம் 20 பந்துப் பரிமாற்றம் நிறைவில் 3 விக்கெட்களை இழந்து 205 ஓட்டங்களை குவித்தது. ஜொலிஸ்ரார் அணி சார்பாக துடுப்பாட்டத்தில் மதுசன் 86 ஓட்டங்களையும் சஜீகன் 59 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்று ஆட்டமிழந்தனர்.

பிரியதர்ஷன் ஆட்டமிழக்காமல் 36 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார். காமாட்சி அணி சார்பாக பந்து வீச்சில் மோகன்ராஜ் நான்கு ஓவர்களில் 26 ஓட்டங்களுக்கு இரு விக்கெட்களையும் தீபநாதன் நான்கு ஓவர்களில் 43 ஓட்டங்களை வாரி வழங்கி ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலளித்து 206 என்ற இமாலய வெற்றி இலக்கினை துரத்திய கொக்குவில் ஸ்ரீ காமாட்சி அணி சார்பாக துடுப்பாட்டத்தில் நிரூஜன் 41 ஓட்டங்களையும் மோகன்ராஜ் 32 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றனர்.

ஜொலிஸ்ரார் அணி சார்பாக பந்து வீச்சில் குகாணன் மூன்று ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டங்களுக்கு இரு விக்கெட்களையும் மதுசன் நான்கு ஓவர்களில் 28 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்களையும் ரொனி ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதன்மூலம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணியுடனான போட்டியில் கொக்குவில் ஸ்ரீ காமாட்சி அணியினர் 62 ஓட்டங்களால் படுதோல்வி அடைந்தனர். (கு)

# சென்.செபஸ்ரியன் வெற்றி





உடுத்துறை பாரதி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் (10.08.2017) அன்று நடைபெற்ற மூன்றாவது போட்டியில் உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து போட்டியிட்ட சென் செபஸ்ரியன் விளையாட்டுக்கழகம் 2:0 என்ற கோல்கணக்கில் வெற்றியை தமதாக்கியது. (க)

## சைக்கிளோட்ட போட்டிக்கு விண்ணப்பிக்குக

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 62ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு மின்னொளி விளையாட்டுக் கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான சைக்கிளோட்ட போட்டியானது இன்று 12.08. 2017 அன்று காலை 6.30 மணிக்கு நிலைய முன்றலில் ஆரம்பமாகும். தொடர்புகளுக்கு 077 498 5544 அழைக்கவும். (கு)

## சமநிலை தவிர்ப்பு உதையில்

# செந்தமிழ் விளையாட்டுக்கழகம் அரையிறுதிக்கு தகுதி பெற்றது





உடுத்துறை பாரதி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் (10.08.2017) அன்று இடம்பெற்ற முதலாவது காலிறுதிப்போட்டியில் செந்தமிழ் மற்றும் விளைபூமி விளையாட்டுக்கழகம் என்பன போட்டியிட்டன.

ஆரம்பம் முதலே விறுவிறுப்பாக நடைபெற்ற போட்டியில் செந்தமிழ் விளையாட்டுக்கழகத்தின் ஆதிக்கம் அதிகமாக காணப்பட்ட போதிலும் கோல் போடும் சந்தர்ப்பங்களை நழுவ விட்டனர்.

இதனை சாதகமாக பயன்படுத்திய விளைபூமி விளையாட்டுக்கழகம் தமக்கு கிடைக்கப்பெற்ற தண்ட உதை மூலமான சந்தர்ப்பத்தை கோலாக மாற்றியது.

போட்டியில் திடீரென ஏற்பட்ட திருப்பு முனையின் பின்னர் செந்தமிழ் வீரர்களது ஆதிக்கம் மேலும் அதிகரிக்க தமக்கு கிடைக்கப்பெற்ற சந்தர்ப்பமொன்றை மிக சாதுரியமாக கோலாக மாற்றினர்.

இறுதியில் 1:1என்ற கோல் கணக்கில் போட்டி சமநிலையில் நிறைவுபெற சமநிலை தவிர்ப்பு உதைமூலம் போட்டி முடிவு தீர்மானிக்கப்பட்டது.

மீண்டும் விறுவிறுப்புக்கு பஞ்சமிருக்கவில்லை. முதலில் இரு அணிசார்பிலும் நான்கு வீரர்கள் கோலினை போட்டனர். ஐந்தாவதாக விளைபூமி சார்பில் அடித்த பந்தினை கோல்காப்பாளர் லாவகமாக தடுத்திருந்தார். தொடர்ந்து ஐந்தாவதாக செந்தமிழ் சார்பில் கோல் போடப்பட ஈற்றில் 5:4 என்ற கோல் கணக்கில் செந்தமிழ் வெற்றியீட்டி அரையிறுதிக்கு தகுதி பெற்றது. (க)

## திக்கம் சனசமூக நிலைய

# வைரவிழா கால்பந்தாட்டம்; தம்பாட்டி காந்திஜி வெற்றி



திக்கம் சனசமூக நிலையம் தனது வைரவிழாவை முன்னிட்டு நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் இடம்பெற்றஆட்டமொன்றில்வேலணை தம்பாட்டி காந்திஜி அணி வெற்றி பெற்றது.

குறித்த சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் வேலணை தம்பாட்டி காந்திஜி அணியை எதிர்த்து கரவெட்டி நவசக்தி அணி மோதியது.

முதல்பாதியாட்டத்தில் ஆதிக்கம் செலுத்திய வேலணை தம்பாட்டி காந்திஜி அணி, யோகதீபனின் உதவியுடன் 10ஆவது நிமிடத்திலும், கங்காதரன் உதவியுடன் 29 ஆவது நிமிடத்திலும் அடுத்தடுத்து கோல்களைப் பதிவு செய்தது.

வேறெந்த மாற்றங்களும் ஏற்படவில்லை. முதல் பாதியின் முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் ஆதிக்கம் செலுத்தியது காந்திஜி அணி. இரண்டாம் பாதியில் மாற்றங்கள் ஏற்படவில்லை. முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது காந்திஜி அணி. (க)

# சென்பிலிப்பினேரிஸ்சை வீழ்த்தி திருநகர் அணி வெற்றி





உடுத்துறை பாரதி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் (10.08.2017) அன்று நடைபெற்ற இரண்டாவது போட்டியில் திருநகர் அணியும் சென்பிலிப் பினேரிஸ் அணியும் மோதி இறுதியில் திருநகர் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைதான 35...

மராட்சி குடத்தனைப் பகுதியில் சட்டவிரோத மணல் ஏற்றி வந்த ஹன்டர் வாகனம் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் பலியானார்.

இதனையடுத்து பொலிஸ் ஜீப் வண்டியொன்று சேதமாக்கப்பட்டதுடன் பொலிஸ் காவலரண் ஒன்றும் சேதமாக்கப்பட்டது.

மேலும் விசேட அதிரடிப் படையினரின் பவள் கவச வாகனம் ஒன்றும் கல்வீச்சுத் தாக்குதலுக்கு இலக்கானது.

இதனைவிட வல்லிபுரம் மாவடிச்சந்திப் பகுதியில் வைத்து கடற்படையினர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதன் அடிப்படையில் விசாரணை மேற்கொண்டு வந்த பொலிஸார் சிலரை சந்தேகத்தில் கைது செய்தனர்.

மேலும் சந்தேகநபர்களைக் கைது செய்ய வேண்டி இருந்தமையால் விசேட அதிரடிப் படையினர் களமிறக்கப்பட்டு சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 35 சந்தேகநபர்களும் நேற்று பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (செ-60)

## விபத்தில் சிக்...

மேற்படி விபத்துச் சம்பவம் கடந்த 4ஆம் திகதி கிளிநொச்சி சாந்தபுரம் 12ஆம் ஒழுங்கையில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த யோகராசா பிரிந்தா (வயது 3 1/2) என்ற குழந்தையே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

காயமடைந்த குழந்தை கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளது.

இது தொடர்பான விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்த நிலையில், குழந்தையின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (செ-30)

## 30 கிலோ கஞ்...

பனைக்காக குறித்த 3 நபர்களும் கொண்டு செல்லும் போது மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் பின்னர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை ...ம் கைப்பற்றப்பட்ட கஞ்சா தொகையும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (செ-11)

## 89 பவுண் நகை...

கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் பொய் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. இது மிகவும் திட்டமிடப்பட்ட பொய் முறைப்பாடு என கண்டறியப்பட்டுள்ளதாக கொடிகாமம் பொலிஸாரின் இறுதி விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 7-ம் திகதி திங்கட்கிழமை வரணி பகுதியில் உள்ள வீடொன்றில் இரவு 8 மணியளவில் நுழைந்த திருடர்கள் சுமார் 51 இலட்சம் பெறுமதியான 89 பவுண் நகைகளை கொள்ளையிட்டுச் சென்றதாக கனடா நாட்டில் இருந்து வந்திருந்த தம்பதிகளால் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் அடுத்தநாள் முறையிடப்பட்டிருந்தது.

இதன்போது வீட்டிலிருந்த இரண்டு பெண்களில் கனடா நாட்டிலிருந்து வந்திருந்த பெண்ணின் நகைகள் மட்டுமே திருடப்பட்டிருந்ததாகவும் வீட்டிற்குள் நுழைந்த இரண்டு திருடர்கள் கத்தியைக் கழுத்தில் வைத்து அச்சுறுத்தியே கொள்ளையில் ஈடுபட்டிருந்ததாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாடு தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஐ.பீ. எதிரிசிங்க தலைமையில் தொடர் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன் பொலிஸாருக்கு விரைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் உயர்மட்டத்திலிருந்து பாரிய அழுத்தம் பிரயோகிக்கப்பட்டுள்ளது.

இத்தொடர் விசாரணைக்ளின் போது முறைப்பாடு தொடர்பாக 6 பேரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. விசாரணைகள் அனைத்தும் நிறைவு செய்யப்பட்டு இறுதி விசாரணை அறிக்கை நீதிமன்றத்தில் எதிர்வரும் 16-ம் திகதி தாக்கல் செய்யப்படவுள்ளது.

இதன்போது விசாரணையின் அடிப்படையில் நகைகள் கொள்ளையிடப்படவில்லை என்பதால் பொய் முறைப்பாடு வழங்கிய கனடா நாட்டில் இருந்து வருகை தந்த தம்பதிகளை நீதிமன்றில் ஆஜராகுமாறும் கொடிகாமம் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்துகின்ற செயல். வெளிநாடுகளில் இருந்து வருகின்றவர்கள் இவ்வாறு பொய் முறைப்பாட்டினை பதிவு செய்து காப்புறுதிப் பணத்தினை பெற்றுக்கொள்ள முயற்சிக்கக் கூடாது. பொய் முறைப்பாடு செய்தவர்களை நீதிமன்ற உத்தரவின்றி மேலதிக நடவடிக்கைக்கு உட்படுத்த முடியாது.

எனினும் நீதிமன்ற அறிவுறுத்தலுக்கமைய இவ்வாறானவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என கொடிகாமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார். (செ-89)

## விசாரணை அதி...

சில அதிகாரிகள் சதித்திட்டம் தீட்டியுள்ளதாகவும் அந்நபர் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் மன்றுக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை,2008 ஆம் ஆண்டு வெள்ளை வானில் கொழும்பு உள்ளிட்ட சில பகுதிகளில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு பின்னர் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்ட முன்னாள் கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் டி.கே.பி தசநாயக்க உள்ளிட்ட ஆறு சந்தேகநபர்களையும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் லங்கா ஜயரத்ன நேற்று உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கடற்படை உத்தியோகத்தர்களால் கொலை செய்ய சதித்திட்டம் தீட்டப்பட்டுள்ள விசாரணை அதிகாரி நிசாந்த சில்வா, மாணவி வித்தியா படுகொலை வழக்கின் 35 ஆவது சாட்சியாளராவார்.

கடந்த 2 ஆம் திகதி பதிவு செய்யப்பட்ட நீதிமன்ற சாட்சியளிப்பின் பின்னர் வழக்கின் 35 ஆவது சாட்சியாளரான விசாரணை அதிகாரி நிசாந்த சில்வாவை நீதிமன்ற விசாரணைகளில் இருந்து விடுவிப்பதாக மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் அறிவித்தமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

## கோத்தாவுக்கு...

ஆணைக் குழு, கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கொன்று நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அவன்கார்ட் மெரிடைம் சேர்விஸ் நிறுவனம் அதிக இலாபம் கிடைக்கும் வகையில் மிதக்கும் ஆயுத களஞ்சியம் ஒன்றை நடத்தி செல்ல இடமளித்ததன் மூலம் அரசுக்கு 11.4 பில்லியன் நஷ்டத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது.

குற்றம் சுமத்தப்பட்ட தரப்பில் அடிப்படை எதிர்ப்பு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேலும், இது சம்பந்தமான தீர்ப்பு எதிர்வரும் நவம்பர் மாதம் 17 ஆம் திகதி அறிவிக்கப்படும் என மேலதிக நீதவான் புத்திக ஸ்ரீ ராகல தெரிவித்துள்ளார். (செ-11)

## வவுனியாவில்...

அடிப்படையிலும் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

நேற்று மாலை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

வவுனியா, தேக்கவத்தை பகுதியில் உள்ள ஒழுங்கை ஒன்றில் வசிக்கும் இரும்பு வேலை செய்யும் 25 வயதுடைய குடும்பஸ்தரே இவ்வாறு சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான நபரது வீட்டில் இருந்து வில்லுத் தகடுகள் மீட்கப்பட்டுள்ளதுடன் 21.5 அங்குலமுடைய வாளொன்றும் மீட்கப்பட்டுள்ளது. இவர் யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியாவிற்கு வந்து தொழில் புரிந்து வந்த நிலையில் ஆவா குழுவுடன் தொடர்பு என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை நேற்று வவுனியா வைரவ புளியங்குளம் பகுதியில் மாணவ குழுக்களுக்கிடையில் மோதல் சம்பவமொன்று இடம்பெற்ற நிலையில் ஒரு மாணவனுக்கு சிறிய ரக கத்தியால் மற்றைய மாணவன் வெட்டியதில் காயமடைந்த மாணவன் ஒருவன் வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-250)

## நோர்வே தூது...

இடம்பெற்றது.இந்தச் சந்திப்பு நாடாளுமன்றத்தில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடந்துள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் சந்திப்பில் கலந்து கொண்டார். (செ-11)

## கிணற்றில் மூழ்கி...

புரியை சேர்ந்த கே.புவிராஜ் (வயது 15) ஆகிய இருவருமே, இவ்வாறு கிணற்றில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

நண்பர்களான மேற்படி இருவரும் நேற்று பகல், ஆனந்தபுரியிலுள்ள பொதுக்கிணற்றில் குளிப்பதற்காகச் சென்றபோதே, நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இருவரின் சடலங்களும் பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பில், உப்புவெளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)

## புதிதாக புத்தர்...

அடாத்தாக அமைத்துள்ளனர்.

வழிபாட்டு தலங்கள் அமைக்கப்படும் போது உள்ளூராட்சி திணைக்களங்களில் அனுமதி பெறப்பட வேண்டும் என்பது இலங்கையின் சட்டமாகும். ஆனால் இந்த நடைமுறை குறித்த புத்தர் சிலை அமைக்கப்பட்டதில் பின்பற்றப்படவில்லை என உள்ளூராட்சி திணைக்கள அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

பருத்தித்துறை துறைமுகம் அருகாமையில் உள்ள வைரவ கோவிலிற்கு பக்கத்தில் உள்ள ஆலமரத்தின் கீழ் சிறிதாக புத்தர் சிலை ஒன்று கடந்த 2010 ஆம் ஆண்டளவில் இராணுவத்தினரால் வைக்கப்பட்டிருந்தது.

இந்த சிலை சிறிய இடத்தில் வைக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த ஒரு மாதத்திற்கு முன்னதாக இராணுவத்தினரால் குறித்த புத்தர் சிலை இருந்த இடம் விஸ்தரிக்கப்பட்டு தற்போது புதிதாக புத்த கோவில் போன்ற அமைப்பில் புத்தர் சிலையுடனான கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் இதற்கு அருகில் முன்னரங்கம் ஒன்று அமைக்கப்பட்டு இராணுவத்தினர் கண்காணிப்பிலும் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் யுத்தத்திற்கு முன்பிருந்தே அப்பகுதியில் நிரந்தரமாக உள்ள இந்து கோவிலுக்கு நடத்தப்பட்டு வந்த பூஜை வழிபாடுகள் மற்றும் பொங்கல் நிகழ்வுகளை நடத்துவதற்கு தேவையான இடவசதி போதாமையாக உள்ளதாக கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு இந்த கோவிலுக்கு அருகாமையில் பாரிய படை முகாம் ஒன்று காணப்படுவதோடு, படையினரால் உணவகம் ஒன்றும் நடத்தப்பட்டு வருகின்றது.

இதேவேளை பருத்தித்துறை முனை பகுதியிலும் தனியார் காணி ஒன்றில் புத்தர் சிலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த புத்தர் சிலை அமைக்கப்பட்டு நீண்டகாலமானநிலையில், அதுவும் படிப்படியாக விஸ்தரிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஆலமரங்கள் காணப்படும் இடங்களில் இந்து கோவில்கள் காணப்பட்டாலும் அதனை மறைத்து புத்த கோவில்களை அமைக்கும் முயற்சிகளில் இராணுவத்தினர் இறங்கியுள்ளமை அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. (செ-4)

## எனது சுதந்திரம்...

அண்மையில் கொழும்பில் நடந்த நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

என்னால் எந்தவொரு நாட்டுக்கும் செல்ல முடியவில்லை. ஏனென்றால் அனைத்துலக மற்றும் புலம்பெயர் சக்திகள் என் மீது குற்றச்சாட்டுகளை முன்வைக்க காத்திருக்கின்றன.

பல நாடுகளில் எனது தலைமையிலான குழுவினர் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டது.

2011ஆம் ஆண்டு கொமன்வெல்த் மாநாட்டுக்காக, அவுஸ்ரேலியா சென்றிருந்த போது, புலம்பெயர் தமிழர்களில் சிலர் தமது பிள்ளைகளை என்னால் இழக்க நேரிட்டதாக கூறி, சிலர் என்னைக் கைது செய்யுமாறு கோரினர்.

நான் பிரித்தானியா சென்றிருந்த போது, எனது குழுவில் இருந்தவர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய முயன்றனர்.

அமெரிக்கா சென்றபோது எனக்கு எதிராக சிலர் நீதிமன்றம் சென்றனர். எனினும் இந்தச் சம்பவங்கள் தொடர்பாக நான் முறையிடவில்லை. ஆனால் மிகுந்த அசௌகரியப்படுகின்றேன்.

நாடும் மக்களும் சுதந்திரத்தைப் பெற்றுள்ள போதிலும், அதன் நன்மைகள் எனக்குக் கிடைக்கவில்லை.

போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது தான் நல்லிணக்கம். இன்று நல்லிணக்கத்தின் பெயரால், சிலர் நாட்டைப் பிளவுபடுத்தப் பார்க்கிறார்கள் என்றும் மகிந்த தனது உரையில் தெரிவித்துள்ளார். (செ-11)

## சர்வதேச வர்த்த...





மைத்ரிபால சிறிசேனவின் தலைமையில் நேற்று கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த கண்காட்சியில் உரிய துறைசார்ந்த சர்வதேச நிறுவனங்களின் பிரதிநிதிகளை சந்தித்து கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வெளிநாட்டு உற்பத்தியாளர்களினதும், சந்தைப்படுத்துநர்களினதும் தேவைகளை இனங்கண்டுகொள்வதற்கும், புதிய தொழில்நுட்ப வசதிகளை அறிந்துகொள்வதற்கும் அதனூடாக தேசிய உற்பத்திகளின் தரத்தினை மேம்படுத்தவும் சந்தர்ப்பம் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உற்பத்தியாளர்கள், சந்தைப்படுத்துநர்கள், கொள்வனவாளர்கள் மற்றும் பெருந்தொகையான முதலீட்டாளர்கள் இக்கண்காட்சியில் இணைந்துகொண்டிருந்தனர். இவ்வருடம் இக்கண்காட்சி இலங்கையில் நடைபெறுவதனூடாக இலங்கையின் பெருந்தோட்டக் கைத்தொழிற்துறை உற்பத்திகளை பல புதிய பரிணாமங்களின் ஊடாக வெளிநாட்டு சந்தைக்கு வழங்குவதற்கான வாய்ப்பும் கிடைக்கப்பெற்றுள்ளது.

கண்காட்சியை திறந்துவைத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதனைப் பார்வையிட்டதுடன், வர்த்தகர்களுடனும் உரையாடியிருந்தார். அமைச்சர் நவீன் திஸாநாயக்க, பிரதி அமைச்சர் லக்ஷ்மன் வசந்த பெரேரா உள்ளிட்டோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
070 330 5500
அண்ணா அன் கோ
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் annalk.com
(C-9290)
கனடாவுக்கு (Canada) மிகக் குறைந்த கட்டணத்தில் கப்பல் ஊடாக அனுப்பிடவும்
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும் நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.
யாழ்ப்பாணம் | ஊர்காவத்துறை | சாவகச்சேரி | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மல்லாவி | வவுனியா | திருகோணமலை

Architectural CAD Centre
Personal & Group Classes
SPEED BATCH IN Auto CAD
Lecture by:K.N.Mugunthan(D/A)
Cert.in Auto CAD(2D & 3D Drawing)
University of Peradeniya
Cert.in Auto CAD(Advance 3D-Modeling)
University of Moratuwa
Sat.Day Sun Day
Link:071 8217972,077 5116320
(C-9311)

## தேவை
Type Setting தெரிந்தவர்கள் மற்றும் Corel Draw மூலம் பரீட்சை வினாத்தாள்கள் Type Setting செய்வதில் அனுபவமுள்ளவர்கள் தேவை.
தொடர்பு : 077 691 2784, 077 775 0678
(109)

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
● மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
● விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
● எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு
UK - 550/= (C-9275)
கப்பல் மூலம் கனடாவிற்குப்பொதிகள் அனுப்ப
CANADA - 400/= மட்டுமே
(நிபந்தனைக்குட்பட்டது)
V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● சாவகச்சேரி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

அறிவுபூர்வமான முதலீடு - வளமான எதிர்காலம்
யாழ் - முதலீட்டாளர் கருத்துக்களம்
Aug.26 (Saturday) @ 9.30am
@Tilko City Hotel
முன்பதிவு : Call & SMS to 0777822014
(C-9287)
CSE COLOMBO STOCK EXCHANGE

Group Class / Personal Class
A/L இரசாயனவியல்
A/L 2019 - இரசாயன கணித்தல்கள்
A/L 2018 - சேதன இரசாயனம்
சிவசக்தி B.Sc, M.Sc
A/L பௌதிகவியல்
ரமணன்
B.Sc, M.Sc in Physics
A/L 2019 - நீர் நிலையியல்
A/L 2018 - ஓட்ட மின்னியல்
(C-9316)
இடம் : கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு அருகாமை, கோண்டாவில் (நிரு ரியூசன் சென்ரர்)
076 421 9117

## விற்பனைக்கு
நல்லின பசு மாடுகள் இரண்டு சினைப் பட்டவை விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 528 3375
(111)

## விற்பனைக்கு
புதிய I Phone 4S - 12000, மற்றும் I Phone 5S,6,6S பாவித்த Laptops - 8000 விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 077 717 2325
www.iway.lk
(112)

## சி.சி.ரிவி...

பதிவாகியுள்ளது.

நேற்று பிற்பகல் 1.28 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, குருமன்காடு சந்திப் பகுதியில் அமைந்துள்ள கடை ஒன்றுக்கு சிவில் உடையில் வந்த பொலிஸார் ஒருவர் தனது மோட்டார் சைக்கிளை குறித்த கடையின் முன்னால் நிறுத்தி விட்டு பொருட்களை கொள்வனவு செய்து கொண்டிருந்த போது குறித்த இடத்தில் நிறுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் காணாமல் போயிருந்தது.

இதனையடுத்து அப்பகுதியில் உள்ள கடையில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரிவி கண்காணிப்புக் கமராவை பரிசோதித்த போது நபரொருவர் குறித்த மோட்டார் சைக்கிளை ஹெல்மட் இன்றி மன்னார் வீதி வழியாக செலுத்திச் செல்கின்றமை பதிவாகியுள்ளது. இதனை அடிப்படையாக வைத்து வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்கள். (செ-250)

V2 TRAVELS
PASSPORT
வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு இலங்கை வீசா நீடிப்பு யாழ்ப்பாணத்திலேயே செய்து கொடுக்கப்படும்.
VISA EXTENSION
FOR FOREIGN PASSPORT
(வீசா எக்ஸ்ரென்சன்)
(C-9317)
0768227499
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● சாவகச்சேரி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

TECHNO WORLD
A/L தொழில்நுட்பபிரிவு 2018, 2019
பொறியியல் தொழில்நுட்பம் (E-Tec)
2019 - Auto Mobile 2018 - Paper Class
அருண்குமார்
(யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி)
SFT 2019 A/L - விசை
2018 A/L - நீர் நிலையியல்
ராகவன் (மானிப்பாய் இந்துக்கல்லூரி)
ஆரம்பம் : 12.08.2017 மாலை 3.00 மணி
இடம் : பெருமாள் கோவில் வீதி, வெலிங்டன்சந்தி அருகாமை (புதிய லிங்கம் கூல்பார் அருகாமை) குளப்பிட்டிச் சந்தி அருகாமை.
(C-9316)
077 017 5346

## விசாரணை அதிகா...

ஜயரத்ன முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட பிறிதொரு வழக்கினூடாக இந்த விடயம் அறிவிக்கப்பட்டுள்ளது.

வித்தியா படுகொலை மற்றும் 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை உள்ளிட்ட பல வழக்குகளின் விசாரணை அதிகாரியாக நிசாந்த சில்வா செயற்படுகின்றார்.

இந்நிலையில் 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள கடற்படை அதிகாரிகளால் நிசாந்த சில்வாவை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டப்பட்டுள்ளதாக நீதி மன்றத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள கடற்படை அதிகாரிகள் நிசாந்தவை கொலை செய்வதற்கான சதித்திட்டத்தைத் தீட்டியுள்ளதாக பிறிதொரு வழக்கில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர் ஒருவர் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

வெள்ளவத்தை பகுதியைச் சேர்ந்த ராமையா கனகேஸ்வரன் என்பவரே இந்த விடயம் தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு அறிவித்துள்ளார். விசாரணை அதிகாரியான நிசாந்த சில்வாவினால் தொந்தரவுகள் அதிகரித்துள்ளதாகவும் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டமை தொடர்பில் இதுவரை கைது செய்யப்படாதவர்களூடாக நிசாந்தவைக் கொலை செய்வதற்கு கடற்படையை சேர்ந்த 23☛

உங்கள் குடும்பத்துடன் படித்து மகிழ ... பயனடைய ...

# உடுவை தில்லையின் நூல்கள்...

## "அப்பா" , "அப்பக் கடை நடக்கிறது","கல்யாணம் முடித்துப்பார்","மகே அப்பச்சி","பிரேம சாரிகாவ"




முதலில் தமிழ் நூலாக வெளிவந்த போது இந்திய ஜனாதிபதி அப்துல் கலாமின் பாராட்டுப் பெற்று - பின் சிங்கள மொழி மாற்றம் செய்த பின் சிங்களவரும் விரும்பி வாசிக்கும் நூலான **"அப்பா"**

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் எழுந்த கதைகள் உட்பட அந்தக்கால யாழ்ப்பாண - கொழும்பு வாழ்க்கையைச் சித்திரிக்கும் கதைகள்

**"அப்பக் கடை நடக்கிறது."**

என்றும் நினைக்க நினைக்க சிரிப்பைத் தரும் கதைகள் கவலையை மறக்க வைக்கும் சிரிப்புக் கதைகள்

**"கல்யாணம் முடித்துப்பார்"**



முன்னாள் வவுனியா - கிளிநொச்சி அரசாங்க அதிபர், கல்வி அமைச்சு மேலதிக செயலாளர் **உடுவை தில்லைநடராசா** எழுதிய நூல்கள் கிடைக்குமிடங்கள் -

ஹரன்ஸ் சென்ரர் - இல. 204 பூந்தோட்டம். வவுனியா, கிருபாஸ் - இல.185, மன்னார் வீதி, வவுனியா, சுத்தானந்த விலாஸ் உயர்தர சைவ உணவகம் - 16, பசார்வீதி, வவுனியா, K.P.K.சென்ரர், இல. 24, பஸ் நிலையம் வவுனியா, J.P.K.சொப்பிங் கொம்பிளக்ஸ் - இல. 144, 146 பசார் வீதி, வவுனியா, சைவ உணவகம் - திஸ்ஸ வீதி, கதிர்காமம் இந்து யாத்திரிகர் விடுதி அருகில், ஜி.கே.ரி என்ர பிரைசஸ் - இல. 23, 42ஆம் ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு. களஞ்சியம் சுப்பர் - 134 ஏ காலி வீதி, வெள்ளவத்தை (பஸ் தரிப்பிட முன்பாக), விஜய என்ரபிரைசஸ் - இல. 288 ஏ, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு.

ஸ்ரீலங்கா புத்தகசாலை - இல. 234, கே.கே.எஸ். வீதி யாழ்ப்பாணம், ஸ்ரீ லங்கா புத்தகசாலை - நல்லூர்,பூபாலசிங்கம் புத்தகசாலை - நல்லூர், வின்லாண்ட் புத்தகசாலை - இல. 61, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். நல்லை புத்தக நிலையம் - இல 50, பருத்தித்துறை வீதி, நல்லூர், துர்க்கா புத்தக சாலை - பஸ் நிலையம், சுன்னாகம்.சித்தி விநாயகர் புத்தகசாலை - கே.கே. எஸ்.வீதி சுன்னாகம், ஸ்ரீகரன் புத்தகசாலை - சுன்னாகம்,எம்.பி.தர்மலிங்கம், நியூஸ் ஏஜண்ட் - வதிரி வீதி,உடுப்பிட்டி, சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை - யாழ்.வீதி, நெல்லியடி.சந்நிதி முருகன் உணவகம், சந்நிதி ஆலய முன்பாக, தொண்டைமானாறு, கலைமகள் மல்றீறி சென்ரர் - இல.420 ஹொரவப்பொத்தன வீதி இறம்பைக்குளம், வவுனியா.

நூல்களை விநியோகிக்க விரும்புவோர் தொடர்பு கொள்ளலாம் - யாழ்ப்பாணம் ----- சுதா -------- தொலைபேசி 0775821041 > மின்னஞ்சல் - suthaharan 77@gmail.com
வவுனியா --------- ராஜா -------- தொலைபேசி 0776295396 > மின்னஞ்சல் nagarajahmanju@gmail.com
கிளிநொச்சி - முல்லைத்தீவு - மோகன் --------- தொலைபேசி --------- 0774710130 > மின்னஞ்சல் mohanarasa555@gmail.com
ஏனைய இடங்கள் - உடுவை ----- தொலைபேசி 0718676498 > மின்னஞ்சல் uduvai@gmail.com
(C-9300)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, [illegible] அவர்களது அச்சகத்தில் 12.08.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org